விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆவணி 22 வெள்ளிக்கிழமை (07.09.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 262

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

### கடத்தல், காணாமல்போகச் செய்தல் தொடர்பில்

# குற்றஞ்சாட்டப்பட்டுள்ள

# படை அதிகாரிகளை

# பணியிலிருந்து நிறுத்துக

### காணாமல் போனோர் அலுவலகம் பரிந்துரை

(கொழும்பு) ஆட்கடத்தல் மற்றும் காணாமல்போகச் செய்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டை எதிர்கொண்டுள்ள ஆயுதப்படையினர் மற்றும் பொலிஸாரை பணியிலிருந்து இடை நிறுத்துமாறு காணாமல் போனோருக்கான அலுவலகம் பரிந்துரை செய்துள்ளது. காணாமல் போனோருக்கான அலுவலகம் சமர்ப்பித்துள்ள இடைக்கால அறிக்கையிலேயே இந்த பரிந்துரை இடம்பெற்றுள்ளது. (23-ம் பக்கம் பார்க்க...)

### ராஜீவ் காந்தி கொலை வழக்கு

## பேரறிவாளன் உள்ளிட்ட ஏழு பேரின் விடுதலைக்கு தமிழக ஆளுநருக்கு அதிகாரம்

உச்ச நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு 12

## காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்ப உறுப்பினர்களுக்கு

### பாலியல் ரீதியில் துன்புறுத்தல்கள்

(கொழும்பு)

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் முறைப்பாடுகளை வழங்கிய பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பெண் உறுப்பினர்கள் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களுக்கும் தாக்குதல்களுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளனர். அத்துடன், பலர் கப்பம் பெறுவோரின் தொந்தரவுகளுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு காணாமற் போனோர் அலுவல 23

### 150 கோடி ரூபாய் பெறுமதியான

## 15 மில்லியன் போதை மாத்திரைகள் மீட்பு

(கொழும்பு)

சுமார் 150 கோடி ரூபாய் பெறுமதியான ஒரு கோடியே 50 இலட்சத்திற்கும் அதிகமான போதைப்பொருள் வில்லைகள் கொழும்புத் துறைமுகத்தில் கைப்பற்றப்பட்டுள்ளன.

கொழும்பு துறைமுகத்திலிருந்த கொள்கலன் 23

## யாழ். கல்வியங்காட்டு பகுதியில் வாள்வெட்டுக்குழு தாக்குதல்

### தந்தை, மகன் உட்பட மூவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டு பகுதியில் வாள்வெட்டு குழுவினர் மேற்கொண்ட தாக்குதலில் தந்தை, மகன் உட்பட மூவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், வீடு மற்றும் உடமைகள் என்பன சேதமாக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் கல்வியங்காடு ஆடியபாதம் வீதியில் உள்ள இரு வீடுகளுக்குள் நேற்று அதிகாலை நுழைந்த வாள்வெட்டு குழுவினர் வீடுகளை சேதப்படுத்தியதுடன், வீட்டில் நின்றிருந்த மோட்டார் சைக்கிள் மற்றும் ஏனைய உடமைகளை இரும்புக்கம்பி 24

### நல்லூர் ஆலயச் சூழலில் உள்ள கடைகளில்

## வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள சிறுவர்களை உடனே நிறுத்துக

### சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலய சூழலில் உள்ள கடைகளில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள சிறுவர்களை உடனடியாக வேலையில் இருந்து நிறுத்துமாறு யாழ்.பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வர்ண ஜெயசுந்தர உத்தரவிட்டுள்ளார்.

நல்லூர் கந்தசுவாமி ஆலய மகோற்சவம் நடைபெற்று வரும் நிலையில் நல்லூர் ஆலய சூழலில் அமைக்கப்பட்டுள்ள வியாபார நிலையங்களில் சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளதாக 23

### வல்லைப் பகுதியில்

## ஹெரோயினுடன் இருவர் கைது

(கரணவாய்)

வடமராட்சி வல்லைப்பகுதியில் ஹெரோயின் போதைப்பொருள்களுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை மதியம் வல்வெட்டித்துறை பொலிஸாரிற்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து வல்லைச் சந்திப் பகுதியில் பொலிஸார் விசேட 23

## 2–வது ஜனபல மக்கள் போராட்டம் கண்டியில்

### மகிந்த அணி அறிவிப்பு

(கொழும்பு)

இரண்டாவது ஜனபல மக்கள் சக்தி போராட்டம் கண்டியில் நடைபெறும் என ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். 23

## தமிழ் மக்களின் ஒற்றுமைக்காக தேர்தலில் மோதிக்கொள்ளக் கூடாது

### நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்



(கொழும்பு)

தமிழ் மக்களின் ஒற்றுமையை சீர்குலைக்காமல் இருக்க தேர்தலில் முதலமைச்சர் விக்னேஸ்வரனுடன் நாங்கள் மோதிக் கொள்ளக்கூடாது என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். கொழும்பு ஊடகம் ஒன்றில் நேற்று முன் 23

## கடத்தப்பட்ட குடும்பஸ்தர் சில மணி நேரத்தில் மீட்பு

### யாழ்ப்பாண பொலிஸார் அதிரடி

(யாழ்ப்பாணம்)

பணம் கொடுக்கல் வாங்கல் காரணமாக கடத்தப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் சிலமணி நேரங்களில் பொலிஸாரால் மீட்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

குறித்த நபரை கடத்திச்சென்றதாக சந்தேக நபர் ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக தெரியவருகையில். யாழ்ப்பாணம் தாராக்குளத்தை சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான 28 வயதுடைய நபர் ஒருவர் யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்கு தெருவில் உள்ள வீடு 23

## பிரச்சினைகளை எதிர்கொண்டு நாடு முன்னோக்கி பயணம்

### பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



(கொழும்பு)

அனைத்து பிரச்சினைகளையும் எதிர்கொண்டு நாடு முன்னோக்கி பயணிக்கிறது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் 2015-ம் ஆண்டில் 23

## காணாமல் ஆக்கப்பட்டோருக்கு வலுவான சட்டம் அரசாங்கம் உருவாக்க வேண்டும்

### இடைக்கால அறிக்கையில் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான சட்டத்தை வலுவாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகம் தெரிவித்துள்ளது.

அதன் இடைக்கால அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான நீதி மற்றும் பொறுப்பு கூறலுக்கான அவசர தேவைகளை புரிந்து கொண்டு தகுதியானதும் வினைத்திறனானதுமான விசாரணைகள் வழக்கு தொடரும் செயன்முறையை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இதற்காக காணாமல் ஆக்கப்படுதலின் தொடர்ச்சியை 23

# காணாமல் போனோரின் குடும்பங்களுக்கு இடைக்கால நிதி இழப்பீடு

காணாமற்போனோரினதும், கண்டு பிடிக்க முடியாதவர்களினதும் குடும்பங்களினதும் தற்போதைய சமூக பொருளாதார நிலைமை மிகவும் கவலைக்கிடமானது. இறுதியான இழப்பீடு பற்றிய வழிமுறையை ஆரம்பிக்கும்வரையும் அவர்களால் எவ்வகையிலும் பொறுத்துக்கொள்ள முடியாத நிலையே உள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டோர், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் இராணுவ நடவடிக்கைகளின்போது காணாமற்போனோரின் குடும்பங்களுக்காக அவசரமான மற்றும் அண்மித்த நிவாரணங்களாக இடைக்கால நிவாரணங்களை வழங்க வேண்டியது அத்தியாவசியமாகும்

இவ்வாறு காணாமற்போனோர் அலுவலகத்தின் இடைக்கால அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ம)





வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## நிறஞ்சன் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, உடுப்பிட்டி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில்
**வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.** **நிறஞ்சன் நகைமாடம்** தொடர்பு:
**சந்தை வீதி, உடுப்பிட்டி. 0763836129** (5595)



## அறை வாடகைக்கு

நாவலர் றோட் நல்லூரில் இரு அறைகள் வாடகைக்கு உண்டு.

T.P:0762160099 (5596)


## தேர்தலை நடத்தவும் -நாமல்

கூட்டு எதிர்க் கட்சியின் நேற்றைய மகள் எழுச்சிப் பேரணி வெற்றியளித்துள்ளதாகவும், இதனால் அரசாங்கத்துக்கு மக்கள் வழங்கிய ஆணையை உடனடியாக நிறைவேற்ற முன் வருமாறும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல்ராஜ பக்ஷ வேண்டுகோள் விடுத்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று பத்தரமுல் லையிலுள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனைக் கூறினார்.

நேற்றுமுன் தினம் நடைபெற்ற பேரணியில் இரண்டு இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் கலந்துகொண்டனர். தாம் நடத்திய பேரணி முழு அளவில் வெற்றியடைந்துள்ளது. அதன் மூலம் மக்கள் வழங்கியுள்ள செய்தியை அரசாங்கம் கேளிக்கையாகக் கொள்ளக் கூடாது. உடனடியாக பொதுத் தேர்தலை நடத்துமாறும் அவர் தெரிவித்தார். (ம)

## சேவை நலன் பாராட்டு விழா




திருமதி
### இரத்தினசிங்கம் பரிமளம் (ஆசிரியர்)
(BA, PGDE, SLTS-I)

அதிபரின் வாழ்த்துச் செய்தி
**மணிவிழா நாயகியை வாழ்த்தி மகிழ்வோம்.**

இந்துப் பாரம்பரியத்தினைக் கட்டிக்காக்கும் உயர்ந்த விழுமியப் பண்புகளுடன் தென்மராட்சி மண்ணில் தலைநிமிர்ந்து நிற்கும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி பல கல்விமான்களையும் புத்திஜீவிகளையும் உருவாக்குவதில் இந் நிறுவனத்தில் சேவையாற்றியவர்களும் பெருமைக்குரியவர்கள். அந்த வகையில் கடந்த இருபத்தொன்பது வருடங்களாக ஆசிரியர் பணியாற்றி ஓய்வுபெறும் திருமதி இரத்தினசிங்கம் பரிமளம் அவர்களின் சேவையும் இந்து அன்னைக்கு அணிகலனாக அமையும். இவர் பொருளியல் பாடத்தினை உயர்தரத்திற்கு கற்பித்து பின் நிர்வாக இயந்திரத்தை இயக்குவதற்கும் பாடசாலையின் வளர்ச்சியில் ஒவ்வொரு கட்டங்களிலும் நிர்வகீத்த அதிபருக்கு ஒத்திசைவாக இருந்து பாடசாலையின் ஒழுக்கம், விழுமியப்பணிகள் என்பவற்றை பேணுவதில் பேருதவியாக இருந்தார். குறிப்பாக மாணவிகளின் ஒழுக்கத்தை கட்டிகாக்கும் சிரேஷ்ட ஆசிரியராக இருந்து வழிநடத்தியவர். மாணவர்களின் கல்வியில் மட்டும் இன்றி இணைபாடவிதான செயற்பாடுகளிலும் மாணவர்கள் பங்குபற்றுவதற்கு எத்தனமாக இருந்தார். மிகுந்த அர்ப்பணிப்பும் சேவை மனப்பாங்கும் கொண்ட இவர் கல்லூரியின் தரம் 8.9 வகுப்புகளின் பகுதி தலைவராகவும் இருந்து செயற்பட்டார். இத்தகைய கல்லூரியின் நீண்ட ஒரு வரலாற்றினை கொண்டவரும் தனக்கென ஒரு இடத்தினை வகித்து கொண்டவருமாகிய திருமதி பரிமளம் இரத்தினசிங்கம் ஆசிரிய சேவையில் இருந்து 09.09.2018 அன்று ஓய்வுபெறுகின்றார். இவரின் ஓய்வுக்காலம் சிறக்க இறை ஆசிவேண்டி வாழ்த்துவதில் பெரும் மகிழ்வடைகின்றோம்.

**அதிபர்**
**யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி**

ஆசிரியர் சேவையில் 1984.05.08இல் இணைந்து யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 1989.09.28-2018.09.09 வரை இருபத்தொன்பது வருடங்கள் சேவையாற்றி முப்பத்து நான்கு வருடம் ஆசிரியராய் அரும் பணியாற்றி ஓய்வு பெறும் ஆசிரியை திருமதி இரத்தினசிங்கம் பரிமளம் அவர்களின் சேவையை பாராட்டுவதோடு சேவைக்காலம் இனிதே அமைய அகமகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
**யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி**
**ஆசிரிய சகோதரத்துவம்**

(சி-3751)

## மரண அறிவித்தல்



### திருமதி நேசமணி சதாசிவம்

அராலி தெற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வவுனியா, கிளிநொச்சி ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நேசமணி சதாசிவம் அவர்கள் கடந்த (04.09.2018) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து-பார்வதி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ந.சதாசிவம் அவர்களின் அன்பு மனைவியும் சிவநேசன் (கனடா), சண்முகரட்ணம்(அதிபர்-வ/இராசேந்திரன் குளம் அ.த.க.பாடசாலை, வவுனியா), சிவமலர்(ஆசிரியர்-வ/நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயம், வவுனியா), கௌரி(கனடா), லற்றீசியா(ஆசிரியர்-வ/மூன்று முறிப்பு அ.த.க.பாடசாலை, வவுனியா), திரு.N.ஜெயராஜா(செயலாளர்-புதுக்குடியிருப்பு பிரதேச சபை) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2018) வெள்ளிக்கிழமை அவரது சொந்த ஊரான அராலி தெற்கு, வட்டுக்கோட்டையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் மு.ப.11.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பூனாவட இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம். (5597)

அராலி தெற்கு, வட்டுக்கோட்டை.
0774744464(மகன்)
0776120854(மருமகன்)

தகவல்,
குடும்பத்தினர்.


## புலமைப்பரிசில் வழிகாட்டல் வகுப்பு

2019-ம் வருடத்திற்கான தரம் 5 புலமைப்பரிசில் வழிகாட்டல் வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளது.

**காலம்:-09.09.2018 (ஞாயிறு) காலை 11.00 மணி**
ஆசிரியர்:-P.**கயலவன்** B.Com (Hons)
**உயர்கணக்கியல் கல்லூரி (H.A.C) சித்தன்கேணி**
தொடர்புகளுக்கு:-0776914080, 0774588183
**குறிப்பு:**-அனுமதிகள் வரையறுக்கப்பட்டிருப்பதனால் உங்கள் அனுமதியை முன்கூட்டியே உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

-நிர்வாகி

(5593)


## நான்காம் ஆண்டு / முதலாமாண்டு நினைவுநாள்




### அமரர்கள் திரு.திருமதி குணராஜா பரமேஸ்வரி

மலர்வு:-01.01.1940 மலர்வு:-25.01.1941
மறைவு:-26.06.2014 மறைவு:-18.09.2017

ஐயா! அம்மா! எங்களை வாழ வைத்த தெய்வங்களே!
வார்த்தைகள் வெளிவர முடியாமல் மௌனிக்கின்றன
விம்மல்களும் பெருமூச்சுக்களுமே உங்களுக்கான
செய்திகள் ... ஆண்டுகள் சென்றாலும் அழுதுமுடியாது

தாளையடி லேன், திருநெல்வேலி (5594) குடும்பத்தினர்




வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி கோவில் 22ஆம் திருவிழாவான நேற்று வியாழக்கிழமை காலை மாம்பழத் திருவிழா சிறப்பாக நடைபெற்றது. (படங்கள்:-ஐ.சிவசாந்தன்)

# 15மில்லியனுக்கும் அதிகமான போதை மாத்திரைகள் மீட்பு!

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தில் கொள்கலன் ஒன்றிலிருந்து 15 மில்லியனுக்கும் அதிகமான போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். ட்ரமடோல் எனும் போதை மாத்திரைகளே பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் மீட்கப்பட்டுள்ளது. (இ-7)





# போலிப் போராட்டங்களால் அரசை வீழ்த்த முடியாது!

## பிரதமர் ரணில் திட்டவட்டம்

(கொழும்பு)

**போலியான போராட்டங்களை முன்னெடுத்து அரசாங்கத்தை வீழ்த்த முடியாது என்ற விடயத்தை மகிந்த உட்பட அவரது தரப்பினர்கள் புரிந்து கொள்ள வேண்டும் எனச் சுட்டிக்காட்டிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அரசாங்கத்திற்கு எதிராக கோசம் எழுப்பினால் மாத்திரம் அரசாங்கம் கவிழ்ந்து விடும் என்று நினைப்பவர்களின் அரசியல் சிந்தனைகளை வரவேற்கின்றேன் எனவும் தெரிவித்தார்.**

கூட்டரசாங்கத்தின் சிறந்த நிர்வாகம் 2020 மட்டுமல்ல 2030 வரையில் தொடரும்.

இந்த அரசாங்கத்தை வீழ்த்துவதாக நேற்று முன்தினம் பொது எதிரணியினர் மேற்கொண்ட போராட்டத்தின் பெறுபேறுகள் என்ன என்பது அவர்களுக்கே புரியாமல் போய்விட்டது எனவும் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் 72 ஆவது வருட நிறைவு நேற்று கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கட்சியின் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார். (இ-7)



# ராஜீவ் கொலை வழக்கு; ஏழு பேரையும்

## உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் பேறறிவாளனின் தாயார் வேண்டுகோள்

(சென்னை)

ஏழு தமிழர் விடுதலை தொடர்பான நீதிமன்ற தீர்ப்பு மகிழ்ச்சியளித்துள்ளது என பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி படுகொலை வழக்கில் தண்டனை அனுபவித்து வரும் ஏழு தமிழர்களையும் தமிழக அரசே விடுதலை செய்யலாம் என இந்திய உச்சநீதிமன்றம் நேற்று தீர்ப்பு வழங்கியுள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள அற்புதம்மாள் இந்த தீர்ப்பு மகிழ்ச்சியாக உள்ளது என தெரிவித்துள்ளார்.

28ஆவது ஆண்டாவது இந்த வழக்கை முடித்து வைப்பதாக இந்திய உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது மகிழ்ச்சியளிக்கின்றது என தெரிவித்துள்ள அவர் முன்னாள் தமிழக முதல்வர் ஜெயலலிதா இவர்கள் விடுதலை தொடர்பில் இரு தடவை அறிவித்திருந்தார். இதன் காரணமாக இவர்களை தமிழக அரசு உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழக முதல்வர் மற்றும் சட்டத்துறை அமைச்சரை சந்திக்கப்போகின்றேன். அந்த சந்திப்பின் போது விடுதலை தொடர்பாக ஆளுநரிடம் பரிந்துரை செய்யுமாறு வேண்டுகோள் விடுப்பேன் எனவும் அற்புதம்மாள் தெரிவித்துள்ளார். (இ-7)





# மயிலிட்டி கலைமகள் வித்தியாலயம் நேற்று விடுவிப்பு





(யாழ்ப்பாணம்)

இராணுவத்தின் கட்டுப்பாட்டிலிருந்த மயிலிட்டி கலைமகள் வித்தியாலயம், கூழாவடி இராணுவமுகாம் அமைந்திருந்த காணி உட்பட குரும்பசிட்டியில் உள்ள ஒரு பகுதி காணிகள், வீடுகள் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளன.

வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவின் கீழ். இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்திலிருந்து ஜனாதிபதியால் விடுவிக்குமாறு உத்தரவிட்ட மயிலிட்டி- கலைமகள் வித்தியாலயமும் அதனைச் சூழவுள்ள 3 ஏக்கர் காணியும் அத்துடன் குரும்பசிட்டியில் கிராம அபிவிருத்திச் சங்கம், தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் அதனை சூழவுள்ள 12 ஏக்கர் காணியும் நேற்று 28 வருடங்களின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், ஆனைக்கோட்டை கூழாவடி இராணுவ முகாம் அமைந்துள்ள 8 வீடுகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

இந்த காணிகள் உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு மயிலிட்டி கலைமகள் வித்தியாலய முன்றலில் நேற்று காலை 9.30 மணிக்கு இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட யாழ். மாவட்ட இராணுவக் கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாராச்சி இவற்றுக்கான காணி பத்திரங்களை அரச அதிபர், சங்க தலைவர் மற்றும் கிராம உத்தியோகத்தரிடமும் கையளித்தார்.

இதன்படி மயிலிட்டி கலைமகள் வித்தியாலயமும் அதனுடன் உள்ள 3 ஏக்கர் நிலப்பரப்பு பத்திரம் இராணுவ கட்டளை தளபதியால் யாழ். மாவட்ட அரச அதிபர் ந.வேதநாயகன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ். உதயகுமாரிடம் வழங்கப்பட்டது. குரும்பசிட்டி கிராம அபிவிருத்தி சங்க கட்டத்திற்குரிய (ஜே/242) பத்திரத்திரம் சங்க தலைவர் பொன்னுத்துரை தங்கராஜாவிடம் கையளிக்கப்பட்டது, குரும்பசிட்டி சனசமூக நிலையம் (ஜே/243) தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவு சங்க தலைவர் நடராசா உமாகரனிடம் வழங்கப்பட்டது.

குரும்பசிட்டியில் இதனுடன் 12 ஏக்கர் நிலப்பரப்பும் விடுவிக்கப்பட்டது.

அத்துடன் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஆனைக்கோட்டை கூழாவடி இராணுவ முகாம் அமைந்துள்ள 8 வீடுகள் விடுவிக்கப்பட்டுள்ளன. இதற்கான பத்திரம் (ஜே/133) கிராம உத்தியோகத்தர் நிஷாந்தனிடம் யாழ்.மாவட்ட இராணுவ கட்டளை தளபதியால் வழங்கப்பட்டது. (இ-9)

# ‘ஜனபலய’ போராட்டத்தால் ஒருவர் பலி 89 பேர் வைத்தியசாலையில் அனுமதி

(கொழும்பு)

கூட்டு எதிரணியின் "ஜன பலய" போராட்டம் நேற்று முன்தினம் நள்ளிரவுடன் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த போராட்டத்தில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டக்காரர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும் குறித்த நபர் மாரடைப்பால் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் மது அருந்தியதால் ஏற்பட்ட விளைவால் சுமார் 81 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

8 பேர் உணவு ஒவ்வாமையால் பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில் பாதிக்கப்பட்டவர்களை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் நடவடிக்கையில் இந்திய அரசினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட அம்புலன்ஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து கொழும்பில் பல்வேறு இடங்களில் வந்திறங்கிய ஆர்ப்பாட்டக்காரர்கள் இறுதியில் லேக்கவுஸ் சுற்றுவட்டத்தில் ஒன்றுகூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மக்களின் விருப்பத்தை அறிய மேற்கொண்ட பேரணி கேலிக்கூத்தானது-ருவான் விசனம்

(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் யாரை வேட்பாளராக நிறுத்துவது என்பது தொடர்பில் மக்களின் விருப்பத்தையறிய மகிந்தவின் கூட்டு எதிரணியினர் மேற்கொண்ட பேரணி இறுதியில் கேலிக்கூத்தாக மாறிவிட்டது என இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் யாரை வேட்பாளராக நிறுத்துவது என்பது தொடர்பில் மகிந்த அணியனரிடையே பிளவுகள் ஏற்பட்டுள்ளன. நாட்டின் அடுத்த தலைவராக யாரை நியமிப்பது என்ற மக்களின் விருப்பத்தை அறிந்து கொள்ளவே பேரணியை நடத்தினார்கள். இறுதியில் இந்த பேரணி கேலி கூத்தாக மாறிவிட்டது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

முதலில் 10 இலட்சம் பேர் பேரணியில் பங்கேற்பார்கள் என்றார்கள். பின்னர் 2 இலட்சம் பேர் பங்கேற்பார்கள் என கூறினார். இறுதியில் 2ஆயிரம் பேரே பேரணியில் கலந்துகொண்டார்கள்.


கோடிக்கணக்கில் செலவழித்து மக்கள் பலத்தை திரட்ட முயற்சித்தார்கள். பொது மக்கள் ஆதரவு வழங்கவில்லை. பொதுஜன பெரமுனவின் சில ஆதரவாளர்களே இதில் கலந்து கொண்டனர்.

அடுத்து ஜனாதிபதி தேர்தலில் யாரை முதன்மை வேட்பாளராக நிறுத்துவது என்பது தொடர்பில் எதிரணியினரிடையே முரண்பாடுகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இதற்கு விடை தேடவே அரசாங்கத்திற்கு எதிராக எதிர்ப்பு பேரணியை நடத்தினார்கள். இறுதியில் அதுவும் கோமாளித்தனமாகி விட்டது.

இந்த பேரணியால் பொது மக்களும், மாணவர்களுமே பாதிக்கப்பட்டனர். அரசாங்கத்துக்கு எந்த அழுத்தமும் ஏற்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஓவலில் கிடைக்குமா ஆறுதல்?

## இந்திய இரசிகர்கள் எதிர்பார்ப்பு



பயிற்சியின்போது விராட் ஹோலி

இந்தியா, இங்கிலாந்து அணிகள்மோதும் ஐந்தாவது மற்றும் கடைசி டெஸ்ட் இன்று ஓவலில் ஆரம்பமாகிறது.

ஏற்கெனவே தொடரை இழந்து விட்ட இந்திய அணி இதில் சாதித்து ஆறுதல் வெற்றி பெறுமா என ரசிகர்களிடம் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி, அங்கு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதல் நான்கு டெஸ்ட் முடிவில் இந்திய அணி 1-3 என்ற கணக்கில் தொடரை இழந்தது.

இந்நிலையில் இரு அணிகளுக்கு இடையிலான 5ஆவதும் இறுதியுமான டெஸ்ட் இன்று லண்டன் ஓவல் மைதானத்தில் தொடங்குகிறது.

இந்திய துணைக் கண்டத்துக்கு வெளியே அடுத்தடுத்து தொடரை இழந்த (தென்னாபிரிக்கா, இங்கிலாந்து) இந்திய அணி இம்முறை ஆறுதல் வெற்றி பெற்றால் ஓரளவுக்கு கௌரவமாக (2-3) நாடு திரும்பலாம்.

**வருவாரா பிரித்வி?**

தவிர அவுஸ்திரேலிய தொடருக்கு செல்லும் முன் சற்று நம்பிக்கை கிடைக்கும். இதனால் இன்று களமிறங்கும் அணியில் மீண்டும் மாற்றம் இருப்பது உறுதி. தவானுடன் சேர்ந்து தொடர்ந்து சொதப்பும் லோகேஷ் ராகுலுக்குப் பதில் பிரித்வி ஷா இடம்பெறுவார் என நம்பப்படுகிறது.

அதேநேரம் 18 வயது மட்டும் ஆன இவர், உலகின் சிறந்த வேகப்பந்து வீச்சாளர்கள் தரும் நெருக்கடியை சந்தித்து மீண்டு வருவாரா? என பெரும் எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. அதே நேரம் தவான் - ராகுல் கூட்டணிக்கு கடைசி வாய்ப்பு கொடுத்து பார்க்கலாம் என்ற எண்ணமும் நிலவி வருகிறது.

அடுத்து வரும் புஜாரா, ரகானே சூழ்நிலைக்கு ஏற்ப சற்று நிலைத்து ஓட்டங்கள் சேர்த்தால் வெற்றிக்கு உதவியாக அமையும்.

பாண்ட்யா தன் மீதான எதிர்பார்ப்பை சரியாக நிறைவேற்றவில்லை. இவருக்குப் பதில் ஆந்திராவைச் சேர்ந்த 'சுழல்' 'சகலதுறை வீரர்' ஹனுமா விஹாரிக்கு இடம்கொடுத்து சோதித்து பார்க்கலாம்.

**பும்ராவுக்கு ஓய்வு?**

வரும் ஆசிய கிண்ண தொடரை கணக்கில் கொண்டு, வேகப்பந்து வீச்சாளர் பும்ராவுக்கு ஓய்வு கொடுக்கப்படலாம். இவருக்குப் பதில் உமேஷ் யாதவ் இடம்பெற காத்திருக்கிறார்.

மற்றபடி மொகமட் ஷமி, இஷாந்த் மீண்டும் இணைந்து மிரட்டினால் அணிக்கு நல்லது. 'சுழல்' அஷ்வின் வலைப்பயிற்சியில் ஈடுபடவில்லை. இதனால் இன்று ஜடேஜா களமிறங்குவது உறுதி எனத் தெரிகிறது.

**மழை வருமா?**

ஐந்தாவது டெஸ்ட் நடக்கவுள்ள ஓவலில் வரும் ஐந்து நாட்களிலும் வானம் மேக மூட்ட மாக காணப்படும். இரண்டாவது நாள் காலையில் மழை வர 25 சதவீதம் வாய்ப் புள்ளது.

**47 ஆண்டுகளுக்கு முன்...**

லண்டன் ஓவல் மைதானத்தில் இந்திய அணி 12 டெஸ்டில் பங்கேற்றது. இதில் 47 ஆண்டுக்கு முன் 1971ல் அஜித் வடேகர் தலைமையிலான இந்திய அணி 4 விக்கெட்டுக்களால் இங்கிலாந்தை வென்றது. மற்றபடி 4ல் தோல்வியடைந்தது 7 போட்டிகளை 'சமன்' செய்தது.

**ஆடுகளம் எப்படி?**

ஓவல் மைதானத்தின் ஆடுகளத்தில் லேசான புற்கள் உள்ளன. இதனால் மற்ற டெஸ்ட் போல இங்கும் ஆடுகளம் வேகத்துக்கும், துடுப்பாட்டத்துக்கும் கைகொடுக்கலாம்.

**குக் பிரியாவிடை**

இங்கிலாந்து அணிக்காக கடைசி டெஸ்டில் களமிறங்குகிறார் அலெஸ்டர் குக். இவருடன் இணைந்துதடுமாறும்ஜென்னிங்ஸ். இன்று சிறப்பான ஆரம்பம் கொடுக்க முயற்சிக்கலாம்.

அணித் தலைவர் ஜோ ரூட், பேர்ஸ்டோவ் உள்ளிட்ட 'முன்வரிசை' வீரர்கள் தடுமாறினாலும் பின்வரிசையில் வரும் பட்லர், கர்ரான் இருவரும் இந்திய அணிக்கு பெரும் 'வில்லனாக' உருவெடுத்துள்ளனர்.

இங்கிலாந்து அணி தொடரை வென்று விட்டதால் பந்துவீச்சில் 'சீனியர்' அண்டர்சன், ஸ்ரூவேர்ட் பிரோட் என இருவருக்கும் ஓய்வு கொடுக்கும் திட்டம் இருப்பதாகத் தெரிகிறது. இதனால் வோக்ஸ், ஸ்ரோக்ஸ் வேகப்பந்து வீச்சு பிரிவுக்கு பலம் சேர்க்கலாம்.

# அரையிறுதியில் நிஷிகோரி, ஒசாகா

## யு.எஸ்., ஓபனில் புதிய வரலாறு

யு.எஸ்., ஓபன் டென்னிஸ் ஒற்றையர் பிரிவு அரையிறுதிக்கு முன்னேறிய ஜப்பானின் கெய் நிஷிகோரி, ஒசாகா புதிய வரலாறு படைத்தனர்.

மற்றைய காலிறுதிப் போட்டிகளில் செர்பியாவின் ஜோகோவிச், அமெரிக்காவின் மடிசன் கீஸ் வெற்றி பெற்றனர்.

அமெரிக்காவில் உள்ள நியூயோர்க் நகரில், யு.எஸ்., ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் நடக்கிறது.

இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் ஜப்பானின் ஒசாகா, உக்ரைனின் லெசியா டிசுரன்கோ மோதினர்.

அபாரமாக ஆடிய ஒசாகா 6-1, 6-1 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார். இதன்மூலம் இவர், 22 ஆண்டுகளுக்கு பின் கிராண்ட்ஸ்லாம் ஒற்றையர் பிரிவு அரையிறுதிக்கு முன்னேறிய ஜப்பான் வீராங்கனையானார்.

இதற்கு முன், 1996ல் நடந்த விம்பிள்டன் ஒற்றையர் பிரிவு அரையிறுதிக்கு ஜப்பானின் கிமிகோ டேட் தகுதி பெற்றிருந்தார்.

தவிர, யு.எஸ்., ஓபன் ஒற்றையர்பிரிவுஅரையிறுதிக்கு முன்னேறிய முதல் ஜப்பான் வீராங்கனை என்ற பெருமை பெற்றார் ஒசாகா.

மற்றொரு காலிறுதியில் அமெரிக்காவின் மடிசன் கீஸ் 6-4, 6-3 என்ற நேர் செட் கணக்கில் ஸ்பெயினின் கார்லா சாரஸ் நவரோவை தோற்கடித்தார்.

அரையிறுதியில் ஒசாகா, மடிசன் கீஸ் மோதவுள்ளனர்.

**ஜோகோவிச் வெற்றி**

ஆண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச், அவுஸ்திரேலியாவின் ஜோன் மில்மேன் மோதினர்.

அசத்தலாக ஆடிய ஜோகோவிச் 6-3, 6-4, 6-4 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

அரையிறுதியில் நிஷிகோரி, ஜோகோவிச் மோதவுள்ளனர், கடந்த 2014ல் நடந்த யு.எஸ்., ஓபன் அரையிறுதியில் நிஷிகோரி, ஜோகோவிச்சை வீழ்த்தி முதன் முறையாக இறுதிக்கு முன்னேறி இருந்தார்.



அரையிறுதிக்கு நுழைந்த உற்சாகத்தில் நிஷிகோரி

**புதிய வரலாறு**

மற்றொரு காலிறுதியில் ஜப்பானின் கெய் நிஷிகோரி, குரோஷியாவின் சிலிச் மோதினர். நான்கு மணி நேரம், 8 நிமிடம் நீடித்த போட்டியின் முடி வில் நிஷிகோரி 2-6, 6-4, 7-6, 4-6, 6-4 என்ற செட் கணக்கில்போராடிவெற்றி பெற்று அரையிறுதிக்குள் நுழைந்தார்.

இம்முறை பெண்கள் ஒற்றையரில்ஜப்பானின் ஒசாகா அரையிறுதிக்கு தகுதி பெற்றிருந்தார். இதன்மூலம் முதன் முறையாக ஜப்பான் வீர. வீராங்கனைகள் ஒரே கிராண்ட்ஸ்லாம் தொடரின் ஒற்றையர் பிரிவு அரையிறுதிக்கு முன்னேறி புதிய வரலாறு படைத்தனர்.


சேவைநலன் பாராட்டும்
60 வது அகவை வாழ்த்தும்



திரு. கனகசபை
யோகேந்திரநாதன்
(கிராம உத்தியோகத்தர்)

கிராம உத்தியோகத்தராக கடந்த நான்கு ஆண்டுகளாக எமது வல்லிபுரம் (J/416) பிரிவில் சிறப்பாக சேவையாற்றி இன்றுடன் (07.09.2018) பணியிலிருந்து ஓய்வுபெறும் இவரின் சேவையினை பாராட்டி நன்றி தெரிவிக்கின்றோம். ஓய்வு காலத்தில் குடும்பத்துடன் மகிழ்ச்சியாகவும் நீண்ட ஆயுளுடனும் வாழ ஸ்ரீவல்லிபுர மாயவனை பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்:-
ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் அறங்காவலர் சபை
வல்லிபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம்
வல்லிபுரம் மகளிர் அபி.சங்கம்
வல்லிபுரம் கமக்காரர் அமைப்பு

(C-3752)

## ஈரம் தோய்ந்த விழிகளுடன் பரிதவிக்கும்



# 9ஆம் ஆண்டு நிறைவு நினைவுகூரல் மடல்



## சண்முகநாதன் அருள்நங்கை தம்பதியரின் அன்புப் புதல்வன்

# சந்துதன்

## (சந்துக்குட்டி)

கருவில் :- 07.02.2000
மனதில் :- 08.09.2009



### அருமை மகனே ஆருயிரே அன்பின் தெய்வமே சந்துதா

நீ எமை விட்டுப் பிரிந்து 9 ஆண்டுகள் நகர்ந்து போய்விட்டதய்யா. ஆனால் உமை விட்டுப் பிரிந்து ஒன்பது ஆண்டுகளும் உம் நினைவில் கண்ணீரில் உருள்கின்றோம் மகனே திரும்பவும் எம்மிடம் நீர் வரமாட்டீரா என் ஏங்கி நின்ற எமக்கு உம் உருவிலும் உம் இயல்பிலும் இருவராக நீரே வந்து எம் கண்ணீரைத் துடைக்க தாராளமனம் கொண்ட உம் தயாள குணத்தை மறக்க முடியவில்லையடா கண்ணே. அதனை எண்ணி எண்ணி வியக்கின்றோம்.

நாம் எப்படி உமை மறக்கமுடியாமல் தவிக்கின்றோமோ நீயும் அவ்வண்ணமே எம் துயர் துடைக்க நினைக்கின்றீர். மறப்பது மனிதஇயல்பு என்றாலும் அது உமது விடயத்திலே மாறாக உள்ளது ராசா. ஏனென்றால் எதை மறந்தாலும் உமை ஒரு கணமேனும் மறக்கமுடியவில்லையே எமக்கு. மறவாத மருந்தல்லவோ ராசா உம் முகம்.

பிறநாடு சென்ற மைந்தர் திரும்பி வருவார்கள் என்று எதிர்பார்க்கும் பெற்றோரைப் போல் நீ எப்பவென்றாலும் எமை பார்க்க கட்டிளம் காளையாய் கபடமற்ற அன்பான வதனத்தை முத்தான உன் சிரிப்பை மழலைக் குரலை கேட்பதற்கும் பார்ப்பதற்கும் ஏங்கி நிற்கின்ற எமக்கு தரிசனம் தான் தருவீரோ? பிறநாடு சென்ற அண்ணா ஏன் இன்னும் வரவில்லை. எல்லோரும் வருகிறார்கள். அண்ணா மட்டும் ஏன் வரவில்லை என்று கேள்வி கேட்கும் உன் தம்பிமார் கேள்விக்கு நீ என்னதான் பதில் கூறுகிறாய். மகனே வருவாய் வருவாய் என ஏங்கி நிற்கும் எங்களுக்கு நல்ல பதில் தரமாட்டாயா? எம் அன்பு மகனே. உன் நினைவு நாளை பிறந்த நாளாய் கொண்டாடத் துடிக்கும் உன் தம்பியர்க்கு உண்மையை எடுத்துரைக்க முடியாதுள்ளதய்யா.

ஆண்டுகள் எத்தனை சென்றாலும் நீ எம்முடன் வாழ்ந்த ஆண்டுகளே வாழ்நாளில் இன்பமான ஆண்டுகள். வாழப்போகும் அத்தனை ஆண்டுகளும் துன்பமான ஆண்டுகளே. நரகமான இந்த ஆண்டுகளைக் கடந்து உம்மை வந்து சந்தித்து முகமுகமாய் காணுவது உண்மையே என்ற அழியாத நம்பிக்கையில் ஆறுதல் அடைவதைத் தவிர எமக்கு யாது செய்யமுடியும்.

விதி மதியிலும் வலியது என்ற உண்மையை எமக்கு மெய்ப்பித்து விட்டு வாழ்க்கையின் நிலையாமையை எமக்கு உணர்த்தி விட்டு வானகத்தில் வண்ண விளக்காய் ஒளிரும் அன்பு மகனே எமக்கு ஆறுதலைத் தாரும் ஐயா.

லக்சுமி, சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை.

உம் பிரிவால் துயருற்றிருக்கும்
உன் பெற்றோர்கள், சகோதரர்கள், உறவினர்கள்.

(சி-3739)

# "குரலற்ற மனிதர்கள்" நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டி வளர்மதி சனசமூக நிலையம் நடத்தும் "குரலற்ற மனிதர்கள்" (நாவல்) நூல் வெளியீட்டுவிழா நாளை மறுதினம் குரும்பசிட்டி கலைஞானி கலாசார மண்டபத்தில் பிற்பகல் 2 மணியளவில் சனசமூகநிலையத் தலைவர் திருமதி.சிவரூபன் சர்வேஸ்வரியின் தலைமையில் இடம்பெறும். இதில் பிரதம விருந்தினராக வலி.வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோ. சுகிர்தன் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ம.இரகுநாதன், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சிரேஷ்ட வருகைதரு விரிவுரையாளர் கலாநிதி க.கலாமணி ஆகியோர் கலந்து கொள்வர்.

கௌரவ விருந்தினர்களாக வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் பொ. தங்கராசா, யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத் தலைவர் ச.லலீசன், கிருபா லேணர்ஸ் தலைவர் அ. கிருபாகரன், ஜீவநதி ஆலோசகர் க.நடேசு (தெணியான்), வலி.வடக்கு சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சிவயோகம் செல்வ விநாயகம். குரும்பசிட்டி கிழக்கு கிராம உத்தியோகத்தர் நா. ஜெயவிந்தன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ

## மானிய உரத்திற்கு விண்ணப்பிக்கலாம்

(சாவகச்சேரி)

கல்வயல் கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள நான்கு வயல் வெளிகளில் நெல் பயிரிடும் விவசாயிகளுக்கான மானிய உர விநியோகப் படிவம் பூர்த்தி செய்தல் மற்றும் இவ்வாண்டிற்கான அங்கத்துவம் புதுப்பித்தல் ஆகிய செயற்பாடுகள் இன்று வெள்ளிக் கிழமை மற்றும் நாளை சனிக் கிழமை ஆகிய தினங்களில் இடம்பெறவுள்ளதாக கல்வயல் கமக்காரர் அமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இன்று வெள்ளிக்கிழமை பி.ப ஒரு மணி தொடக்கம் மாலை 5 மணி வரையும், நாளை சனிக்கிழமை காலை 9.30 தொடக்கம் பி.ப 1.30 மணி வரையும் கல்வயல் பொதுநோக்கு மண்டபத்தில் பதிவுகள் இடம்பெறும்.

பதிவுகளை மேற்கொள்ள வருவோர் இவ்வாண்டின் ஏக்கர் வரி பற்றுச்சீட்டு, அடையாள அட்டை, 2017 ஆம் ஆண்டிற்கான அடையாள அட்டை, பாவனையில் உள்ள தொலைபேசி இலக்கம் ஆகியவற்றுடன் வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளனர். (இ-30)

# மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை அரசாங்கம் மறந்து விட்டது -டளஸ்

(கொழும்பு)

அரசாங்கம் ஆட்சிக்கு வரும் போது மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை மறந்து விட்டது என கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும குற்றம் சாட்டினார்.

அரசுக்கு எதிராக நேற்று முன்தினம் கொழும்பில் போராட்டம் இடம்பெற்றது. இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது எழுச்சிப் பேரணி மிகவும் நேர்த்தியான முறையில் இடம்பெற்றது. எங்கும் எவ்விதமான அசம்பாவிதங்க ளும் இடம்பெறவில்லை. ஆனால் சிலசில இடங்க ளில் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

மேலும் இவ்வரசாங்கத்தால் மக்கள் மீது சுமத்தப்படும் பொருளாதார சுமைகளை மக்களால் இனியும் தாங்கிக் கொள்ள முடியாது.

எனவே இவ்வரசாங்கம் பொதுத்தேர்தலை நடத்தினால் அரசாங்கத்தை மட்டுமன்றி ஆட்சியாளர்களையும் வீட்டுக்கு அனுப்புவோம் என்றும் டளஸ் தெரிவித்தார். (இ

# ஆலயத்திற்கு நிதியுதவி



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணசபை உறுப்பினர் என். விந்தன் கனகரட்ணம் தனது 2018 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டின் மூலம் கூத்தன் கலட்டி, வேலணை, ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலய புனரமைப்புப் பணிக்காக 75 ஆயிரம் ரூபாவை வழங்கினார்.

மேற்படி ஆலய நிர்வாகத்தினர், பொதுமக்கள் அனைவரின் கோரிக்கைக்கு அமைவாக நேரில் சென்று பார்வையிட்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர் என். விந்தன் கனகரட்ணம் கூத்தன் கலட்டி, வேலணை, ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்திற்கான காசோலையினை, கடந்த 5ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேலணை பிரதேச சபை உறுப்பினர்களான செல்லப்பா பார்த்தீபன் மற்றும் சிவலிங்கம் அசோக் குமார் ஆகியோர்களூடாக ஆலயத்தில் வைத்து வழங்கி வைத்தார். (இ-7)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் மனித வள முகாமைத்துவம் (Short course in Human Resource Management), நிதி முகாமைத்துவம் (Short course in Financial Accounting), சந்தைப்படுத்தல் முகாமைத்து வம் (Short course in Marketing Management), மனித வள பயிற்சியும் அபிவிருத்தியும் (Short course in Human Resource Training and Development) மற்றும் அலுவலக முகாமைத்துவத்திற்கான (Short course in Office Management) குறுகிய காலக் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. க.பொ.த சாதாரண தரத்தில் சித்திபெற்ற அனைவரும் இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

இக்கற்கை நெறியானது மூன்றுமாத காலங்களைக் கொண்டுள்ள நிலையில் இக் கற்கைநெறிக்குரிய விண்ணப்பப்படிவங்களை 11.09.2018 முதல் 09.10. 2018 வரை பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாமெனவும் மேலதிக விபரங்களுக்கு யாழ்.பிராந்திய நிலையத்திற்கு வருகை தருவதன் மூலமோ அல்லது 021 222 3374 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொண்டோ பெற்றுக்கொள்ள முடியும்எனவும்உதவிப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.(இ

>>>>>>>>>>>>>>>>>>>>>>>

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் (Short course in Speech and Listening - English) பேச்சு மொழி ஆங்கிலத்திற்கான குறுகிய காலக்கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. க.பொ.த சாதாரணதரத்தில்சித்திபெற்றஅனைவரும் இக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

இக்கற்கை நெறியானது மூன்று மாத காலங்களைக் கொண்டுள்ள நிலையில் இக்கற்கைநெறிக்குரிய விண்ணப்பப்படிவங்களை 06.09. 2018 முதல் 15.09.2018 வரை பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாமெனவும்மேலதிக விபரங்களுக்கு யாழ். பிராந்திய நிலையத்திற்கு வருகை தருவதன் மூலமோ அல்லது 021 222 3374 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொள்வதன் மூலமோ பெற்றுக் கொள்ள முடியும் எனவும் உதவிப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (இ

# தளபாடங்கள், காசோலை வழங்கல்

(கரணவாய்)

வடமாகாணசபை உறுப்பினர் எஸ்.சுகிர்தனின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து மூன்று சனசமூக நிலையங்களுக்கு தளபாடங்களும், காசோலைகளும்வழங்கப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் புதன்கிழமை முற்பகல் பருத்தித்துறை பிரதேசசபையில் வைத்து இவை வழங்கப்பட்டன.

மருதங்கேணி கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு மின் விளக்கு கொள்வனவு செய்வதற்காக 50 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை வழங்கப்பட்டது.

பொலிகண்டி படிப்பகத்திற்கும் 50ஆயிரம் ரூபாய் பெறுமதியான காசோலை வழங்கப்பட்டது. வல்லிபுரம் சிங்கநகர் உதயசூரியன் சனசமூக நிலையத்திற்கு 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான கதிரைகளும், மேசைகளும் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச சபை உபதவிசாளர் கே.தினேஸ், பிரதேச சபை உறுப்பினர் எஸ்.பிரசாத் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-60)



# பாதயாத்திரை ஆரம்பம்



வரலாற்று சிறப்பு மிகு நல்லூரை நோக்கிய பாதயாத்திரை கடந்த புதன்கிழமை நயினாதீவிலிருந்து ஆரம்பமானது. சப்த தீவக திவ்ய ஜீவன சங்கத்தின் ஏற்பாட்டில் வருடாந்தம் இடம்பெறும் இப் பாதயாத்திரை நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழாவன்று ஆலயத்தினை வந்தடையும். (இ-7)

# இராசி பலன்

**மீனம்:** வியாபாரத்தை விருத்தி செய்ய முற்படுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்களின் சந்திப்பால் மகிழ்ச்சியுண்டு.

**மேடம்:** நண்பர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், சுப செலவுகள் இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு.

**இடபம்:** உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் கிடைக்கும்.

**மிதுனம்:** வார்த்தைகளில் நிதானம் தேவை, அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், செய்தொழில் மேன்மையுண்டு, வழிபாடு மகத்துவம் தரும்.

**கும்பம்:** சுவாரசியமான சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், செய் தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம்.

**கடகம்:** ஆன்றோர் சிந்தனை மேலோங்கும் நாள், சாதுரியமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், போசன சுகமுண்டு, மனதில் இடம்புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள்

**மகரம்:** ஆலய வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**சிம்மம்:** ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு, சயன சுகக் குறைவான நாள், வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள்.

இராசி பலன்

கிரகநிலை

சந்திராஷ்டமம்

பூராடம்- உத்தராடம்

ராகு சந்

சூரி புத

செவ். கேது

சனி

குரு சுக்

07.09.2018

ஆவணி 22, வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு

துவாதசி காலை 6.54 மணிவரை

திரயோதசி பின்னிரவு 4.30மணிவரை

பூசம் முற்பகல்11.42 மணிவரை

சுபநேரம் 6.04-7.34மணிவரை

இராகுகாலம் 10.34-12.04மணிவரை

பிரதோச விரதம்

வளவன்

**தனுசு:** மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி உற்சாகம் குறையும், முயற்சிகளில் சில தாமதங்கள் ஏற்படலாம், பிரயாண பயமுண்டு.

**விருச்சிகம்:** புதிய முயற்சியில் முன்னேற்றம் பெறுவீர்கள், சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறலாம், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**துலாம்:** எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், தன்னம்பிக்கை மேலோங்கும் நாள், தூர தேசத்திலிருந்து சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**கன்னி:** பொருளாதார நிலையில் முன்னேற்றங்கள் ஏற்படலாம், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

VD
V CHILLI POWDER
மிளகாய்த்தூள்

சுத்தமான முறையில் தரமாக யாழ்ப்பாண பாரம்பரிய முறையில் தயாரிக்கப்பட்ட மிளகாய்த்தூள்.

சைவ, அசைவ உணவுகளுக்கு ஏற்றபடி
தயாரித்துக் கொடுக்கப்படும்.

Home Delivery Available

வெளிநாடுகளுக்கும் வெளிநாட்டுக்கு எடுத்துச் செல்வதற்கும் பிரத்தியேகமாக பொதி செய்தும் கொடுக்கப்படும்.

விதானை வளவு
பொன்னாலை வீதி,
மானிப்பாய்.

V Darling Sweets
TP No:- 077 944 7977,
077 508 4685

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# ஈரவிழிகளுடன் 6 ஆம் ஆண்டில்



யாழ். மண்டைதீவைப்
பிறப்பிடமாகவும்
விசுவமடுவை
வதிவிடமாகவும் கொண்ட

## அமரர் சின்னத்தம்பி செல்லத்துரை (சாத்திரியார்)

வையத்துள் 12.07.1943
தெய்வத்துள் 13.09.2012

திதி: ஆவணி திரயோதசி
தேய்பிறை-07.09.2018

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"**

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(5513)

இல. 45/2,
விசுவமடு, "சாத்திரியார் கோட்டம்".

பாசமுடன்
குடும்பத்தினர்.

# ஆதனப்பெயர் மாற்றம்

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-07, பாஷையூர், 2ம் குறுக்குத்தெரு, ஆதன இல.38B என்னும் வரி மதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் 'கிரகறி செபஸ்தியாம்பிள்ளை பெண் மரியகன்னி' என்னும் பெயரில் ஆதனப்பதிவேட்டில் காணப்படுகிறது.

குறித்த ஆதனத்தை பாஷையூர், சென்செபஸ்தியன் வீதியைச் சேர்ந்த மருத்தீசு யேசுரத்தினம் பெண் அன்னம்மா பிரசித்த நொத்தாரிசு முடியப்பு றெமிடியஸ் முகதாவில் 2014.06.26 ஆம் திகதியிட்டு 956 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நன்கொடை உறுதியில் குறித்த ஆதனம் 1977 ஆம் ஆண்டு தமது பெற்றோரால் அவருக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது என்றும் குறித்த நன்கொடை இறுதி யுத்தத்தின்போது ஏற்பட்ட இடப்பெயர்வில் தொலைந்துவிட்டது என்றும் உறுதியைப் பெறுவதற்கு பல பிரயத்தனங்கள் மேற்கொண்டும் உறுதியை பெற்றுக்கொள்ள முடியவில்லை என்று வெளிப்படுத்தி யுபிரன் பெண் ஜெறினுக்கு தமது சீவிய உரித்திற்கு அமைவாக நன்கொடையாக வழங்கியுள்ளார். இதே நொத்தாரிசு முகதாவில் நிறைவேறிய 2017.02.20 ஆம் திகதியிட்டு 1558 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் தற்போது கனடாவில் வசிக்கும் வில்சன் யுபிரனும் பெண் ஜெறினும் அற்றோனித்தத்துவக்காரரான வஸ்தியாம்பிள்ளை பெர்னான்டோ என்பவர் மூலம் பாஷையூர் 2ம் X தெரு இல. 4 ஐச் சேர்ந்த வினாசித்தம்பி இலங்கநாதனும் பெண் டியூக்குளினுக்கும் குறித்த ஆதனத்தை அறுதியாக வழங்கியுள்ளார்.

ஆதன விபரம்:- வட மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று, பாஷையூர் இறை "விளாங்குளம்புலமும் பனிக்கன் ஓடையும்" இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் மெல்வின் ஞானப்பிரகாசம் அவர்களின் வரைபட இலக்கம் 1791/2014.06.17 இல் துண்டு-1 எனக் காட்டப்பட்ட நில.பர.00 குளி 13.35 ஆகும்.

கிழக்கு:-மூன்றடி பொதுப்பாதை
வடக்கு:-அலோசியஸ் யூட்டின் ஆதனம்
மேற்கு:-2ம் குறுக்குத் தெரு
தெற்கு:-செபஸ்தியாம்பிள்ளை மரியகன்னியின் ஆதனம்.

தற்போது இவ்வாதனத்தை வினாசித்தம்பி இலங்கநாதனும் பெண் டியூக்குளினும் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது வினாசித்தம்பி இலங்கநாதன் பெண் டியூக்குளின் என்னும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

*ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.*

(சி/3746)

World Class UK Degree
@ICBT Jaffna Campus



Apply now for New Intake 2018
Cardiff Metropolitan University

Bsc (Hons) Business Management Studies
Bsc (Hons) Software Engineering
BSc (Hons) Business Information Systems
Bsc (Hons) Information Technology
Accredited by RICS
BIRMINGHAM CITY University
BSc (Hons) Quantity Surveying

UGC RECOGNIZED

DURATION : ONE YEAR
After A/L's → HND 18 Months → BSc (Final Year - Top Up) (01 Year)

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk
CEG Education Holdings
EQAA
National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner Education Service Sector
www.icbt.lk



Cardiff Metropolitan University

SRI LANKA'S MOST ACCEPTED BRITISH
MBA
MASTER OF BUSINESS ADMINISTRATION
in Jaffna
6th Batch in Jaffna

This MBA is aimed at those who are looking to develop their careers and at 'High Flyers' that need and understanding of all the major functions of business.

In addition to enhancing successful student's career prospects. This programme is delivered in Sri Lanka at ICBT Campus and is the identical programme conducted in UK.

Entry Qualification
- Degree in Business or related areas
- Any other Degree or Equivalent + 2 Years Working experience.
- DBF + 2 Years of Banking service
- Any other part qualification with not less than 5 Years of Managerial level work experience would be considered.

- Classes only on Sundays
- Hurry-up to claim early-bird discount

REGISTRATION NOW ON FOR SEPTEMBER INTAKE - 2018

Teaching Excellence Framework TEF Silver
Cardiff Metropolitan University has been awarded the Silver Teaching Excellence Framework (TEF) rating in the recent results published by the Higher Education Funding Council for England (HEFCE) - UK.

ICBT CAMPUS JAFFNA
EQAA
National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
More Information
0770 746 553
merojan@icbtcampus.edu.lk

# மன்னார் சதொச மனித புதைகுழியில் வெட்டுத்தழும்புடன் மண்டையோடு மீட்பு

(மன்னார்)

மன்னார் சதொச அகழ்வுப் பணியின் போது நேற்றையதினம் மண்டையோடு ஒன்றின் பகுதியில் வெட்டுத் தழும்பு ஒன்று காணப்பட்டது. வெட்டுத் தழும்புடன் கூடிய மண்டையோட்டின் வெட்டானது பிரேத பரிசோதனையின் போது ஏற்பட்டதா? அல்லது கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்ட போது ஏற்பட்டதா? என்பது தொடர்பான கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன.



மன்னார் சதொச வளாகத்தில் தொடர்ச்சியாக சந்தேகத்திற்கு இடமான மனித எச்சங்கள் மீட்கப்பட்டு வருகின்றன. மனித எச்சங்களை அப்புறப்படுத்தும் பணிகளின் போதும் தொடர்ச்சியாக புதிய மனித எச்சங்கள் அடையாளப்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறாக புதிய மனித எச்சங்கள் அடையாளப்படுத்தப்பட்டு வருகின்றமையினால் அகழ்வுப்பணிகள் முடிவின்றி தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. நேற்று 66 ஆவது தடவையாக குறித்த வளாகத்தில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்றன.

விசேட சட்ட வைத்திய அதிகாரி மற்றும் தொல்லியல்துறை பேராசிரியர் தலைமையில் அகழ்வுப்பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இதுவரை குறித்த வளாகத்தில் 120 மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டதுடன் 114 மனித எச்சங்கள் குறித்த வளாகத்தில் இருந்து அப்புறப் படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு நாள் அகழ்வுப் பணியின்போதும் புதிதாக மனித எச்சங்கள் அடையாளப்படுத்தப்படுவதனால் அப்புறப் படுத்தும் பணிகளை முழுவதுமாக முடிப்பதில் தாமதம் காணப்படுகின்றது.

இந்நிலையில் நேற்றைய அகழ்வுப்பணிகளின் இறுதி நேரத்தில் மீட்கப்பட்ட மண்டையோடு ஒன்றின் பகுதியில் வெட்டுத் தழும்பு ஒன்று காணப்பட்டமை அவதானிக்கப்பட்டுள்ளது. குறித்த வெட்டுத் தழும்புடன் உள்ள மண்டையோட்டின் வெட்டானது பிரேத பரிசோதனையின் போது ஏற்பட்டதா? அல்லது கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்ட போது ஏற்பட்டதா? அல்லது வேறு விதமாக ஏற்பட்டதா? என்பது தொடர்பான விடயங்கள் இதுவரை தெரிவிக்கப்படவில்லை. (2)

# தாதியர்கள் பணிப்புறக்கணிப்பு

(பனிக்கன்குளம்)

வடக்கு மாகாணம் தழுவிய ரீதியில் வைத்திய சாலைகளில் கடமையாற்றுகின்ற தாதியர்கள் மேலதிக நேரக் கொடுப்பனவுநிலுவை இதுவரை வழங்கப்படவில்லை என தெரிவித்து தாதியர்கள் நிறைவு காண் துணை மருத்துவ சேவையினருடன் இணைந்து நேற்று ஒரு நாள் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில் மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் அரச வைத்தியசாலைகளில் கடமையாற்றுகின்ற தாதியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

07.01.2016 தொடக்கம் 31.12.2016 வரையான காலப்பகுதிக்கான மேலதிக நேரக் கொடுப்பனவு நிலுவை வழங்கப்படவில்லையென தெரிவித்தே குறித்த பணிப்பகிஷ்கரிப்பு நடைபெற்றது.

இதன் காரணமாக நோயாளர்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்தனர்.

வைத்தியசாலையில் பல்வேறு சேவைகள் முடக்கப்பட்டிருந்த போதிலும் அவசர சிகிச்சைகளில் தாதியர்கள் சேவையில் ஈடுபட்டிருந்தனர்.

உரிய தீர்வு விரைவில் கிடைக்கவிடின் நாடாளாவிய ரீதியில் பணிப் புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக வடமாகாண அரச தாதிய உத்தியோகத்தர் சங்கத்தினர் தெரிவித்தனர். (2-281)




# வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரியின் நுழைவாயில் திறப்பு

(பனிக்கன்குளம்)

வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரியின் நுழைவாயில் திறப்பு விழா நேற்று கல்லூரியின் அதிபர் க.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநரின் உதவி செயலாளர் எஸ்.இ.ஜெ. செல்வநாயகம் கலந்துகொண்டிருந்தார். அமரர்களான நல்லதம்பி பாக்கியம் ஆகியோரின் ஞாபகார்த்தமாக அவர்களின் உறவினர்களால் பத்து இலட்சம் ரூபா செலவில் ஓமந்தை மத்திய




கல்லூரியின் நுழைவாயில் நிர்மாணிக்கப்பட்டு மாணவர்களின் பாவனைக்காக இன்று கையளிக்கப்பட்டது.

பிரதம விருந்தினர் மற்றும் அதிதிகளால் நுழைவாயில் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

நுழைவாயில் ஸ்தாபகர்களின் குடும்ப உறுப்பினர்களால் கல்லூரி நுழைவாயில் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டதுடன், பாடசாலை மாணவ,மாணவியருக்கு துவிச்சக்கர வண்டி, பாதணிகள், அப்பியாசப் புத்தகங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (2-281)

# மன்னார் வைத்தியசாலையில் வைத்தியர்கள் கடமையாற்ற வருவதற்கு தயக்கம்

## தாக்குதல், அச்சுறுத்தல் காரணம்–வடக்கு மாகாண சுகாதார அமைச்சர்

(மன்னார்)

வைத்தியர்கள் மீதான தாக்குதல் மற்றும் அச்சுறுத்தல் போன்ற சம்பவங்களின் காரணமாக தென் பகுதியில் இருந்தும் ஏனைய மாகாணங்களில் இருந்தும் வைத்தியர்கள் மன்னார் வைத்தியசாலைக்கு கடமையாற்ற வருவதற்கு தயக்கம் காட்டுகின்றனர் என வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஜீ.குணசீலன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் பிரசவ விடுதியில் கடமையில் இருந்த வைத்திய அதிகாரியையும், பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் மீதும் நேற்றுக்காலை தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் போது வடக்கு சுகாதார அமைச்சர் வைத்தியர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்ட நிலையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் நேற்று முன்தினம் இரவு கர்ப்பிணித்தாய் ஒருவர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் அறுவைச்சிகிச்சை மூலம் குழந்தையை பிரசவித்துள்ளார். எனினும் குறித்த குழந்தை மருத்துவ காரணங்களினால் உயிரிழந்தது.

குறித்த குழந்தையின் உயிரிழப்பு தொடர்பான விடயங்கள் ஆராயப்பட்டு வருகின்றன.

எனினும் நேற்று அவருடைய கணவரும், உறவினர் ஒருவரும் பிரசவ விடுதியில் உள்ள வைத்திய அதிகாரியையும், பாதுகாப்பு உத்தியோகத்தரையும் தாக்கியுள்ளனர்.இதனால் இங்கு ஒரு குழப்ப நிலை ஏற்பட்டு மன்னார் பொது வைத்தியசாலையின் அனைத்து மருத்துவ உத்தியோகத்தர்களும் 24 மணி நேர பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்றுக்காலை 8 மணி முதல் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணி வரை பணிப்பகிஷ் கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

தங்களுடைய மேலதிக் நடவடிக்கைகளுக்காக தாய்ச் சங்கத்தின் ஆலோசனைக்காக காத்திருக்கின்றார்கள்'. குறித்த சம்பவம் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது.

காரணங்கள் எதுவாக இருந்தாலும் கடமை நேரத்தில் ஒரு வைத்தியர், பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆகியோர் மீதான தாக்குதல் கண்டிக்கப்பட வேண்டிய விடயம்.இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும்.

எனவே குறித்த பிரச்சினைகளுக்கு உரிய நடவடிக்கைகளை வைத்திய சாலை நிர்வாகம் மேற்கொள்ளும்.எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நிறுத்தப்பட வேண்டும். எனவே சுகாதார அமைச்சர் என்ற வகையில் குறித்த சம்பவத்தை வன்மையாக கண்டிக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

# மாந்தை கிழக்கில் ஏற்பட்டிருக்கும் நீர்ப்பற்றாக்குறையை தீர்க்க முன்வாருங்கள்

## பிரதேச சபை தவிசாளர் அழைப்பு

(பனிக்கன்குளம்)

மாந்தை கிழக்கில் ஏற்பட்டிருக்கும் நீர்ப்பற்றாக் குறையை தீர்க்க சம்பந்தப்பட்டவர்கள் முன்வருமாறு மாந்தை கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தயானந்தன் அழைப்பு விடுத்துள்ளார்.

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட கொல்லவிளான்குளம் பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தின் 36 ஆவது மாதிரிக் கிராமத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இந்த பிரதேசத்தில் மிக முக்கிய பிரச்சினையாக உள்ளது குடிநீர் பிரச்சினை. எமது பகுதியில் நேற்று ஒரு நாள் தான் மழை தூறியுள்ளது. எம்மை நீர் பற்றாக குறை வரட்சி வாட்டி வருகிறது. நாங்கள் நீரை வழங்குவதற்கு எம்மாலான வளங்களை பயன்படுத்தி பிரதேச செயலகம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ பிரிவினருடன் இணைந்து செய்து வருகிறோம்.

இதுவரை நாம் 46 தண்ணீர் தாங்கிகளை வைத்து 5 பவுசர்களை கொண்டு நீர் வழங்கி வருகிறோம். எம்மால் முடியாத அளவில் உள்ளது. இந்த மக்களுடைய தேவைக்கான நீரை வழங்குவதற்கு கடினமாக உள்ளது.

ஆனால் இங் குள்ள ஊடகங்கள் வாயி லாக அழைப்பு விடுக்கிறேன். அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், செல்வந்தர்கள், உதவிவழங்குபவர்கள்உதவி செய்வதாக இருந் தால் மிக விரைவாக எமது மாந்தை கிழக்கு பிரதேச மக்களுக்கு உதவ முன்வாருங்கள்.

நாங்கள் நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையிடம் உதவி கோரியுள்ளோம். அவர்களால் பல கோடி ரூபா ஒதுக்கப்பட்டும் இது வரை எம்மிடம் கிடைக்கவில்லை இன்று சம்பந்தப்பட்டவர்கள், அமைச்சர்கள், அதிகாரிகள் ஆகியோருக்கு ஒரு அழைப்பை விடுக்கிறேன். இரண்டு வருடமாக மழையின்றி கிணற்று நீர் வற்றி செல்கின்ற இந்தப் பிரதேசத்தில் நீர்ப்பற்றாக் குறையை நிவர்த்தி செய்ய முடியாத நிலை தோன்றியுள்ளது. மிகவும் கஷ்டப்படுகிறோம். எமது வளங்களை பயன்படுத்தி, எம்மாலான வளங்களை பயன்படுத்தி நீர் விநியோகத்தை மேற்கொள்கிறோம்.ஒரு சில கிராமங்களில் இருந்த நீர் பற்றாக்குறை இப்போது மாந்தை கிழக்கு முழுவதுமாக ஏற்பட்டுள்ளது. வரட்சி வாட்டி எடுக்கிறது.

எனவே உதவி வழங்குநர்கள் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களும் அதிகாரிகளும் எமக்கு உதவி மாந்தை கிழக்கின் நீர்ப்பற்றாக்குறையை தீர்க்க முன்வருமாறு அழைப்பு விடுக்கிறேன் என்றார். (2-281)

# நீர் விநியோகத்தடை பற்றிய அறிவித்தல்

(கிளிநொச்சி)

தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் கடும் வரட்சி காரணாக நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினரின் நீர் பெறப்படும் மூலகங்களில் அதிகளவில் வேறுபாடுகள் அவதானிக்கப்படுவதனால் சுத்திகரிக்கப்பட்ட நீர் விநியோகத்திற்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எனவே பாவனையாளர்கள் நீரினை வீண் விரயம் செய்யாது மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்தும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இதனால் இன்று முதல் இரு நாட்களுக்கு ஒரு தடவை நீர் விநியோகம் மேற் கொள்ளப் படும். மேலும் எதிர்பாராத விதமாக முன் அறிவித்தலின்றி நீர் விநியோகத்தடை ஏற்பட சாத்தியக் கூறுகள் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது என பிராந்திய முகாமையாளர் எந்திரி ஏ.ஜெகதீசன் அறிவித்துள்ளார். (2)

# கடமை நேரத்தில் வைத்திய அதிகாரி மீது தாக்குதல்; வைத்தியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு

## மன்னார் வைத்தியசாலையில் சம்பவம்



(மன்னார்)

மன்னார் பொது வைத்தியசாலையின் பிரசவ விடுதியில் கடமையில் இருந்த வைத்தியர் ஒருவர் மீது நேற்றுக்காலை தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் குறித்த சம்பவத்தை கண்டித்து வைத்தியசாலையின் வைத்தியர்கள் ஒரு நாள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

மன்னார் பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் நேற்று முன் தினம் புதன்கிழமை இரவு கர்ப்பிணித்தாய் ஒருவர் அவசர சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

பின்னர் அறுவைச்சிகிச்சை மூலம் குழந்தையை பிரசவித்துள்ளார். எனினும் குறித்த குழந்தை உயிரிழந்தது.

இந்த நிலையில் நேற்று காலை குறித்த தாயை பார்வையிடச் சென்ற கணவர் மற்றும் உறவினர் ஒருவரும், பிரசவ விடுதியில் கடமையில் இருந்த வைத்திய அதிகாரியை தாக்கியுள்ளதோடு.பாதுகாப்பு உத்தியோகத்தரையும் தாக்கியுள்ளனர்.

தாக்குதல் சம்பவத்தை தொடர்ந்து குறித்த இருவரையும் உடனடியாக மன்னார் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதனையடுத்து வைத்திய அதிகாரி மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்களை கண்டித்து நேற்று வியாழக்கிழமை காலை 8 மணிமுதல் வைத்தியசாலை வைத்தியர்கள் ஒருநாள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

எனினும் வைத்தியசாலைக்கு வரும் மக்களின் நலனை கருத்தில் கொண்டு அவசர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை மன்னார் வைத்தியசாலைக்கு சென்ற வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஜீ.குணசீலன் மன்னார் பொது வைத்தியசாலையின் பணிப்பாளர், உதவிப்பணிப்பாளர் மற்றும் வைத்தியர்களுடன் அவசர கலந்துரையாடல்களை மேற்கொண்டார். மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2)

# திருமுறிகண்டி இந்து வித்தி மாணவிகளுக்கு சீருடைத்துணிகள்



(பரந்தன்)

திருமுறிகண்டி இந்து வித்தியாலய மாணவிகளுக்கு இலவச சீருடைத்துணிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தில் கல்வி கற்கின்ற 75 மாணவிகளுக்கு இலவச சீருடைத் துணிகள் வடக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கணேசநாதனால்நேற்று வழங்கி வைக்கப்பட்டது.

சீருடைத் துணிகளை வடக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கணேசநாதன் தனது சொந்த நிதியில் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் கிளிநொச்சி, முல்லைத்தீவிற்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர், மாங்குளம் பொலிஸ் நிலைய பொலிஸார்,பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-312)

# குடிநீர் பெறுகின்ற கிணற்றின் வெடிப்புக்களை சீர்செய்க!

(கிளிநொச்சி)

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு சொந்தமான ஏ9 வீதியில் இயக்கச்சி சந்தியிலிருந்து தெற்கு பக்கமாக சுமார் இருநூறு மீற்றர் தொலைவில் வீதியோரமாக நீண்டகாலமாக அப்பிரதேசம் மக்களாலும் போக்குவரத்தில் ஈடுபடும் மக்களும் அவ்விடத்தில் தரித்து நின்று குடிநீர் பெறுதல் மற்றும் நீர்த்தாங்கி மூலம் நீரை பிற இடங்களுக்கு கொண்டு சென்று விநியோகிப்பதற்கும் பயன்படுத்திய பொதுக் கிணறு கடந்த சில வருடங்களாக பெரிய உடைவு ஏற்பட்டு பயன்படுத்த முடியாது காணப்படுகின்றது.

இது தொடர்பாக தாம் பிரதேச சபை செயலாளரிடம் கடித மூலமும் நேரடியாகவும் பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் இதுவரை எந்தவித பலனும் கிடைக்கவில்லையென அக்கிணற்றை பயன்படுத்தும் அருகிலுள்ள குடியிருப்பாளர்கள்,வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

புதிதாக நியமனம் பெற்ற சபை தலைவர் மற்றும் உறுப்பினர்கள் உரிய கவனமெடுத்து சீர்செய்து தருமாறு அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2)

# குழாய் வழி குடிநீர் தரமற்றது பொதுமக்கள் குற்றச்சாட்டு



குழாய் வழி ஊடாக தங்களது வீடுகளுக்கு விநியோகிக்கப்படுகின்ற நீரை போத்தல்களில் பெற்று அதனை கிணற்றில் இருந்து பெறப்படுகின்ற நீருடன் ஒப்பிடும் போது வேறுபாடு தெட்டத் தெளிவாகத் தெரிகிறது.

இது குடிப்பதற்கு உகந்த நீர் அல்ல எனவும் பொது மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(பரந்தன்)

கிளிநொச்சி நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் ஊடாக வழங்கப்பட்டு வருகின்ற குடிநீர் குடிப்பதற்கு உகந்த சுத்தமான நீர் அல்ல. ஒரு வித நிறத்துடன் காணப்படுகின்றது என பொது மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இரணைமடுகுளத்து நீர் ஒருவித பச்சை நிறத்தில் காணப்படுகிறது.

எனவே குழாய் வழி மூலம் விநியோகிக்கப்படுகின்ற நீரும் குளத்து நீரை விட குறைவான பச்சை நிறத்தில் காணப்படுகிறது என்றும் பொது மக்கள் குறிப்பிடுகின்றனர். (2-312)

## மணல் ஏல விற்பனை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவுமாவட்ட நீதவான் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடைமையாக்கப்பட்ட மணல் ஏல விற்பனை எதிர்வரும் 19ஆம் திகதி புதன் கிழமை காலை 9 மணிக்கு முல்லைத்தீவு நீதிமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (2)



முல்லைத்தீவு உடையார்கட்டு கமநல சேவை நிலையத்தின் ஏற்பாட்டில் 100 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் உடையார்கட்டு மகா வித்தியாலயத்தில் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் நடராசா சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெற்றபோது...

# கால்நடைகளை உரிமையாளர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும்

## கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவில், கடற்படையினர் மக்களின் காணிகளை மட்டும் கையகப்படுத்தாமல், மக்களுக்கு ஜீவனோபாயத்துக்காக வழங்கப்பட்ட மாடுகளையும் கையகப்படுத்தி வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வட்டுவாகல் கடற்படைத் தளம் அமைந்துள்ள 617 ஏக்கர் காணிக்குள், சுமார் நூறு மாடுகள் அகப்பட்டுள்ளன. அவற்றை மீட்டுத்தருமாறு கடந்த இரண்டு ஆண்டுகளாக, மாவட்டச் செயலகம் ஊடாக கால்நடை உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதையடுத்து, முகாம் பகுதிக்குள் அகப்பட்டுள்ள கால்நடைகளைப் பிடிப்பதற்கு கடற்படையினர் அனுமதித்தனர். அதனைத் தொடர்ந்து கால்நடைகளைப் பிடிப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்று சுமார் 10 மாடுகள் கூட பிடிக்கப்படவில்லை.

இதையடுத்து, அந்த முயற்சி கைவிடப்பட்டது. அது குறித்து கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் தெரிவிக்கையில்,

கடற்படை முகாமுக்குள் அகப்பட்டுள்ள கால்நடைகளைப் பிடிப்பதற்கு முகாம் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அதற்கான அனுமதி பெறப்பட்டது.

முதலில் தடம் வைத்து பிடிக்க முயன்ற போது, ஒரு மாடு மட்டுமே அகப்பட்டதாகவும் அதன் பின்னர் நேரடியாகவே துரத்திப் பிடித்த போது, 7 மாடுகள் மட்டுமே பிடிக்க முடிந்ததாகவும் அவர் கூறினார்.

இதையடுத்து, மாடுகளைப் பிடிப்பவர்கள் தமது பிடி கூலிக்கு பொருந்தாதெனக் கைவிட்டுச் சென்றதாகக் குறிப்பிட்டதுடன், இதன் காரணத்தாலேயே குறித்த பணி தடைப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இருப்பினும், மீண்டும் கடற்படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு, அவற்றைப் பிடிப்பதற்கான மாற்று ஏற்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொண்டு, கால்நடைகளைப் பிடித்து, அவற்றை அதன் உரிமையாளர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படுமென, அவர் மேலும் கூறினார். (2-281)

# வவுனியா வர்த்தக சங்க அலுவலகம் திறந்து வைப்பு



(பனிக்கன்குளம்)

வவுனியா வர்த்தக சங்கத்தின் புதிய அலுவலகத் திறப்பு விழா நேற்று முன் தினம் முற்பகல் 10.30 மணியளவில் வர்த்தக சங்கத்தின் தலைவர் சுஜன் சண்முகராஜா தலைமையில் இடம் பெற்றது.

பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வவுனியா, மன்னார் மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அனுர அபயவிக்கிரம வர்த்தக சங்கத்தின் பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்து வைத்ததுடன் அலுவலகத்தை பிரதி பொலிஸ்மா அதிபருடன் இணைந்து வவுனியா நகர சபையின் தலைவர் இராசலிங்கம் கௌதமன் நாடாவை வெட்டி திறந்து வைத்தார்.

வர்த்தகர்களின் நலனை கருத்தில் கொண்டு வவுனியாவில் வர்த்தகர்களுக்கு பொலிஸ் நிலையத்தினூடாக தீர்க்கப்பட வேண்டிய முறைப்பாடுகளை வர்த்தக சங்கத்தின் ஊடாக அணுகும் பட்சத்தில் வர்த்தக சங்கத்திற்காக நியமிக்கப்பட்டுள்ள விஷேட பொலிஸ் அதிகாரியின் மூலமாக விரைவாக தீர்வு பெற்றுத் தருவதாக வவுனியா மற்றும் மன்னார் மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் உறுதிமொழி வழங்கியதாக வர்த்தக சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (2-250-281)

# பொன்னகர் மக்களின் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க நீர்த்தாங்கிகள்





(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்தின் பொன்னகர் மக்களின் குடிநீர் பிரச்சினைக்கான தீர்வுக்கு லண்டனில் இருந்து இயங்கி வரும் V4U UK தொண்டர் நிறுவனத்தினால் கிளிநொச்சி பொன்னகரில் ஏற்பட்டுள்ள வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்களின் வேண்டுகோளுக்கு அமைவாக நேற்று முன்தினம் மூன்று நீர்த் தாங்கிகள் வழங்கி வைக்கப்பட்டது. இம் மக்கள் கிளிநொச்சியில் ஏற்படுகின்ற ஒவ்வொரு வரட்சியிலும் பாதிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-312)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# இனங்களின் ஆக்கிரமிப்பு! சூழலியல் சார்ந்த ஓர் பார்வை




Marble catfish (Clarias batrahus)
பளிங்கு கெழுத்தி மீன்/மாபிள் கெழுத்தி மீன்

**2. Marble catfish (Clarias batrahus) பளிங்கு கெழுத்தி மீன்/மாபிள் கெழுத்தி மீன்**

வட பிரதேசத்திற்கு அறிமுகமாகிக்கொண்டிருக்கும் மீனினங்களில் இதுவும் முக்கியமானதாகும். அலங்கார நீரில் வளர்ப்பு நிலையங்களில் விற்பனை செய்யப்படுகிறது. மென்சிவப்பு மற்றும் கறுப்பு நிறமுடைய இம் மீன் பொதுவாக 27 cm நீளம் வரை வளரும்.

இதன் வாயைச்சூழ 4 சோடி தொடுமுளைகள் காணப்படும். செதிலற்ற உடலானது மாபிள் போன்று தெளிவாக தென்படும். பொதுவாக மண்ணிறம்/ சாம்பல் நிறத்தையும் மென்சிவப்பு நிறத்தையும் கொண்டிருக்கும். நீரின் அடித்தளம் மற்றும் நீர் நிரலில் நிலைக்குத்தாகவும் நிற்கக்கூடியது. இதனால் அலங்கார மீன்வளர்ப்பில் முக்கியத்துவம் பெறுகின்றது. எனினும் ஊனுண்ணியான இம் மீனினம் இயற்கை வாழிடங்களில் பரம்பலடைவது அவ்வாழிடங்களுக்கு பெரும் அச்சுறுத்தலாய் உள்ளது. இது இலங்கையின் கண்டி மற்றும் கொழும்பைச் சுற்றியுள்ள ஆறுகள், அருவிகள், ஏரிகள், கால்வாய்களில் காணப்படுகிறது. தற்போது வட பகுதியிலும் அறிமுகப்படுத்தப்படுவதால் இயற்கை வாழிடங்களுக்கு பரவாது தடுக்கப்படல் வேண்டும்.




Giant African Snail (Lissachatina fulica)
பாரிய ஆபிரிக்க நத்தை

**3. Giant African Snail (Lissachatina fulica) பாரிய ஆபிரிக்க நத்தை**

பாரிய நத்தை இனங்களில் ஒன்றாகிய இது ஏறத்தாழ 20cm வரை வளரக்கூடியது. முழுமையாக வளர்ந்த நத்தை ஓடு 7 - 9 சுருள்களைக் கொண்டிருக்கும். இவ்வோட்டின் நிறம் பொதுவாக மண்ணிறமாகும்.

இலங்கையைப் பொறுத்தளவில் நாடு முழுவதும் இதன் பரம்பல் அவதானிக்கப்பட்டுள்ளது. உலகளாவிய ரீதியில் விவசாய நிலங்களில் முக்கியமான பீடையாக உள்ளது. இதனைக் கட்டுப்படுத்த இயந்திர முறை மற்றும் எரித்தல் பரிந்துரைக்கப்பட்டுள்ளதுடன் இரசாயன பீடை கொல்லிகளும் பயன்படுத்தப்படுகின்றன. இந்நத்தையானது எப்போது எமது பகுதிக்கு அறிமுகப்படுத்தப்பட்டது என அறியமுடியவில்லை. ஆயினும், பல வருடங்களாகவே அவதானிக்கப்படுகிறது. தரைக்குரிய நத்தை இனமாகிய இது இலங்கையில் வீட்டுத்தோட்டங்கள், சிதைவடைந்த காடுகள் மற்றும் விவசாய நிலங்களில் பீடையாக உள்ளது.



Golden Apple snail (Pomacea diffusa)
பொன்னிற அப்பிள் நத்தை

**4. Golden Apple snail (Pomacea diffusa) பொன்னிற அப்பிள் நத்தை**

இந்நத்தை இனம் 4 - 5 cm வரை வளரக்கூடியது. ஓட்டின் நிறம் பொதுவாக மண்ணிறமாக அல்லது பொன் மஞ்சளாக இருக்கும். பல்வேறுபட்ட தாவரங்களை உணவாக உட்கொள்வதால் விவசாய நிலங்களுக்கு அச்சுறுத்தலாய் உள்ளது. இம்மீனினமும் அலங்கார வளர்ப்புக்காக அறிமுகப்படுத்தப்பட்டது. இதனைக் கட்டுப்படுத்த இயந்திர முறை பரிந்துரைக்கப் பட்டதாயினும், இரசாயன முறையும் உள்ளது.



Red eared slider turtle (Trachemys scripta)
சிவப்புக் காதுடைய ஆமை

**5. Red eared slider turtle (Trachemys scripta) சிவப்புக் காதுடைய ஆமை**

ஏறத்தாழ 12-30 cm வரை வளரக்கூடிய இவ்வினம் தலையின் இருபுறமும் காணப்படும் சிவப்பு நிறப் புள்ளிகளால் இனங் காணப்படுகிறது.


இது பெரும்பாலும் கொழும்பு, களுத்துறை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் நன்னீர் நிலைகளை ஆக்கிரமித்துள்ளது.

**6. Rainbow trout (Oncorhynchus mykiss) வானவில் மீன்**

வானவில் மீன் என அழைக்கப்படும் இம்மீனினமும் உணவுக்காகவே இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இது ஏறத்தாழ 45-60 cm வரை வளரக்கூடியது.

இயற்கை வாழிடங்களான மலைநாட்டு நீர் நிலைகளில் இதன் பரம்பல் அவதானிக்கப்பட்டுள்ளது.



Rainbow trout (Oncorhynchus mykiss)
வானவில் மீன்

மேற்குறித்த ஆக்கிரமிப்பு உயிரினங்கள் மனிதனால் வேறு தேவை கருதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

எனினும், தற்போது இலங்கையின் இயற்கை வாழிடங்களிலும் பரம்பலடைந்துள்ளன.

ஏற்கனவே பரம்பலடைந்த இவ்வினங்களை கட்டுப்படுத்துவதுடன், புதிய இனங்களை அறிமுகப்படுத்தும்போது அவற்றின் தோற்றம், பரம்பல், உயிரியல் சார்ந்த தரவுகள் ஆராயப்படல் வேண்டும். அப்போதுதான் எமது சூழலின் உயிர்ப்பல்வகைமையை பேண முடியும்.

கலாநிதி.வி.சா.துளசிதா
சிரேஷ்ட விரிவுரையாளர்,
விலங்கியல்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

---

**புதிர் 211 க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

கார்த்திகேயன் சசிதரன்
சர்வோதய வீதி,
ஆவரங்கால் மேற்கு.

**புதிர் 211 க்கான கேள்வியும் விடையும்:**
இலங்கையின் தேசிய பறவையின் விஞ்ஞானப் பெயர் என்ன?

**Gallus lafayettii**

---

## வாரத்திற்கு ஒரு புதிர்! 212

DNA இன் கட்டமைப்பை கண்டறிந்த விஞ்ஞானிகளின் பெயர் என்ன?

Dr. வி.சா.துளசிதா
விலங்கியல்துறை,
விஞ்ஞானபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.


புதிர் 212 இற்கான விடைகளை 17.09.2018 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு A ஆசிரியரிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 212**

சரியான விடை:-..............................
முழுப்பெயர்:-..............................
முகவரி:-..............................
தொ.பே. இல:..............................
கையொப்பம்:..............................

## நல்லூர்க் கந்தனுக்கு இன்று சப்பறத் திருவிழா



## காத்திடுவாய் வேலா...

கவி பாடக் கனவிலே காட்சி தந்த கந்தா
கதிர் வேலே உனைப்பாட எந்தனுக்கு வரந்தா
நிலை பெற்று நாம் வாழ அடியெடுத்த குமரா
நில்லைபேறாய் உயர்வு பெற முகம் பாராய் அமரா
வேல் போற்ற சொல் தந்த மால் மருகா கடம்பா
மேல் நோக்க வரம் தருவாய் தமிழோனே மயிலா
தினம் பாடித் துதிக்கின்றேன் ஓடிவா சண்முகா
மனம் நாடி வரம் தந்து காத்திடுவாய் வேலா

பொன் சுபா, சங்கானை

## மனம் உருக நீ மயிலேறி வா முருகா!

பல்லவி

மனம் உருக நீ மயிலேறி வா முருகா
மதி மயக்கம் நீங்க அருள் புரிவாய் ஐயா

அனுபல்லவி

விதி விதியென வந்த வினையினை,உந்தன்
வேலுடன் வந்து களைந்திடுவாய் முருகா

சரணம்-1

வெற்றிமேல் வெற்றி வாழ்வினில் வந்திட
வள்ளி தெய்வானையுடன் வலம் வருவான் அழகன்
பாரினில் தினம் உன்னை மறவாதிருக்க
ஆறுமுகம் காட்டி எனை நீ ஆள் ஷண்முகா

சரணம்-2

சரவண பொய்கையில் கமலத்தில் தோன்றிய
சிவகுருநாதா சுவாமிநாதா கந்தா
போதுமையா இந்த பொய்யான வாழ்வு
வேண்டுமையா உந்தன் மெய்யான பொற்பாதம்

மிருதங்க வித்துவான்
பிரம்மஸ்ரீ க.சுவாமிநாதன் சர்மா

## "நல்லை நகர் உறை ஞானப்பழம்"

அகிலமதனை அரைநொடியில் வலம் வந்து
அண்ணன்பெறவே ஈசனீந்த-பழம்
அறிவுக்கொரு அழகுமிகு அலங்காரப்பழம்
நாளுமொரு வண்ணமென- நல்லையில்
கண்டுதொழும் கற்பகத்தேன் பழம்
மாதிருவர் புடை சூழ நல்லை வீதியில்
எழுந்தருளும் தெவிட்டாத தீந்தமிழ்பழம்
பழனி பழனி என பக்தர் வாயில் ஒலித்திடும்
நல்லை நகர் உறை ஞானபழம்

வேலணை பாலா (ஜே.பி.)






## நல்லூர் ஆலயச் சூழலில்
## தெய்வீக இசையரங்கில் இன்று இசைக்கச்சேரி

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மஹோற்சவத்தை முன்னிட்டு இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை துர்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் தினமும் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 8.15 மணி வரை "தெய்வீக இசையரங்கு" நடைபெற்று வருகின்றது.

இதில் இன்று இசைக்கச்சேரிபாட்டு பொன்.ஸ்ரீவாமதேவன், வயலின் கா.குகபரன், மிருதங்கம் வ.ரமணா, கெஞ்சிரா நா.சிவசுந்தரசர்மா, கடம் கு.ரவிசங்கர்ஆகியோர்வழங்குவர். (இ)

## "சிங்கமுகாசூரன் வதம்" இசைப் பேருரை இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லை ஆதீன குருமூர்த்தி ஆலய மண்டபத்தில் நல்லை ஆதீன குரு மகா சந்நிதானத்தின் அருளாசியுடன் நல்லூர் சைவ மகா சபை நடத்தி வரும் "கந்தவேற்புராணம்" பற்றிய தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் இன்று மாலை 6.30 மணிக்கு நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு, மாவை ஆஸ்தான வித்துவான், கானகதாவாரிதி கலா பூஷணம் பிம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா "சிங்கமுகாசூரன் வதம்" பற்றி சிறந்த பக்கவாத்திய சகிதம் தெய்வீகத் தொடர் இசைப் பேருரை நிகழ்த்துவார். (இ)

## கந்தபுராண எழுச்சி விழா

(யாழ்ப்பாணம்)

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், "கந்தபுராண கலாசாரம் இந்த மண்ணின் அடையாளம்" என்ற தொனிப்பொருளில், நல்லூர்க் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டுக் கந்தபுராண வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் "கந்தபுராண எழுச்சி அருள்நெறி விழா-2018" நிகழ்வுகளை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்திலும் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்திலும் சிறப்புற முன்னெடுத்து வருகிறது.

அந்த வகையில், இருபத்து மூன்றாம் நாள் நிகழ்வுகள், இன்று வெள்ளிக்கிழமை, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில், பிற்பகல் 3.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை இணுவில் சிவகாமி அம்மன் குழுவினரின் பஜனை நிகழ்வும், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருமுன்னிலையில், இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில், யாழ்.மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்க, கோப்பாய் மற்றும் நல்லூர்ப் பிரதேச அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைப் பிரதி முதல்வர் ச.லலீசனின் "நாமேல் நடவீர்" எனும் தலைப்பிலான கந்தபுராணச் சிறப்புச் சொற்பொழிவும், பிரம்மஸ்ரீ க.சுவாமிநாதன் சர்மா குழுவினரின் இசை அர்ச்சனை சிறப்பு நிகழ்வாகவும் இடம்பெறும். பங்கு பற்றும் மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களும் பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படும். (இ-7)


## நல்லூர்க் கந்தனுக்கு இன்று சப்பறத் திருவிழா




## குறைகளைத் தீர்த்திட வா குமரா

நீல மயிலின் நிதம்விளை யாடும்
நெடுமால் மருகா நிமலா சரணம்
கோலக் குறமான் குலவும் அமலா
கூறும் அடியார் குறை தீர்த்திடவா
வேலாற் பகையை வெருட்டுத் தலைவா
வெற்றித் திருவே விளைவே சரணம்
ஆலின் இலையாம் அடியேன் இதயம்
அங்கே வருவாய் அமைதி அருள்வாய்
வாவா குமரா வளமே அருள்வாய்.

வேலணையூர் பஞ்சலிங்கம் நிதர்சன்.

## குமரன் இருக்குமிடம் நல்லூரே

குன்று தோறாடிய குமரன் இருக்குமிடம்
நல்லூரே எங்கள் நல்லூரே
வென்று சூரனின் உடல் கிழித்த வேலவன்
தொல்லூரே எங்கள் நல்லூரே
அகத்தியர்க்கு அருமைத் தமிழ் மொழிதனையே
உபதேசித்தான் தமிழை உபதேசித்தான்
செகமெல்லாம் செந்தமிழ் மொழி பரப்ப
சிறப்பித்தான் தமிழால் சிறப்பித்தான்

எஸ்.சிவானந்தராஜா,
பண்டத்தரிப்பு.

## நல்லைக் காவலன்

வேலணைந்த ஊராம்
வேலழகன் பேராம்
நீறணிந்த நெற்றியுடன்
நிற்கின்றான் முருகன்
நேரடியாய் அருள் சுரக்கும்
நிமலன் திருமகனே
காரிருள் போல் சூழ்ந்த
காசினியின் துன்பங்கள்-நீ
தேரேறும் போது-எம்
தேசத்தை விட்டோடும்.



கனே-பாக்கியன்.

## நல்லைக் குமரப் "பா"

அன்பர்க் கன்பன் அறுமுகவன்
அவனைப் பற்றிப் பின்செல்லத்
துன்பந் தொலையும் துயர்கலையும்
தொடரூழ் வினைகள் துவண்டுலையும்
இன்பம் பெருகும் இருள்கருகும்
இடுக்கண் இடுக்கண் பட்டேகும்
முன்னின் றென்று மெமையாளும்
முருகன் நல்லைக் குமரப்பா!

கலாபூஷணம்,
சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்




# பாரதம்

# பேறிவாளன் உள்ளிட்ட 7 பேரின் விடுதலை குறித்து முடிவெடுக்க தமிழக ஆளுநருக்கு அதிகாரம்

## உச்ச நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு



▲ முருகன் ▲ சாந்தன் ▲ பேரறிவாளன்
▲ நளினி ▲ ரவிச்சந்திரன் ▲ ராபர்ட் பயஸ் ▲ ஜெயகுமார்

(டில்லி) —

**முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் சிக்கி சிறையிலுள்ள பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரையும் விடுவிப்பது தொடர்பாக முடிவெடுக்க தமிழக ஆளுநருக்கு அதிகாரம் இருப்பதாக உச்ச நீதிமன்றம் நேற்று அதிரடித் தீர்ப்பு வழங்கியுள்ளது.**

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற பேரறிவாளன், முருகன், நளினி உட்பட 7 பேர் கடந்த 27 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். தனக்கு விதிக்கப்பட்ட ஆயுள் தண்டனையை நிறுத்தி வைக்க கோரி பேரறிவாளன் தரப்பில் தாக்கல் செய்த மனுவை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதாகி சிறையில் இருப்பவர்களை விடுதலை செய்ய மாநில அரசுக்கு அதிகாரம் உண்டு என தமிழக அரசும் உச்ச நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தது.

கருணை அடிப்படையில் 7 பேரையும் விடுவிக்க வேண்டும் என தமிழக அரசு சார்பில் தொடர்ந்து மத்திய அரசுக்கு கடிதம் எழுதப்பட்டது. ஆனால் அதனை மத்திய அரசு நிராகரித்தது. 7 பேரை விடுதலை செய்யும் விவகாரத்தில் ஜனாதிபதி ராம் நாத் கோவிந்தும் தமிழக அரசின் கோரிக்கை மனுவை நிராகரித்தார்.

ஜனாதிபதியின் நிராகரிப்பை எதிர்த்து பேரறிவாளன் உட்பட 7 பேரும் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். அதே சமயம் 7 பேரை விடுதலை செய்யும் தமிழக அரசின் முடிவை எதிர்த்து மத்திய அரசும் வழக்கு தொடர்ந்தது.

இந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம் நேற்றையதினம் முக் கியத்துவம் வாய்ந்த தீர்ப்பை வழங்கி உள்ளது. ராஜீவ் கொலை வழக்கில் தண்டனை அனுபவித்து வரும் பேர றிவாளன் உள்ளிட்ட 7 பேரை விடுவிப்பது தொடர்பாக முடிவெடுப்பதற்கு தமிழக ஆளுநருக்கு அதிகாரம் உள்ளது என்று உத்தரவிட்டுள்ளது.

இந்த விடயத்தில் தமிழக ஆளுநருக்கு தமிழக அரசு பரிந்துரை செய்யலாம் என்றும், அரசின் பரிந்துரையின் பேரில் ஆளுநர் இறுதி முடிவை எடுக்கலாம் என்றும் நீதிபதி ரஞ்சன் கோகாய் தலைமையிலான அமர்வு உத்தரவு பிறப்பித்தது. அத்துடன் மத்திய அரசு தொடர்ந்த வழக்கை முடித்து வைத்தது.

எனவே, 7 பேரையும் விடுவிப்பது தொடர்பாக ஆளுநரிடம் தமிழக அரசு ஏற்கனவே அளித்த மனு மீது ஆளுநர் விரைவில் முடிவு எடுப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. (7)

# உ.பியில் தொடரும் கனமழை! பலி எண்ணிக்கை 50 ஆகியது

(லக்னோ)

உத்தரப்பிரதேசம் மாநிலத்தில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கன மழையில் சிக்கி பலியானவர்களின் எண்ணிக்கை 50 ஆக அதிகரித்துள்ளது.

உத்தரப்பிரதேசம் மாநிலத்தில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த இரு தினங்களுக்கு முன்னர் பெய்த கனமழையில் சிக்கி 20 பேர் பலியாகினர்.

இந்நிலையில் கன மழையில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 50 ஆக உயர்ந்துள்ளது. மேலும் 15 பேர் காயமடைந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

தொடர்ந்து பலத்த மழை பெய்து வருவதால் கான்பூரில் உள்ள கங்கை ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. ஆற்றில் ஏற்பட்ட வெள்ளம்அபாய கட்ட அளவை தாண்டியுள்ளதால் கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து, கரையோர மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டு வருகின்றனர். கான்பூரில் கங்கை ஆற்றின் கரையோரத்தில் இருக்கும் 35இற்கும் மேற்பட்ட கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அங்கிருந்த பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர். (7)

# ரபேல் விமான ஒப்பந்தம் தொடர்பாக பாராளுமன்ற கூட்டுக்குழு விசாரணை இல்லை

## ராகுலின் கோரிக்கையை நிராகரித்தது மத்திய அரசு



(டில்லி)

ரபேல் விமான ஒப்பந்தம் தொடர்பாக பாராளுமன்ற கூட்டுக்குழு விசாரணை நடத்த வேண்டுமென்று வலியுறுத்திய ராகுல்காந்தியின் கோரிக்கையை மத்திய அரசு நிராகரித்துள்ளது.

இந்திய ராணுவத்துக்கு பிரான்ஸ் நாட்டின் ரபேல் நிறுவனத்திடம் இருந்து போர் விமானங்கள் வாங்கியதில் முறைகேடு நடந்து இருப்பதாக காங்கிரஸ் தலைவர் ராகுல்காந்தி குற்றம் சாட்டினார்.

பாராளுமன்றத்தில் நம்பிக்கை இல்லா தீர்மானத்தின் மீது பேசுகையில் ராகுல்காந்தி இதுபற்றி குறிப்பிட்டு பரபரப்பு ஏற்படுத்தினார். அவரது குற்றச்சாட்டுக்கு இராணுவ அதிகாரி நிர்மலா சீதாராமன் நேரடியாகவே மறுப்பு தெரிவித்து பேசினார்.

என்றாலும் ராகுல்காந்தியும், காங்கிரஸ் தலைவர்களுக்கும் ரபேல் போர் விமான ஒப்பந்த முறைகேடு பற்றி பேசி வருகிறார்கள். இந்த முறைகேடு பற்றி பாராளுமன்ற கூட்டுக்குழு விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று ராகுல்காந்தி வலியுறுத்தி வருகிறார்.

அவரது கோரிக்கையை மத்திய அரசு நிராகரித்து விட்டதாக நிதியமைச்சர் அருண் ஜெட்லி தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது.

ரபேல் போர் விமான ஒப்பந்தத்தில் முறைகேடு என்று அந்த கட்சிக்கு தவறான தகவல் தரப்பட்டுள்ளது.

பொய்யான குற்றச்சாட்டை காங்கிரஸ் தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கிறது. காங்கிரஸ் முதலில் தனது கட்சியின் நேர்மையை நிரூபிக்க வேண்டும். அறியாமை என்ற தொற்று நோயால் பாதிக்கப்பட்டு உள்ளது.

அந்த கட்சியில் ஒருவருக்கு புரிந்து கொள்ளும் தன்மை இல்லாவிட்டால் அந்த கட்சி முழுவதுக்குமே புரிந்து கொள்ளும் தன்மை இல்லாமல் போய்விடும்.

பா.ஜனதா அரசானது உள்நாட்டில் ராணுவ தளபாடங்கள் தயாரிப்பை ஊக்கப்படுத்தும் வகையில் உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்கிறது. சிலருக்கு இது தெரிந்திருக்கவில்லை.

இதில் குற்றம்சாட்டும் காங்கிரஸ் கட்சியை ஒட்டு மொத்தமாக அறியாமை தொற்றிக் கொண்டு உள்ளதுஎன மேலும் தெரிவித்தார். (7)

# ஆப்கானில் ...

## உயிரிழப்...




(காபூல்)

ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் உள்ள மல்யுத்தம் பயிற்சி மையம் ஒன்றில் நடைபெற்ற இரட்டை குண்டுவெடிப்பில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 20 ஆக உயர்ந

# ஜப்பானில் நி...

# 10பேர் பலி; ...



# ரோஹி...

# மியன்மார் சி... விடுவிக்குமாறு...

(யாங்கூன்)

மியன்மாரில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட ரொயிட்டர்ஸ் செய்திச் சேவையின் இரு ஊடகவியலாளர்களையும் விடுவிக்குமாறு கோரி, ஹொங்கொங்கில் அமைந்துள்ள மியன்மார் உதவித்தூதரகம் வரை ஆர்ப்பாட்ட பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது.

ஆசிய புகலிடக்கோரிக்கையாளர்கள் கூட்டுறவு சங்கம் மற்றும் ஹொங்கொங் சமூக குடியுரிமைக் கழகம் ஆகிய அமைப்புக்களின் உறுப்பினர்கள் இணைந்து நேற்று

# ல் இரட்டைக் குண்டுவெடிப்பு
# பு 20 ஆக உயர்ந்தது!



துள்ளது.

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் மல்யுத்தம் பயிற்சி மையம் அமைந்துள்ளது. இந்த மையத்தில் சிலர் நேற்று பயிற்சியில் ஈடு பட்டுக் கொண்டிருந்த னர்.

அப்போது அங்கு தற்கொலைப்படை பயங்கரவாதிகள் நுழைந்து திடீரென தாங்கள் கட்டியிருந்த வெடி குண்டை வெடிக்க செய்த னர்.

இந்த தாக்குதலில் 4 பேர் உடல் சிதறி பரிதாபமாக பலியாகியதாகவும். மேலும், 18 பேர் படுகாயம் அடைந்த னர். தகவலறிந்து அங்கு வந்த மீட்பு படையினர் காயமடைந் தவர்களை மீட்டு வைத்தியசாலையில் சேர்த்து சிகிச்சை அளித்து வருவதாக முதல்கட்ட தகவல் வெளியாகி இருந்தது.

இந்நிலையில், பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்திய பயிற்சி மையத்தில் மீட்பு குழுவினர் மற்றும் நிருபர்களை குறி வைத்து மீண்டும் ஒரு குண்டு வெடிப்பு நடந்தது.

இதில், அப்பகுதியில் செய்தி சேகரிக்க சென்ற நிருபர்கள் சிலர் உட்பட 20 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும் 70க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந் துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# ஜெருசலேமில் திறக்கப்பட்ட தூதரகத்தை மூடப்போவதாக பராகுவே அறிவிப்பு

## தூதரக உறவை முறித்து இஸ்ரேல் பதிலடி




(வோஷிங்டன்)

இஸ்ரேலுக்கான பராகுவே தூதரகம் ஜெருசலேமில் இருந்து மீண்டும் டெல் அவிவ் நகருக்கு மாற்றப்படும் என அந்நாடு அறிவித்ததால் பதிலடியாக அந்நாட்டுடன் தூதரக ரீதியிலான உறவை முறித்துக்கொள்ள இஸ்ரேல் முடிவு செய்துள்ளது.

யூத, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களின் புனித தலங்கள் அமைந்துள்ள ஜெருசலேம் நகரை இஸ்ரேல் தனது தலைநகர் என கருதி வந்தது. மற்ற நாடுகள் இதை அங்கீகரிக்காத நிலையில், அதிரடியாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேமை அங்கீகரித்து கடந்த டிசெம்பர் மாதம் அறிவிப்பு வெளியிட்டார். இந்த முடிவுக்கு எதிராக அரபு நாடுகள் போர்க்கொடி உயர்த்தின.

எனினும் அவற்றை பொருட்படுத்தாமல், இஸ்ரேல் நாட்டின் கிழக்கு ஜெருசலேம் நகரில் அமெரிக்க அரசு தனது புதிய தூதரகத்தை கடந்த மே மாதம் திறந்து ஒரு புதிய அரசியல் அடையாளத்தை அந்நகருக்கு அளித்தது. அமெரிக்காவை தொடர்ந்து கௌதமாலா நாட்டின் தூதரகம் ஜெருசலேம் நகரில் திறக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து, மூன்றாவதாக பராகுவே நாடும் ஜெருசலேம் நகரில் தனது புதிய தூதரகத்தை அதன் முன்னாள் ஜனாதிபதி ஹோராக்கியோ கார்டெஸ் மூலம் திறந்தது. ஆனால், அந்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு புதிய ஜனாதிபதியாக மரியோ அப்டோ என்பவர் அண்மையில் பதவியேற்றார்.

அவர், பாலஸ்தீன் மற்றும் இஸ்ரேல் விவகாரம் அமைதியான முறையில் பேசி தீர்க்கப்பட வேண்டும் எனக்கூறி ஜெருசலேமில் திறக்கப்பட்ட பராகுவே நாட்டு தூதரகத்தை மூடிவிட்டு மீண்டும் டெல் அவிவ் நகரில் திறப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என அறிவித்தார்.

பராகுவே புதிய ஜனாதிபதியின் இந்தத் திடீர் முடிவால் இஸ்ரேல் கடும் அதிருப்தி அடைந்துள்ளது.

இதனால், பராகுவே நாட்டில் இயங்கி வரும் தங்களது தூதரகம் மூடப்படும் என பதிலுக்கு பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் இந்த திடீர் நடவடிக்கையை சமத்துவம் அற்ற செயல் என பராகுவே ஜனாதிபதி மரியோ அப்டோ விமர்சித்துள்ளார். (7)

# நிலநடுக்கம்
# பலர் மாயம்

(டோக்கியோ)

ஜப்பானின் வடக்கு தீவான ஹொக்கைடோவை தாக்கிய இயற்கை பேரழிவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 10 ஆக அதிகரித்துள்ளதாக ஆசிய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

ஜப்பானின் வடக்கு தீவான ஹொக்கைடோவில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் பலர் காணாமல் போனதுடன். காயமடைந்துமுள்ளனர். (7)





# எதியோப்பியாவில் நிலச்சரிவால் 12 பேர் பரிதாபமாக உயிரிழப்பு



(அடிஸ் அபாபா)

எதியோப்பியாவின் தெற்கு பகுதியில் கனமழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 12 பேர் உயிரிழந்தனர்.


எதியோப்பியாவின் தெற்கு பகுதியில் கடந்த சில தினங்களாக கனமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக தாழ்வான பகுதிகளில் தண்ணீர் சூழ்ந்துள்ளது.

இந்நிலையில் டாவ்ரோ பிராந்தியத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை திடீரென நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. இதில் மூன்று வீடுகள் இடிந்து விழுந்தன. இடிபாடுகளில் சிக்கி 12 பேர் உயிரிழந்திருப்பதாகவும், 4 பேர் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டதாகவும் அரசு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

மாவட்ட காவல்துறை தலைவர் கூறுகையில், "நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களில் 10 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. மற்ற இருவரின் உடல்களை மீட்கும் பணி நடைபெற்று வருகிறது.

பலத்த காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்" என்றார்.

எதியோப்பியா தலை நகரில் கடந்த ஆண்டு மழைகாலத்தில் குப்பைமேடு சரிந்ததில் 115 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (7)



# றிஞ்யா இனஅழிப்பு

## சிறையிலுள்ள ஊடகவியலாளர்களை
## றது கோரிக்கை விடுத்து ஆர்ப்பாட்டம்




வியாழக்கிழமை இந்த ஆர்ப்பாட்ட பேரணியை முன்னெடுத்தனர்.

மியன்மார் அரசாங்கத்தினால் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கி சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் இரு ஊடகவியலாளர்களையும் விடுவிக்கு மாறும், ரோஹிஞ்யா முஸ் லிம்களை வெளியேற்றியது மியன்மார் அரசாங்கத்தின் திட்டமிட்ட இனச்சுத்திக ரிப்பாகும் என்றும் ஆர்ப்பாட் டக்காரர்கள் கோஷமெழுப்பினர்.

இதன்போது, மியன்மார் தலைவி ஆங் சான் சூகி யின் உருவப்படத்திற்கு கொம் புகள் மற்றும் நீண்ட பற் களை வரைந்து அரக்கி போன்ற தோற்றத்தினை ஏற்படுத்தி ஆர்ப்பாட்டக்காரர்கள் பதாகைகளை ஏந்தி போராட்டம் நடத்தினார். (7)



# மக்கள் கூட்டத்தைக் கண்டு அரசு அச்சமடைந்துள்ளது

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

அராஜக ஆட்சிக்கு முடிவு கட்டவேண்டும் என்பதற்காகவே மக்கள் ஜனநாயக வழியில் போராட தலைநகரை நோக்கி வந்தனர். ஆனால், பொலிஸார் அவர்களை வழிமறித்து கொழும்பு செல்லவிடாமல் தடுத்துள்ளனர். இதன்மூலம் அந்த மக்களின் ஜனநாயக உரிமையும் மறுக்கப்பட்டுள்ளது என கூட்டு எதிரணி பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஒன்றிணைந்த கூட்டு எதிர்க்கட்சியின் மக்கள் எழுச்சிப் பேரணியில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே நாமல் ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்ப்புப் பேரணி காரணமாக அரசாங்கம் மிகவும் பதற்றமடைந்துள்ளது. நாட்டின் அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் உள்ள பொலிஸாரை கொழும்புக்கு அழைத்து எமது ஜனநாயகப் போராட்டத்தை முடக்க சூழ்ச்சி செய்துள்ளனர்.

பல சவால்களுக்கு மத்தியிலே பாரிய மக்கள் வெள்ளம் கொழும்புக்கு வந்துள்ளது.

அரசாங்கத்தின் ஏமாற்று வித்தைகளுக்கு மக்கள் மேலும் ஏமாற மாட்டார்கள். எமது போராட்டத்துக்கு பொலிஸார் இடையூறு விளைவிப்பதன் ஊடாக தொடர்ந்து இந்த அரசாங்கத்தின் அடிமைகளாகவே பொலிஸார் செயற்படப் போகின்றனர்.

இதனை பொலிஸார் உணர வேண்டும் என நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார். (இ-7)

### மதுபானத்தைக்காட்டி கூட்டம் சேர்த்து

# நாட்டில் ஆட்சி மாற்றத்தை ஒருபோதும் ஏற்படுத்த முடியாது



## அமைச்சர் சஜித் காட்டம்

(கொழும்பு)

மதுபானத்தை அருந்தக் கொடுத்து கூட்டத்தை சேர்ப்பதால் நாட்டில் ஆட்சி மாற்றத்தை ஒருபோதும் ஏற்படுத்த முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் அமைச்சருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கொழும்புக்கு கூட்டத்தை அழைத்து வந்ததனூடாக அரசாங்கத்தை மாற்ற முடியுமா? ஜனாதிபதியை மாற்ற முடியுமா? பிரதமரை மாற்ற முடியுமா? ஜனாதிபதி தொடர்பில் தீர்மானிக்க நாள் ஒன்று வரும். அது இன்றைய தினம் அல்ல.

2020 ஆம் ஆண்டின் முற்பகுதியில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறும். அப்போதே நாட்டின் ஜனாதிபதி யார் எனவும் பிரதமர் யார் எனவும் அமைச்சர்கள் யார் எனவும் தீர்மானிக்கப்படும்.

கொள்ளைச் செயற்பாடுகளை நாட்டுக்குள் மீண்டும் உருவாக்குவதற்காகவே முன்னாள் ஜனாதிபதியும் பொது எதிரணியினரும் இன்று முயற்சிகளை மேற்கொண்டு போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர் என அமைச்சர் சஜித் மிகவும் காட்டமாகத் தெரிவித்தார். (இ-7)

# ரஷ்யா-இலங்கை இடையிலான உறவைப் பலப்படுத்த எதிர்பார்ப்பு

## தூதுவர் தயான் ஜெயதிலக தெரிவிப்பு





(மொஸ்கோ)

எதிர்காலத்தில் இரு நாடுகளுக்குமிடையிலான அரசியல்சார் இரு தரப்பு உறவைப் பலப்படுத்த எதிர்பார்த்துள்ளதுடன் ,இருதரப்பு நல்லுறவை வலுப்படுத்துவது தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்படும் என தயான் ஜெயதிலக தெரிவித்தார்.

ரஷ்யாவுக்கான இலங்கைத் தூதுவராக நியமனம் பெற்றுள்ள தயான் ஜெயதிலக, தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்துள்ளதாக ரஷ்யாவிலுள்ள இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது. (இ-7)

# போராட்டங்கள் எம்மைப் பாதிக்காது 2020க்குப் பிறகும் ஆட்சி தொடரும்



## ஐ.தே.க.உறுதி

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக மேற்கொள்ளப்படும் போராட்டங்கள் எவ்விதத்திலும் பாதிப்பினை ஏற்படுத்தாது. 2020 இற்கு பிறகும் ஆட்சியின்னை கொண்டு செல்லும் வலிமை ஐக்கிய தேசிய கட்சியிடம் காணப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் 72 ஆவது ஆண்டு நிறைவிற்கான நிகழ்வுகள் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் கட்சித் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெறவுள்ளது.

இது தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அகில விராஜ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்து நாட்டில் பாரிய அபிவிருத்திகளை மேற்கொண்டுள்ளன. ஆனால், அரசாங்கத்திற்கு எதிராக செயற்படுபவர்கள் அரசாங்கத்தின் அனைத்து விடயங்களையும் பொய்யாக பாவித்து விமர்சிப்பது இயல்பான விடயமாகும். இவ்விடயத்தில் தேசிய அரசாங்கம் ஒன்றும் விதிவிலக்கல்ல என்றும் அகில விராஜ் காரியவசம் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## எடைபோடுவதில் நீங்கள் எப்படி?

நம் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களை அடிக்கடி நினைவுபடுத்திப் பார்ப்பது நமக்கு பயன்தரவல்லது.

எந்தப் பரபரப்பும் வேலைகளும், தூக்கக் கலக்கமும் இல்லாத நேரமாகப் பார்த்துத் தேர்ந்தெடுங்கள். சௌகரியமாக அமர்ந்து கொள்ளுங்கள். பயணங்களில் வாய்ப்புக் கிடைத்தால் ஜன்னலோரம் கிடைக்கிறதா என்று பாருங்கள்.

ஆயிற்றா?சரி, இனி ரீவைண்டிங் அண்ட் பார்வர்டிங் வேலைதான்.

நம்முடன் நெருங்கிப் பழகிய அல்லது நம்மிடம் சில நினைவுகளைப் பதித்துச்சென்ற மனிதர்களையெல்லாம் ஒவ்வொருவராக நினைவுக்கு கொண்டு வாருங்கள். அவர்களைச் சந்தித்த புதிதில் உங்களுக்கு ஏற்பட்ட எண்ணம் என்ன? பழகிய பிறகு உருவான கருத்து என்ன? இன்று என்ன முடிவுடன் இருக்கிறீர்கள்?

இப்படிப் பிறரைக் கணித்ததில் உங்களுக்கு நீங்களே மதிப்பெண் போட்டுக் கொள்ளுங்கள் (மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல்!)

"பழசெல்லாம் யாருக்கு ஞாபகமிருக்கு" என்று சலிப்புத் தொனி காட்டுகிறவர்களுக்கு பழகப் போகும் நபர்களையாவது மதிப்பிடுங்கள். அவற்றில் உங்கள் கணிப்பு எத்தனை சதவிகிதம் பொருந்தி வருகிறது என்று கவனியுங்கள்.

அழகானவர்களெல்லாம் நல்லவர்கள் என்றும் அழகில்லாதவர்களெல்லாம் மோசமானவர்கள் என்றும் முடிவுக்கு வந்து விடாதீர்கள். ஒரு சம்பவத்தை வைத்து ஒருசில சொற்களை வைத்து ஒருவரைப் பற்றி எந்த முடிவுக்கும் வந்து விடாதீர்கள்.

அந்தந்த நேரத்துக் குரிய சூழலை வைத் தும், பிறர் சொன்னவற்றைத் தீர்மான மான விடயமாகவும் கொண்டு முடி வெடுக்காதீர்கள். சொன்ன சொற்களை, நடந்த செயல்களை மெல்ல அசை போட்டு ஒரு தாவர ஆராய்ச்சியாளனாய் மாறுங்கள்.

எந்த வேலையைப் வெற இந்தச் தேர்வு என்கிறீர்கள்?

பங்குதாரரை நம்பி மோசம் போனவர்களையும், காதலனிடம் கற்பைப் பறிகொடுத்த காதலியிடமும், இனிக்க இனிக்க பேசினான் என்று கடன் கொடுத்து விட்டு ஏமாந்து போனவர்களையும் இப்படிப்பட்ட வரிசையில் வைத்து எண்ணத்தக்க மற்றவர்களையும் கேளுங்கள், அப்போது தெரியும் இந்தத் தேர்வு வாழ்க்கைக் கல்விக்கு எவ்வளவு அவசியம் என்று!

**லேனா தமிழ்வாணன்**

# முடங்கியது புறக்கோட்டை



(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் பொது எதிரணியினர் முன்னெடுத்த மக்கள் எழுச்சிப் பேரணி காரணமாக கொழும்பு, புறக்கோட்டை பகுதியில் உள்ள அனைத்து வீதிகளும் நேற்று முன்தினம் மாலை முடங்கின. (இ-7)

# கொழும்பு கொந்தளித்த போது பத்திரிகை பார்த்த மைத்திரி



(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தால் கொழும்பு நகரம் கொந்தளித்து கொண்டிருந்த போது ஜனாதிபதி அமைதியாக பத்திரிகைகளை வாசித்து கொண்டிருக்கும் புகைப்படம் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றது.

பாராளுமன்றுக்கு நேற்று முன்தினம் சென்ற ஜனாதிபதி பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் பத்திரிகைகளை அமைதியாக பார்த்து கொண்டிருப்பதை அங்கிருந்த சிலர் புகைப்படமெடுத்து சமூக வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்துள்ளனர்.

கூட்டு எதிரணியின் எதிர்ப்பு பேரணியால் கொழும்பின் பல பகுதிகளில் கடுமையான வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளதோடு ஆர்ப்பாட்டக்காரர்கள் லேக்ஹவுஸ் சுற்றுவட்டத்தில் அதிகாலை கூடியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# முடிவுக்கு வந்தது "ஜனபலய" வீதியைத் துப்புரவு செய்த போராட்டக்காரர்கள்









(கொழும்பு)

கூட்டு எதிரணியினரின் ஜனபலய போராட்டமானது முடிவுக்கு வந்த நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டோர் வீதிகளை துப்புரவு செய்யும் பணிகளில் ஈடுபட்டனர்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டு எதிரணியினரின் ஜனபலய போராட்டத்தில் பல்லாயிரக் கணக்கானோர் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது பல வீதிகள் முற்றுகையிடப்பட்டதுடன் போக்குவரத்தும் பாதிக்கப்பட்ட நிலையில் நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் வருகை தந்த போராட்டக்காரர்கள் கொழும்பின் லோட்டஸ் சுற்று வட்டாரப் பகுதியில் ஒன்று கூடினர்.

இந்நிலையில் போராட்டம் முடிவடைந்ததும் வீதிகளில் காணப்பட்ட குப்பைகளை துப்புரவு செய்யும் பணிகளில் போராட்டக்காரர்கள் ஈடுபட்டிருந்தனர். (இ-7)

# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் 28ஆவது ஆண்டு நினைவேந்தல்







(வந்தாறுமூலை)

கிழக்குப் பல்கலையிலிருந்து விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் 28 ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று முன்தினம் வந்தாறுமூலை பல்கலைக்கழக வளாக முன்றலில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

கிழக்குப் பல்கலைக்கழக கலை,கலாசார பீட மாணவர் ஒன்றியம் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அமைப்பு இணைந்து ஏற்பாடு செய்த நினைவேந்தலில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களை நினைவுகூர்ந்து மௌன இறைவணக்கம் மற்றும் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலியும் செலுத்தினர்.

1990 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் அரச படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான போர் உக்கிரமடைந்த நிலையில் உயிர் அபாயம் காரணமாக கிழக்குப் பல்கலைக்கழக முகாமில் ஆயிரக்கணக்கான பொது மக்கள் தஞ்சமடைந்திருந்தனர்.

இதன்போது படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது 158 பேர் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஞானசாரர் மீண்டும் வைத்தியசாலையில்

(கொழும்பு)

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் 6 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள பொது பலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசாரதேரர், மீண்டும் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அண்மையில்மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அமைய சிறையில் அடைக்கப்பட்ட ஞானசார தேரர், சத்திர சிகிச்சைக்காக முதலில் ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

சிகிச்சையின் பின்னர் வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இதனையடுத்து அவர் குணமடைந்து வந்த நிலையில் சிறைக்கு மாற்றப்பட உள்ளதாக சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். இந்நிலையில், ஞானசார தேரர் மீண்டும் ஸ்ரீஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-7)

# தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த மகிந்தவால் மட்டுமே முடியும் என்பதை மக்கள் காட்டி விட்டனர்

## கோத்தபாய பெருமிதம்



(கொழும்பு)

ஒரு சிறந்த சமூகத்தைக் கட்டியெழுப்ப முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் மட்டுமே முடியும் என்பதையே கொழும்பு மக்கள் வெள்ளம் காட்டியிருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

"ஜனபலய கொலம்பட்ட" பேரணியில் நேற்று முன்தினம் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"எதிர்பார்த்ததை விட அதிகளவான மக்கள் இந்தப் பேரணியில் கலந்து கொண்டனர்.

இந்த மக்களின் கருத்தின் அடிப்படையில் எமது அடுத்தகட்ட நடவடிக்கைகள் அமையும்.

மகிந்த ராஜபக்ஷ மீண்டும் ஜனாதிபதியாக வர வேண்டும் என்ற கோரிக்கையினை பேரணியில் கலந்து கொண்ட மக்கள் விடுத்துள்ளனர். இந்த நாட்டை சிறந்த முறையில் நிர்வகிக்க வேண்டும்.

பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்.

பாதாள உலகக் குழுவினரை கட்டுப்படுத்த வேண்டும்.

இவையனைத்தும் மகிந்த ராஜபக்ஷவினால் மட்டுமே முடியும்.

இதனை கொழும்புப் பேரணியில் கலந்துகொண்ட மக்கள் வெள்ளம் காட்டியிருப்பதாக" கோத்தபாய மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# எல்லை நிர்ணய அறிக்கை தயாரிக்க 212 இலட்சம் ரூபா செலவு? செய்தியில் உண்மை இல்லை

## தவிசாளர் தவலிங்கம் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

எல்லை நிர்ணய அறிக்கையைத் தயாரிப்பதற்கு 212 இலட்சம் ரூபா செலவு செய்யப்பட்டதாக வெளியாகிய செய்தியில் உண்மை இல்லை என எல்லை நிர்ணயக் குழுவின் தவிசாளர் கே.தவலிங்கம் தெரிவித்துள்ளார்.

எல்லை நிர்ணய அறிக்கையைத் தயாரிப்பதற்கு 212 இலட்சம் ரூபா செலவு செய்யப்பட்டதாக செய்தி வெளியாகிய நிலையில் அதனை மறுத்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வெவ்வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்களை உள்ளடக்கிய தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயக்குழுவொன்றை ஜனாதிபதி 2017 ஒக்டோபர் மாதம் 4 ஆம் திகதி 2039/29 இலக்க வர்த்தமானி அறிவித்தலின்படி நியமனம் செய்தார்.

அரசியலமைப்புக்கு கொண்டு வரப்பட்ட பத்தொன்பதாம் அரசியலமைப்புத் திருத்தத்திற்கமைய நியமனம் செய்யப்பட்டுள்ள எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தவிசாளர் உள்ளிட்ட அங்கத்தவர்கள் இருவரையும் உள்ளடக்கியவாறு அக்குழு நியமிக்கப்பட்டது.

எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் (Delimitation Commission) தவிசாளராக இருக்கும் நான் மாகாண சபைக்கான தொகுதிகளை எல்லை நிர்ணயம் செய்யும் குழுவுக்கும் (Delimitation Committee) தவிசாளராக தெரிவு செய்யப்பட்டேன்.

எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் வருடாந்த நிதி ஒதுக்கீட்டின்கீழ் இவ்வேலை செய்ய முடியாத காரணத்தினால் மேலதிக ஒதுக்கீடாக ரூபா 212 இலட்சம் தரும்படி பாராளுமன்றத்திடம் கேட்டிருந்தோம்.

பாராளுமன்றம் அதற்கு அனுமதி தந்தது. இத்தொகையைத் தருவதற்கு திறைசேரியும் இணங்கிக் கொண்டது. அதன் பிரகாரம் 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திலிருந்து 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை எல்லை நிர்ணயக் குழுவின் செலவுக்கு ரூபா 161 இலட்சத்திற்கு சிறிது மேற்பட்ட தொகையை செலவு செய்தோம்.

ரூபா 161 இலட்சமே ஏற்பட்ட செலவீனம் ஆகும். இதில் ரூபா 54 இலட்சம் எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் வருடாந்த நிதி ஒதுக்கீட்டிலிருந்து செலவிடப்பட்டது. எனவே எங்களால் பாராளுமன்றத்திடம் கேட்கப்பட்ட ரூபா 212 இலட்சம் ஒதுக்கீட்டில் செலவு செய்யப்பட்டது ரூபா 107.5 இலட்சம் மட்டுமே. இந்த ரூபா 107.5 இலட்சத்தில் ரூபா 33 இலட்சம் அறிக்கையை அச்சிடுவதற்கு அரசாங்க அச்சகத்திற்கு (Department of Government Printing) கொடுக்கப்பட்டது. மேலும் இவ் வேலைக்காக எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தவிசாளர் உள்ளிட்ட அங்கத்தவர்கள் இருவரும் எவ்வித சம்பளமும் பெறவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## ஆளுநருடன் ஆஸி தூதுவர் சந்திப்பு



அவுஸ்திரேலியா நாட்டின் இலங்கைக்கான தூதுவர் Bryce Hutchesson நேற்று வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரேயை சந்தித்து கலந்துரையாடினார். சுண்டுக்குளியில் அமைந்துள்ள ஆளுநர் செயலகத்தில் முற்பகல் 11.30 மணியளவில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

இலங்கையில் யுத்தத்தின் பின்னர் வடமாகாண மக்களின் தேவைகள் தொடர்பாகவும் அவர்களின் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் சம்பந்தமாகவும் ஆளுநரிடம் கேட்டறிந்து கொண்டார்.

வடமாகாணத்தில் மீன்பிடி மற்றும் விவசாய நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கான பணிகளை செய்வதற்கு அவுஸ்திரேலிய அரசு விருப்பம் கொண்டிருக்கின்றது. விசேடமாக தமது நாட்டில் மேற்கொள்ளப் பட்டு வரும் நவீன தொழில்நுட்பத்துடனான மழைநீர் மூலமான விவசாய நடவடிக்கையினை வடமாகாணத்தில் ஏற்படுத்துவதற்கு எண்ணியுள்ளது.

அதேவேளை யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான உதவிகளை வழங்குவதற்கு அவுஸ்திரேலிய அரசு ஆர்வம் கொண்டிருப்பதாக தூதுவர் தெரிவித்தார். மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பணிகளை தமது அரசாங்கம் வடமாகாணத்தில் திறம்பட செயற்படுத்தி வருவது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர் வடமாகாணத்தில் ஐந்து மாவட்டங்கள் உள்ளபோதும் மிகவும் பாதிக்கப்பட்ட இரண்டு மாவட்டங்களுக்கு அதிகளவான உதவிகள் கிடைப்பதற்கு வடமாகாணசபை நிதியொதுக்கீடு செய்ய ஆளுநர் பரிந்துரைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். தமது முழுமையான ஒத்துழைப்பினை வழங்க தயாராகவிருப்பதாக ஆளுநர் இதன்போது தெரிவித்தார்.

அபிவிருத்திக்கு தேவையான நிதியினை இலங்கை அரசுக்கு தமது அரசு வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அதில் வடமாகாணத்தில் பாரிய அபிவிருத்திப்பணிகளை செய்வதற்கு அவுஸ்திரேலிய அரசு எண்ணியுள்ளதாகவும் தூதுவர் தெரிவித்தார். இச்சந்திப்பில் ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவனும் கலந்துகொண்டார். (இ-60)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

## பிறப்பு எண் 5 விதி எண் 5

பூரண புதன் ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் கண்ணியமானவர்கள். கடமை தவறாதவர்கள். இறையருள் மிக்கவர்கள். எதிலும் துரிதமாகச் செயற்படக்கூடியவர்கள். பொதுவாழ்வில் நாட்டமுடையவர்கள். பிறருடைய மனமறிந்து அதற்கேற்ப நடந்து கொள்வார்கள். புகழுடன் வாழவே ஆசைப்படுவார்கள். தனது இலட்சிய வெற்றிக்குப் புதிது புதிதாக யுக்திகளைக் கையாள்வார்கள். மனோ பலமிக்கவர்கள். மற்றவர்களின் மனதை எளிதில் எடைபோடத் தெரிந்தவர்கள். இவர்கள் கவர்ச்சியான தோற்றமுடையவர்கள். பேறறிவும் பெருஞ் செல்வமும் உடையவர்கள். பாக்கியசாலிகள். எதிலும் துரிதமாக முடிவெடுக்க வேண்டுமென்ற வேகப் புத்தி உடையவர்கள். மக்களின் ஆதரவு என்றென்றும் இருக்கும். மற்றவர்களின் கவனக்குறைவை மிகவும் கண்டிப்பார்கள். மின்னல் வேகத்தில் செயற்படுவார்கள்.


குழந்தைகள் போல நடந்து கொள்வார்கள். குதூகலமிக்கவர்கள். புதுமையை அதிகம் விரும்புவார்கள். லீலாவிநோதங்கள் இருக்கும். இளமை முதலே நல்ல பழக்க வழக்கங்களைக் கற்பிக்க வேண்டும். நல்ல மனிதர்களின் தொடர்பு கிடைக்கும். தீய பழக்க வழக்கத்தை எளிதில் கற்றுக் கொள்வார்கள். பெற்றோர்கள் எவ்வளவு நல்லவராக இருந்தாலும் மாற்ற முடியாது. பலருக்கு இவர்கள் அறிவுரை வழங்குவார்கள். இவர்களை எல்லோரும் மதிப்பார்கள். அடிக்கடி மாறுதல்களை விரும்புவார்கள். குழந்தைப் பருவத்தில் இருந்தே இவர்களுக்கு இன்று பிடித்த பொருட்கள் நாளை பிடிக்காமல் போய்விடும். மாற்றத்தைப் பெரிதும் விரும்புவார்கள். தொழில் நட்பு, பழக்க வழக்கங்கள் மாறுதல்களை ஏற்படுத்திக்கொண்டேயிருக்கும்.

கலை நுணுக்கம் அறிந்தவர்கள். திறமை இருந்தாலும் வாழ்க்கையில் சோதனைகள் இருந்து கொண்டேயிருக்கும். பல புதுமையைச் செய்து கொண்டேயிருப்பார்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அடிக்கடி இடமாற்றத்தை விரும்புவார்கள். நிலையான ஒரு இடத்தில் இருந்து தொழில் செய்ய மாட்டார்கள். ஒரே தொழிலை ஆர்வத்துடன் செய்யப் பிடிக்காது. எவ்வளவு வருமானம் வரக்கூடிய தொழிலாக இருந்தாலும் மாற்றிவிடுவார்கள். சிலர் இளமை முதலே ஆன்மீகம் சம்பந்தப்பட்ட தொழில் செய்து வருமானம் ஈட்டுகின்றனர். பிரயாணம் செய்ய ஆர்வமிருக்கும். சுற்றுலா சென்ற வண்ணமிருப்பார்கள். வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களைச் சுற்றிப் பார்ப்பார்கள்.

மற்றவர்களின் தாமதம் இவர்களுக்குக் கோபத்தை வரவழைக்கும். யார் எதைச் சொன்னபோதும் உடனே இறங்கி செயலாற்றுவார்கள். தான் கட்டளையிடும் காரியத்தை மற்றவர்கள் செய்யவில்லை என்றால் மிகவும் கோபப்படுவார்கள். தன்னைச் சார்ந்தவர்கள் இவர்களைப் போன்று சுறுசுறுப்புடன் இருக்குமாறு எச்சரிக்கை செய்வார்கள். தெய்வீக தூரதேச பயணம் மேற்கொள்வார்கள். தனி ஈடுபாடு இருக்கும். இவர்களின் வழிபாட்டு முறைகள் மற்றவர்களைப் பிரமிக்கச் செய்யும். கடல் கடந்த பயணம் உருவாகும்.

அழகின் மீது மனம் பறிபோய்விடும். மிகவும் ஒன்றி ரசிப்பார்கள். திறமைசாலிகள். எளிமையாக இருப்பார்கள். கடவுள் பக்தி அதிகமுண்டு. சட்டம், அரசியல் வழிமுறைகள் நன்கு அறிந்து வைத்திருப்பார்கள். தர்மவான்கள். நகைச்சுவை கலந்த பேச்சினை உடையவர்கள். குழந்தை போன்று அனைவரிடமும் பழகுவார்கள்.

எந்நேரமும் கடுமை கலந்த பேச்சால் வீட்டில் கலகம் விளைவிப்பார்கள்.




கலைகளில் நிபுணர்கள். கற்பனை சக்தி மிதமிஞ்சியிருக்கும். எவ்வளவு துன்பங்கள் வந்தபோதும் தூக்கியெறிந்து விட்டு இன்பமாக இருப்பார்கள். மருத்துவம், கணிதம், எழுத்து, கம்பியூட்டர், ஆன்மீகம் சிறப்புகள் தரும். நல்ல வாழ்க்கைத்துணை அமைந்தபோதும் அவர்களைக் குறை கூறித் திட்டிக் கொண்டேயிருப்பார்கள். தனது மனசாட்சிப்படியே காரியம் ஆற்றுவார்கள்.

வயது செல்லச் செல்ல அறிவினால் பிரகாசிப்பார்கள். பிறரை வஞ்சித்தும் ஏமாற்றியும் பிழைக்க வழிதேடுவார்கள். எதையும் விரும்பி வாங்கியது மட்டுமல்லாமல் விரைவில் வெறுத்து ஒதுக்கியும் விடுவார்கள். பார்க்க கவர்ச்சியாக, அழகாகக் காட்சியளிக்கும் இவர்கள் இளமையிலேயே காதல் வயப்பட்டு கெட்ட பெயர் சம்பாதிப்பார்கள். தங்கள் கவர்ச்சிக்கு முக்கிய இடம் கொடுப்பதால் காதல் வலையில் எளிதில் சிக்கிக் கொள்வார்கள். திருமணத் தடையும் புத்திர பாக்கியத் தடையும் வாழ்க்கையில் சந்திக்க நேரிடும். நல்ல நாகரிகம் தெரிந்த மனிதர்கள். அன்பாக அனைவரிடமும் பழகி நல்ல பெயரெடுப்பார்கள். தன்னுடைய முதலாளிக்கு விசுவாசமாக இருப்பார்கள். இவர்கள் கடமையுணர்ச்சிக்கு ஏற்ற ஊதியம் கிடைக்கவில்லை என்று வருந்துவார்கள். அதிர்ஷ்டக் குறிப்புகளை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

**அதிர்ஷ்ட திகதிகள்**

1, 10, 19, 28, 6, 15, 24, 5, 14, 23, 9, 18, 27.

**துரதிர்ஷ்ட திகதிகள்**

8,17,26.

**அதிர்ஷ்ட நிறங்கள்**

வெளிர் நீலம், மஞ்சள், பொன்நிறம், சாம்பல் நிறம், சிமெண்ட் நிறம்.

**துரதிர்ஷ்ட நிறங்கள்**

கறுப்பு, சிவப்பு, இருண்ட நிறங்கள்.

**அதிர்ஷ்ட இரத்தினங்கள்**

வைரம், சிர்க்கான்.

(தொடரும்....)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

சிறையில் இருந்தபோது, இவர் சிங்கள மொழியைப் பேசக் கற்றுக் கொண்டார். அதனால், அநுராதபுரத்தில் உள்ள மக்களோடு சிங்களத்தில் பேச முனைந்தபோது, அம்மக்களுக்குச் சிங்களம் தெரியாமல் இருந்தது. காரணம், அங்கு வாழ்ந்த மக்கள் தமிழர்களாக இருந்தமையாகும். இந்நிகழ்வினை நொக்ஸ் பின்வருமாறு கூறுகின்றார்.

அநுராதபுரம் ஒரு பரந்த சமவெளி. அதுபோல் இத்தீவில் வேறெங்கும் நான் கண்டதில்லை. இச்சமவெளிக் காடுகளினால் சூழப்பட்டு, ஒவ்வொரு பக்கத்திலும் சிறு நகரங்களைக் கொண்டுள்ளது. இவற்றில் (மலபார்) தமிழ் மக்கள் வாழ்கின்றார்கள். இவர்கள் சிங்களவரிலிருந்து வேறானவர்கள்.

மேலும், நொக்ஸ் தனது ஆபத்தான நிலைமையினை சைகை மூலம் சிலருக்கு விளக்கியபோது, அவர்கள் 'தம்பிரானே' என ஆச்சரியப்பட்டதாகவும் அந்நூலில் எழுதியுள்ளார்.


இவ்வாறு அநுராதபுரப் பிரதேசத்தில் சிங்கள மக்கள் இல்லாமல் போனதற்கு முக்கியமாக இரண்டு காரணங்கள் இருந்திருக்கலாம். ஒன்று, சிங்கள அரசு தெற்கு நோக்கி நகர்ந்தபோது சிங்கள மக்களும் அங்கு சென்றிருக்கலாம். மற்றையது, அநுராதபுரத்தில் வாழ்ந்த சிங்கள மக்கள் தமிழ் இனத்தோடு சேர்ந்து, தமிழர்களாக மாறியிருக்கலாம்.

இவ்வாறான அரசியல் நிலைமைகளை விடச் சமூகம், சமயம், மொழி, கலை, கலாசாரம், பொருளாதாரம் என்பவை தொடர்பிலும், பலவகையான மாற்றங்களையும் விளைவுகளையும் சந்தித்தமையும் தவிர்க்க முடியாததாகக் காணப்படுகிறது.

இந்த நிலைமையில் இக்காலப் பகுதியில் அரசியல், சமூகம், சமயம், மொழி, கலை, கலாசாரம், பொருளாதாரம் ஆகியவற்றில் எவ்வாறான மாற்றங்களையும், விளைவுகளையும் தமிழர் சந்தித்தனர் என்று மேற்கொண்டு நோக்குவது பொருத்தமானதாக இருக்கும்.

முதலில் அரசியல் நிலைமைகளை நோக்கும்போது, சோழருக்கும், சிங்கள அரசுக்கும் இடையிலான போராட்டம் முதலாம் பராந்தகச்சோழன் காலத்தில், கி.பி 915 அளவில் வெள்ளூரில் நடைபெற்றது. பராந்தகச் சோழன் பாண்டியருடன் போர் தொடுத்தபோது, பாண்டிய மன்னன் ஐந்தாம் கஸ்ஸப (913-923) தன் படைகளை அனுப்பியிருந்தான்.

ஆனால் பாண்டியப் படைகளும், சிங்களப் படைகளும் தோல்வியைத் தழுவிக் கொண்டதாக சோழர் கல்வெட்டுகள் மூலம் அறிய முடிகிறது. இப்போர் பற்றி சூளவம்ஸ என்ற பாளி நூலும் குறிப்பிடுகின்றது. சோழ மன்னன் பராந்தகன் இவ்வெற்றியின் பயனாக 'மதுரையும் ஈழமும் கொண்ட' என்ற விருதைப் பெற்றான். போரில் தோல்வியுற்ற பாண்டிய மன்னன் தனது முடியையும், ஆரத்தையும், செல்வங்களையும் எடுத்துக்கொண்டு சென்று இலங்கை மன்னனிடம் தஞ்சமடைந்தான். அதன் பின்னர் மேற்படி தன் உடைமைகளை இலங்கை மன்னனிடம் ஒப்படைத்து விட்டு கேரளத்திற்குச் சென்று விட்டதாக அறியமுடிகிறது.




> மேலும், நொக்ஸ் தனது ஆபத்தான நிலைமையினை சைகை மூலம் சிலருக்கு விளக்கியபோது, அவர்கள் 'தம்பிரானே' என ஆச்சரியப்பட்டதாகவும் அந்நூலில் எழுதியுள்ளார். இவ்வாறு அநுராதபுரப் பிரதேசத்தில் சிங்கள மக்கள் இல்லாமல் போனதற்கு முக்கியமாக இரண்டு காரணங்கள் இருந்திருக்கலாம். ஒன்று, சிங்கள அரசு தெற்கு நோக்கி நகர்ந்தபோது சிங்கள மக்களும் அங்கு சென்றிருக்கலாம். மற்றையது, அநுராதபுரத்தில் வாழ்ந்த சிங்கள மக்கள் தமிழ் இனத்தோடு சேர்ந்து, தமிழர்களாக மாறியிருக்கலாம்

## சோழர் ஆக்கிரமிப்பும் அதன் விளைவுகளும் (கி.பி. 900-கி.பி. 1200)

பராந்தகச் சோழன் தான் கைப்பற்றிய பாண்டிய நாட்டில் முடி சூடிக் கொள்ள பாண்டியர் முடி தேவைப்பட்டது. இந்நிலையில் பாண்டியரினதும், சிங்கள அரசினதும் நட்புறவும் சோழ அரசுக்கு விரும்பத்தகாத ஒன்றாக இருந்திருக்கிறது. பல வருடங்கள் கழித்து, அநுராதபுரத்தில் நான்காவது உதயனின் ஆட்சிக்காலத்தில் (945-953) பராந்தகச் சோழன் முதல் தடவையாக படையெடுத்துச் சென்றான். மன்னன் உதயன் அநுராதபுர அரசைவிட்டு தென்னிலங்கைக்குச் சென்று விட்டதாகப் பாளி நூல்கள் கூறுகின்றன.

இப் படையெடுப்பின்போது, பராந்தகனால் பாண்டியரின் முடி முதலான பொருட்களை பெற முடியாமல் போய்விட்டது. ஆனால் இவ்வேளையில் நடந்த முக்கிய சம்பவமாக, சோழர் அநுராதபுரத்தில் ஆட்சியைக் கைப்பற்றாவிட்டாலும், வடபகுதியில் குறிப்பாக, அநுராதபுரம் தவிர்ந்த, திருகோணமலை உள்ளிட்ட யாழ்குடா நாடு ஈறாக உள்ள பகுதிகளில் தமது அதிகாரத்தை நிலைநிறுத்தினர் என வரலாற்று ஆசிரியர்கள் கொள்வர்.

மேலும், பராந்தகச்சோழன் வட எல்லையில் தன் கவனத்தைச் செலுத்தியவேளை பாண்டியர், சிங்களப் படைகளுடன் சேர்த்து சோழருக்கு எதிராகப் படையெடுத்து தமது நாட்டைத் திருப்பிப் பெற்றனர். பராந்தகச்சோழன் மறைவுக்குப் பின் இரண்டாம் பராந்தகச் சோழன் பாண்டிய நாட்டைத் திரும்பக் கைப்பற்றியதுடன், இலங்கை மீதும் படையெடுத்தான். இப் படையெடுப்பு தோல்வியில் முடிந்தது.

ஆனால் இப்படையெடுப்பின்போது நடைபெற்ற நிகழ்வு முக்கியமானது. அதாவது, தாம் ஏற்கனவே செல்வாக்குப் பெற்றிருந்த வடபகுதியை வந்தடைந்தது. அங்கிருந்துதான் அநுராதபுரம் நோக்கிப் படையெடுத்திருக்கின்றார்கள்.

இந்நிகழ்வின் மூலம் முதலாம் பராந்தச்சோழன் காலத்திலிருந்தே இலங்கையின் வடபகுதி சோழரின் செல்வாக்குக்கு உட்பட்ட பிரதேசமாகவோ அல்லது அதிகாரத்துக்கு உட்பட்ட பிரதேசமாகவோ வந்துவிட்டது எனத் தெரிகின்றது. இது சாத்தியப்படக் கூடிய ஒன்றாகும். காரணம், வடபகுதியில் இருந்த தமிழர்கள் தமிழ்நாட்டுச் சோழர்களுக்கு இயல்பாகத் தமது ஆதரவை வழங்கியிருப்பார்கள்.

அத்தோடு, பல்லவர் ஆட்சி தென்னிந்தியாவில் நிலவியபோதே, இலங்கையில் வடக்கு, கிழக்கு, வடமேற்குப் பிரதேசங்களில் தமிழர்கள் சமய ரீதியாகவும், மொழி ரீதியாகவும், கலை, கலாசார ரீதியாகவும், ஒரு முழுமை பெற்ற இனமாக அடையாளம் காணப்படுவதற்குரிய நிலையினைப் பெற்றிருந்தமையை அவதானிக்க முடிகிறது.

இலங்கைமீது சோழர் ஆரம்பப் படையெடுப்பை நிகழ்த்திய போதே அவர்களது மேலாண்மையை வடக்கு, கிழக்கு, வடமேற்குப் பிரதேசத்தில் வாழ்ந்த தமிழர்கள் ஏற்றிருப்பார்கள் என்றே தோன்றுகிறது.

ஏனெனில், சோழர் தமது இரு படையெடுப்புக்களையும் வட பிரதேசத்திற்கூடாகத் தான் நடத்தியிருக்கின்றார்கள். அப்பிரதேசங்களில் சோழருக்குச் செல்வாக்கு இல்லாது இருந்திருந்தால், சோழர் தமது படையை அப்பிரதேசத்தினூடாக அநுராதபுர அரசை நோக்கி நகர்த்தியிருக்க முடியாது.


மேலும், முதலாம் பராந்தச் சோழன் காலத்தில் பொலநறுவையில் சோழர் தமது ஆதிகால மையத்தை நிறுவாவிட்டாலும், கிழக்கில் பதவியா, கந்தளாய் போன்ற இடங்களில் முதலில் தமது அதிகார மையங்களை நிறுவிய பின்னர் பொலநறுவைக்கு அதனை மாற்றியிருந்தனர் என ஆதாரங்கள் காட்டி நிற்கின்றன. உதாரணமாக, மிகப்பழைய சோழர்காலக் கல்வெட்டுகள் மேற்குறிப்பிட்ட பகுதிகளில் தான் கிடைத்திருக்கின்றன.

மேலும், சிங்கள அரசுகள் பாண்டியப் படைகளுக்கு உதவ, சோழர்களோடு வெள்ளூரில் இடம்பெற்ற போரில் சோழமன்னன் பராந்தகன் இவ்விரு படைகளையும் தோற்கடித்தமைக்காக, '**மதுரையும் ஈழமும் கொண்ட**' என்ற விருதைப் பெற்றிருக்கின்றான் என ஏற்கனவே குறிப்பிட்டுள்ளது. தென்னிந்திய மண்ணில் நடைபெற்ற போரில் பாண்டியரைத் தோற்கடித்துப் பாண்டிய அரசை வென்றமைக்காக தான் பெற்ற விருதில் '**ஈழமும்**' என்று சேர்த்திருக்க வேண்டிய அவசியம் இல்லை.

எனவே, மேற்குறிப்பிட்டவாறு முதலாம் பராந்தகச் சோழன் காலத்திலேயே இலங்கையின் வடக்கு, கிழக்குப் பிரதேசங்கள் சோழரின் அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசங்களாக வந்துவிட்டன என்றே கொள்ள வேண்டியுள்ளது.

(தொடரும்)

# கொழும்பில் போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது



(கொழும்பு)

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டு எதிரணியின் "ஜனபலய" போராட்டத்தையடுத்து பல்வேறு பகுதிகளிலும் போக்குவரத்துக்கள் பாதிப்படைந்து ஸ்தம்பிதமடைந்திருந்த நிலையில் நேற்று போக்குவரத்துக்கள் யாவும் வழமைக்குத் திரும்பின.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நேற்று முன்தினம் கொழும்பில் பொது எதிரணியினர் முன்னெடுத்த மக்கள் எழுச்சிப் பேரணியும் சத்தியாக்கிரகப் போராட்டமும் நேற்று முன்தினம் நள்ளிரவுடன் முடிவுக்கு வந்தது.

அரசாங்கத்தின் முறையற்ற பொருளாதார நடவடிக்கை, மாகாண சபைத் தேர்தல் காலம் தாழ்த்தப்படுதல், ஆட்சி மாற்றம், நாட்டின் வளங்களை வெளிநாடுகளுக்கு வழங்குதல், வெளி நாடுகளுடனான முறையற்ற பொருளாதார ஒப்பந்தங்கள் போன்ற பல்வேறு விடயங்களை வலியுறுத்தி இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்தப் போராட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்கத்திலிருந்து விலகிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி, மாகாணசபை உறுப்பினர்கள் உட்பட அரசியல் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

நாடு முழுவதிலுமிருந்து கொழும்புக்கு பேருந்துகளிலும் பிற வாகனங்களிலும் வருகை தந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் கொழும்பு நகரில் விகாரமஹாதேவி பூங்கா, கொழும்பு தொழில்நுட்பக் கல்லூரி சந்தி, கொழும்பு சுகததாச விளையாட்டு மைதானப்பகுதி, கொம்பனித்தெரு சந்தி, மருதானை ஆகிய பகுதிகளிலும் ஒன்றுகூடியதுடன் .லேக்கவுஸ் சுற்றுவட்டத்தை நோக்கி பேரணியாகச் சென்றனர்.

லேக்கவுஸ் சுற்றுவட்டத்தில் தொடர்ந்தும் போராட்டத்தை முன்னெடுத்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அதன் பின்னர் லோட்டஸ் சுற்று வட்டத்தை நோக்கி படையெடுத்து அங்கு மெழுகுவர்த்திகளை கையில் ஏந்தி சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

அதனைத் தொடர்ந்து சத்தியாக்கிரகப் போராட்டம் இரவு 11 மணியளவல் நிறைவுக்கு வந்தது. இதையடுத்து போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது. (இ-7)



(கோப்பாய்)

கொழும்பு சர்வோதய நிறுவனத்தினால் கோப்பாய் தேசோதய சபைக்கு ஒரு தொகுதி தளபாடங்கள் கையளிக்கப்பட்டுள்ளன. இத் தளபாடங்களை அணமையில் யாழ். மாவட்ட சர்வோதய இணைப்பாளர் எஸ்.யுகேந்திரா கேப்பாய் பிரதேச தேசோதய தலைவர் இ.மயில் வாகனத்திடம் கையளித்தார். (இ-134)

**உயிரிழப்பு 9 ஆக அதிகரிப்பு**

## மேலும் இரண்டு யானைகளின் உடல்கள் மீட்பு



(பொலநறுவை)

பொலநறுவை பெரியாற்றில் மூழ்கி உயிரிழந்த மேலும் இரண்டு யானைகளின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த 2 ஆம் திகதி பெரியாற்றில் மூழ்கி உயிரிழந்த நிலையில் 7 யானைகளின் உடல்கள் மீட்கப்பட்ட நிலையில், நேற்று மீண்டும் இரண்டு யானைகளின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் ஆற்றில் மூழ்கி உயிரிழந்த யானைகளின் எண்ணிக்கை 9 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# துணை மருத்துவ சேவையின் பயிற்சிகளுக்கு பயிலுநர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் மருத்துவ விடயங்களுக்கான தாதியர், நிறைவுகாண் மற்றும் துணை மருத்துவ சேவையின் பின்வரும் கற்கைநெறிகளுக்காக பயிலுநர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகைமையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தின் (www.health.gov.lk) ஊடாக மாத்திரமே (online Registration) இதற்காக விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பிக்க விரும்புவோர் குறித்த இணையத் தளத்தில் வர்த்தமானி அறிவித்தல் மற்றும் விண்ணப்பம் தொடர்பான அறிவுறுத்தலைப் பெற்றுக்கொள்ள முடியும். அவ்விதம் இணையத் தளத்தில் விண்ணப்பிக்க முடியாதவர்கள் மாத்திரம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை யாழ்ப்பாணத்துடன் அலுவலக கடமை நேரத்தில் தொடர்பு கொள்ள முடியும் என யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி க.நந்தகுமாரன் அறிவித்துள்ளார்.

விண்ணபிக்கப்படும் பயற்சி நெறிகள்

தாதிய உத்தியோகத்தர், மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர், மருந்தாளர், தொழில் வழி சிகிச்சையாளர், கதிரியலாளர், பாடசாலைப் பற்சிகிச்சையாளர், சுகாதார பூச்சியியல் அலுவலர், கண் தொழில்நுட்பவியலாளர், செயற்கை அவயவத் தொழில்நுட்பவியலாளர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர், இதயத் துடிப்புப்பதிவாளர், மூளை மின் இயக்கப் பதிவாளர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ

# மாணவனுக்கு பண உதவி

(யாழ்ப்பாணம்)

வேலணை மத்திய கல் லூரியில் க.பொ.த. உயர் தர தொழில்நுட்ப பிரிவில் கல்வி கற்கும் மாணவர் ஒருவருக்கு சரவணை பள்ளம்புலம் அருள்மிகு முருகமூர்த்தி திருக்கோவில் அன்னதான சபைத்தலைவர் சுப்பிரமணியம் தில்லை நாதன் 2020ஆம் ஆண்டு வரை கல்வி கற்பதற்காக மாதாந் தம் பண உதவி வழங்க முன்வந்துள்ளார். (இ


82 வது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



கந்தையா விஜயரத்தினம்

07.09.2018
வெள்ளிக்கிழமை

கம்பர்மலை
2008 கலைவாரிதி பட்டம் பெற்றுள்ளார்.
2009 யாழ். மாவட்ட கலைஞர் பட்டம் பெற்றுள்ளார்.
2010 கலாபூஷணம் விருது பெற்றுள்ளார்.
2013 ஆளுநர் விருது பெற்றுள்ளார்.
2018 கலைஞானவாரிதி பட்டம் பெற்றுள்ளார்.

(C-3751)

இவருடைய பிறந்தநாளை வாழ்த்துபவர்கள்
தம்பி குடும்பத்தினர்
சர்வானந்தம் (தொழிலதிபர்)

# தேசிய வளங்கள் தொடர்பில் கருத்துரைக்க மகிந்தவுக்கு எந்தத் தகுதியும் கிடையாது

## அமைச்சர் சம்பிக்க காட்டம்



(கொழும்பு)


"தேசிய நிதி, தேசிய வளங்கள் தொடர்பில் கருத்துரைப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கோ அவரது குடும்பத்தினருக்கோ எவ்வித தகுதிகளும் கிடையாது" என பாரிய நகர அபிவிருத்தி மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கட்டடத் திறப்பு விழாவில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் மகிந்தவின் குடும்ப ஆட்சியில் மிஹின் லங்கா விமான சேவை மற்றும் ஸ்ரீலங்கா எயார் லைன் உள்ளிட்ட நிறுவனங்களில் இடம்பெற்ற மோசடிகளுக்கு இவர்களே பங்குதாரர்களாகக் காணப்படுகின்றனர் எனவும் தெரிவித்தார். (இ-7)

# பாரிய நிதிமோசடிகளை விசாரிக்க மற்றுமொரு விசேட மேல் நீதிமன்றம்

## நாடாளுமன்றில் பிரதமர் ரணில் தகவல்



(கொழும்பு)

பாரியளவிலான நிதி மோசடிகள் மற்றும் ஊழல் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் மூவரடங்கிய விசேட மேல் நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மேலும் ஒரு விசேட மேல் நீதிமன்றம் அமைக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க நாடாளுமன்றில் நேற்று முன்தினம் எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கிய போதே பிரதமர் இதனை தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் பேசிய அவர், "மேல் மாகாணத்தை மையப்படுத்தி அமைக்கப்பட்டுள்ள விசேட மேல் நீதிமன்றத்தில் இதுவரை இரண்டு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும்" தெரிவித்தார். (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா:18<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:O/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/8853 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 79 செவ் 8 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:HNDM/தனியார் தொழில்<br>தொ.இ: G/926 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 66 செவ் 7 இல்<br>உயரம்: 169cm<br>தகைமை/தொழில்:Diploma/தனியார் தொழில்<br>தொ.இ: B/8854 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 38 செவ் 2 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:B.COM/அரச தொழில்<br>தொ.இ: G/934 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 41 செவ் 12 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: Diploma IT/ தனியார் தொழில்<br>தொ.இ: B/8859 | பிறப்பு: 1973NRC<br>நட்சத்திரம்: பரணி<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:Diploma/ஆசிரியர்<br>தொ.இ: G/936 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 36 செவ் 2 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/அரச தொழில்<br>தொ.இ: B/8860 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 78<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ ஆசிரியர்<br>தொ.இ: G/940 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


## நாட்டு மக்களிடம் மன்னிப்பு கேட்ட நாமல் எம்.பி

நாட்டு மக்களிடம் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மன்னிப்பு கோரியுள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் முன்னெடுத்த எதிர்ப்பு பேரணி, எதிர்வரும் காலங்களிலும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுமென நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்கள் மாற்றம் ஒன்றை எதிர்பார்த்துள்ளமை நேற்று முன்தினம் நடந்த பேரணியின் மூலம் தெளிவாகியுள்ளதாக நாமல் சுட்டிக்காட்டியுள்ளார். ஜனநாயக ரீதியான மக்கள் தலைவரை நியமிக்கும் வரை போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என நாமல் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற பேரணியில் மக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்பட்டிருந்தால் மன்னிப்பு கேட்டுக் கொள்வதாக நாமல் தெரிவித்துள்ளார். தனது டுவிட்டரில் மேற்கண்டவாறு அவர் வெளியிட்டுள்ளார். (இ-7)

## 'கதைசொல்லும் நேரமிது' தொடரும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் பொதுநூலகத்தில் கடந்த சில மாதங்களாக ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் முன்பள்ளிச் சிறார்களுக்கு "கதை சொல்லும் நேரமிது " என்ற நிகழ்வும், திண்ம,திரவ கழிவுகளை உரிய முறையில் அகற்றுவது தொடர்பான தெளிவூட்டல் கருத்தரங்கும் இடம் பெற்று வந்தது. கடந்த சில தினங்களாக இடம்பெறாத இந்த நிகழ்வு எதிர்வரும் புதன்கிழமையில் இருந்து வாராவாரம் இடம்பெறும் என்பதனை சாவகச்சேரி பொது நூலகத்தினர் அறியத் தந்துள்ளனர். (இ-30)

# செய்தித்துளிகள்

## யானை தாக்கி விவசாயி மரணம்

(புல்மோட்டை)

திருகோணமலை - புல்மோட்டை பகுதியில் விவசாயி ஒருவர் யானை யின் தாக்குதலுக்கு இலக் காகி உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றது. புல்மோட்டை பகுதியில், மரக்கறித் தோட்டம் வைத் துள்ள இவர், இரவில் காவல் காத்துவிட்டு காலை யில் வீடு திரும்பும் போதே இந்த அனர்த்தம் ஏற்பட் டுள்ளது.

இதில், 54 வயதுடைய மில்டன் அப்புஹாமி என் பவரே உயிரிழந்துள்ளார்.

இவருடைய சடலம் புல் மோட்டை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள துடன், பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்து ள்ளனர். (இ-7)

## நற்கருணை பெருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புனித அடைக்கல அன்னை ஆலயத் திருவிழா கடந்த 30 ஆம் திகதி கொடி யேற் றத்துடன் ஆரம்பமாகி நவ நாள் வழிபாடுகள் தின மும் மாலை 5.30 மணி க்கு இடம்பெற்று வருகின் றன.

இதில் இன்று வெள் ளிக்கிழமை நற்கருணைப் பெருவிழா திருப்பலி அருட் பணி மங்களராஜா தலைமையில் இடம் பெறும். நாளை சனிக் கிழமை அதிகாலை 5 மணி க்கு முதலாம் திருப்பலியும் காலை 6.30 மணிக்கு அருட்பணி பிறற்றிக் தேவராஜா தலைமையில் திருவிழாத் திருப்பலியும் இடம் பெறும்.

தொடர்ந்து மாலை 5.30 மணிக்கு அன்னை யின் திருச்சொரூபப் பவனியும் ஆசீர்வாதமும் இடம்பெறும். (இ

## 'பக்தி கானங்கள்' வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி 'பக்தி கானங்கள்' இசைத்தட்டு வெளியீடு எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி ஆலயத்தில் இடம்பெறவுள்ளது. (இ-7)

## "பக்தியால் யானுனைப் பலகாலும்" சின்மயா மிஷனில் அருளுரை

(யாழ்ப்பாணம்)

யாழ். சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசானந் தாவால் "பக்தியால் யானு னைப் பலகாலும்..." என்ற தலைப்பில் இன்று இரவு 7.30 மணி முதல் 8 மணி வரை இல. 700, பருத்தி த்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள சின்மயஞா னவேல் ஆச்சிரமத்தில் அருளுரை நடைபெறும். (இ-7)

## மத்தியஸ்த அமர்வு நடைபெறாது

(யாழ்ப்பாணம்)

பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் யாழ்.கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாசாலையில் நடைபெறும் நல்லூர் மத்தியஸ்த சபை அமர்வு நல்லூர் முருகன் ஆலய தீர்த்தத் திருவிழாவான 09.09.2018 ஞாயிறுக்கிழமை நடைபெறமாட்டாது. 16.09.2018 அன்று வழமைபோல் அமர்வு நடைபெறுமென மத்தியஸ்த தவிசாளர் நா.நித்தியானந்தன் தெரிவித்துள்ளார். (இ

## பாம்புக்கடிக்கு இலக்கான பெண் வைத்தியசாலையில் அனுமதி

(சாவகச்சேரி)

கொடிகாமம்- மந்துவில் பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை பாம்புக்கடிக்கு இலக்கான பெண் ஒருவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். கொடிகாமம் மந்துவிலைச் சேர்ந்த 52 வயது ரஜிதமலர் என்பவரே சிகிச்சை பெற்று வருகிறார். மேலும் இனந் தெரியாத விஷக் கடிக்கு இலக்கான நிலையில் சுழிபுரத்தைச் சேர்ந்த 18 வயது இளைஞர், ஒருவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் (இ-30)

## தாக்குதலுக்கு இலக்கான தாயும் மகனும் காயம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வரணி-நாவற்காட்டு பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் தாக்குதலுக்கு இலக்கான தாயும், மகனும் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். காணித் தகராறு காரணமாக அயலவர்களுடன் இடம்பெற்ற மோதலில் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவத்தில் வரணி நாவற்காட்டை சேர்ந்த 59 வயதான தாயும், 37 வயதான மகனுமே காயமடைந்துள்ளனர். மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-30)

# மனிதப் புதைகுழிக்கு மாணவி கிருசாந்தி



கிருஷாந்தி அந்த வாரம் உயர்தரப்பரீட்சை எழுதுகின்றாள், சில மணி நேரங்களுக்கு முன்பே அவள் இரசாயன பாட பரீட்சையை எழுதவிருந்தாள்.

அந்த மாணவியின் பெயர் கிருசாந்தி குமாரசுவாமி. யாழ்ப்பாணத்தின் பிரபல மகளிர் பாடசாலையான சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் மாணவி. அன்று காலை தாயார் அவசர அவசரமாக உணவு தயாரித்துக்கொடுத்தார்,

பாடசாலைக்கு செல்லும் அவசரத்தில் அவள் முழுமையாக அதனை உண்ணவில்லை. அதன் பின்னர் சிறிது நேரம் படித்துவிட்டு, காலை 7.15 மணிக்கு அவள் தனது சிவப்பு சைக்கிளில் பாடசாலைக்கு புறப்பட்டாள். தாயார் கிருசாந்தியை வாழ்த்தி வழியனுப்பி வைத்தார். மகளின் சைக்கிள் மறையும் வரை தாயார் பார்த்துக்கொண்டிருந்தார்.

கிருசாந்தியின் தாயாரின் பெயர், ராசம்மா குமாரசுவாமி (வயது-59) இந்திய பல்கலைக்கழக பட்டதாரி. அவர்கள் வசிக்கும் கைதடியில் உள்ள பாடசாலையொன்றில் அவர் பிரதி அதிபராகப் பணிபுரிந்தார். மூத்த மகள் பிரசாந்தி கொழும்பில் கல்வி கற்றுக்கொண்டிருந்தார். மகன் பிரணவன் சாதாரண தரப்பரீட்சை முடிவுகளிற்காக காத்திருந்தார்.

ராசம்மா 1984 இல் தனது கணவரை இழந்தவர். அவரது வாழ்க்கை என்பது பிள்ளைகளை மையப்படுத்தியதாக காணப்பட்டது.

மகள் பாடசாலை சென்ற பின்னர் ராசம்மா, கோவிலிற்கு சென்றார். சனிக்கிழமை என்பதால் சக ஆசிரியையின் வீட்டிற்கு சென்று சிறிதுநேரம் உரையாடினார்.

அதன் பின்னர் அவர் வீட்டிற்கு சென்றார். சனிக்கிழமை விரதம் என்பதால் மதியம் பிள்ளைகளுடன் உணவு உண்பதற்காக அவர் காத்திருந்தார்.

தனது மகளின் பரீட்சை 9.30 இற்கு ஆரம்பித்து 11.30 மணிக்கு முடியும் என்பது அவரிற்கு தெரிந்திருந்தது. மகள் எப்படியும் 12.30 மணிக்கு வீடு திரும்புவார் என அவர் உணவு தயாரித்து வைத்துவிட்டு காத்திருந்தார்.

எனினும் மகள் எதிர்பார்த்த நேரத்திற்கு வீடு திரும்பாததால் அவர் பதற்றமடையத் தொடங்கினார். அவர் தனது சகோதரி சிவபாக்கியத்திடம் விடயத்தை தெரிவிக்க, அவரும் கவலையடையத் தொடங்கினார்.

இருவரும் வீட்டு வாசலில் வந்து பார்த்துக்கொண்டுநின்றனர். அவர்கள் மனதில் பல கவலைகள் சூழ்ந்துகொண்டன.

அந்தவேளையே அவர்களின் குடும்பநண்பரான கிருபாமூர்த்தி அவசர அவசரமாக வந்து அவர்கள் கேள்விப்பட விரும்பதா அந்த செய்தியை தெரிவித்தார்.

கிருசாந்தி செம்மணி காவலரணில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பதே அந்தச் செய்தி. நிலைமையின் விபரீதத்தை உணர்ந்ததும் நேரத்தை வீணடிக்காமல் ராசம்மா தனது மகளை தேடிச் செல்லத் தீர்மானித்தார்.

கிருபாமூர்த்தியும் அதனை ஏற்றுக்கொண்டார். மகன் பிரணவனும் அவர்களை பின்தொடர்ந்தான். அவர்கள் மயான பகுதியில் உள்ள அந்த காவலரணிற்கு சென்றனர்.

ஆனால் அதன் பின்னர் கிருசாந்தியோ அல்லது அவர்களோ வீடு திரும்பவில்லை.

மறுநாள் காலை கிருசாந்தி குடும்பத்தின் உறவினர்கள், அருகிலுள்ள இராணுவ முகாமிற்கு செல்ல வேண்டும் எனத் தீர்மானித்தனர்.

இராணுவமுகாமிற்கு சென்றனர். கிருசாந்தியும் குடும்பத்தினரும் காணாமறபோயுள்ளதை அறிவித்தனர். கிருசாந்தி தடுத்து வைக்கப்பட்டு 24 மணிநேரத்திற்குள் இது இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து உறுதியான தகவல்கள் வெளியாகாத நிலையில், கொழும்பைச் சேர்ந்த மனித உரிமை சட்டத்தரணி பூபாலன் இந்தச் சம்பவம் குறித்து தேசிய அளவில் கவனத்தை ஈர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

அவ்வேளை நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் மூலம் பாராளுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

கிருசாந்தி விசாரணைகளிற்காக லெப் கேணல் குணரட்ண தலைமையிலான குழுவொன்று யாழ்ப்பாணம் சென்றது. கிருசாந்தி காணாமற்போன தினத்தன்று செம்மணி காவலரணில் பணியாற்றியவர்கள் வேறு இடங்களிற்கு மாற்றப்பட்டிருந்தனர். எனினும் அவர்கள் அனைவரும் விசாரணைக்காக அழைக்கப்பட்டனர்.

அவர்கள் தாங்கள் கிருசாந்தியை பாலியல் வன்முறைக்கு உட்படுத்தியதை ஏற்றுக்கொண்டனர். கிருசாந்தியையும் ஏனையவர்களையும் கொலைசெய்ததையும் ஏற்றுக்கொண்டனர்.

அவர்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் கிருசாந்தி காணாமற்போய் 45 நாட்களிற்கு பின்னர் செம்மணி புதைகுழியிலிருந்து உடல்கள் மீட்கப்பட்டன. கிருசாந்தி தடுத்துவைக்கப்பட்ட காவலரணிலிருந்து சிறிய தூரத்திலேயே இந்த உடல்கள் காணப்பட்டன,

இதனை தொடர்ந்து அவ்வேளை அங்கு பணியாற்றிய அனைவரும் கைது செய்யப்பட்டனர்.

திரட்டப்பட்ட ஆதாரங்களை அடிப்படையாக வைத்து சட்டமா அதிபர் மூவர் அடங்கிய உயர் நீதிமன்ற நீதிபதிகள் முன்னிலையில் இவர்களிற்கு எதிராக குற்றச்சாட்டுகளை தாக்கல் செய்தார்.

நீதிபதிகள் நிமால் திசநாயக்க, அன்றூ சோமவன்ச, காமினி அபயரட்ண ஆகியவர்கள் அடங்கிய டிரையல் அட்பார் வீசாரணையின் போது குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் கூட்டுப்பாலியல் வல்லுறவில் ஈடுபட்டது தெரியவந்தது.

மேலும் ஆதாரங்கள் வெளியாவதைத் தடுப்பதற்காக அவர்கள் ஏனைய மூவரையும் கொலை செய்ததும் தெரியவந்தது.

ஏழு மாதங்கள் நீடித்த குழப்பம் மிகுந்த விசாரணைகளின் பின்னர் நீதிபதிகள், ஐந்து படையினர் மற்றும் ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் குற்றவாளிகள் என்பதை கண்டுபிடித்தனர். குற்றவாளிகள் அனைவருக்கும் தூக்குத்தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தனர்.

# மாணவி றெஜினா படுகொலை; இருவரிடம் வாக்குமூலம் பதிவு

(யாழ்ப்பாணம்)

படுகொலை செய்யப்பட்ட மாணவி றெஜினாவின் சப்பாத்துக்கள், தமது வீட்டுக்குள் இருந்ததாக உறவினர்களிடம் வெளிப்படுத்திய சிறுமி மற்றும் சிறுவன் ஒருவனிடமும் நீதவானின் சமாதான அறையில் வைத்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

அத்துடன், வழக்கின் முக்கியமான சாட்சிகள் இருவரை எதிர்வரும் 11 ஆம் திகதி மன்றில் முன்னிலையாக மல்லாகம் நீதிமன்றால் அழைப்புக் கட்டளை வழங்கப்பட்டது. அன்றுவரை சந்தேகநபர்கள் மூவரினதும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.

சுழிபுரம் காட்டுப்புலம் அ.த.க. பாடசாலையில் தரம் ஒன்றில் கல்வி கற்றுவந்த சிவனேஸ்வரன் றெஜினா (வயது-6 ) என்ற சிறுமி அப்பகுதித் தோட்டக் கிணற்றிலிருந்து கடந்த ஜூன் 25 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை சடலமாக மீட்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மூவர். கடந்த 2 மாதங்களாக தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் மல்லாகம் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராசா முன்னிலையில் வழக்கு கடந்த செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் சந்தேகநபர்கள் மன்றில் முற்படுத்தப்பட்டனர். வட்டுக்கோட்டைப் பொலிஸார் விசாரணை அறிக்கையை மன்றில் முன்வைத்தனர்.

படுகொலை செய்யப்பட்ட மாணவி சிவனேஸ்வரன் றெஜினாவின் சப்பாத்துக்கள், தமது வீட்டுக்குள் இருந்ததாக இந்த நீதிமன்றில் முன்னிலையாகி சாட்சியமளித்தவரின் மகளான சிறுமி ஒருவர் உறவினர்களிடம் தெரிவித்துள்ளார். அதனால் இந்தக் கொலை வழக்கில் திருப்பம் ஏற்பட்டுள்ளது.

எனவே அது தொடர்பில் அந்தச் சிறுமியை நீதிமன்றில் முற்படுத்தி அவரிடம் சாட்சியம் பெறப்பட வேண்டும். அதன் மூலமே இந்த வழக்கின் சரியான போக்கை உறுதிப்படுத்த முடியும். அத்துடன், குற்றவாளி எவராவது வெளியில் இருந்தால் அவரைக் கைது செய்ய முடியும் என்று பாதிக்கப்பட்டோர் நலன்சார்பில் முன்னிலையான சட்டத்தரணி கனகரட்ணம் சுகாஷ் கடந்த தவணையின் போது மன்றுரைத்திருந்தார்.

அதனடிப்படையில் சிறுமியை மன்றில் முற்படுத்த நீதவான் கடந்த தவணை கட்டளை வழங்கியிருந்தார்.

இந்த நிலையில் 10 வயது சிறுமி கடந்த 4 ஆம் திகதி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அத்துடன், 7 வயது சிறுவனும் சாட்சியாக மன்றில் முற்படுத்தப்பட்டார்.

இருவரிடமும் மல்லாகம் நீதவான் நீதிமன்ற சமாதான அறையில் நீதவான் ஏ.ஏ.ஆனந்தராசா முன்னிலையில் இரகசிய வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

இந் நிலையில் வழக்கின் முக்கிய சாட்சிகளான சிறுவன் உள்ளிட்ட இருவரை எதிர்வரும் 11 ஆம் திகதி மன்றில் முன்னிலையாகுமாறு நீதவான் உத்தரவிட்டார். அன்றுவரை சந்தேகநபர்கள் மூவரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டது. (இ-9)




❖1821-வெனிசுவெலா, கொலம்பியா, பனாமா மற்றும் ஈக்குவாடோர் ஆகியவற்றை உள்ளடக்கிய கிரான் கொலம்பியாக் குடியரசு உருவானது. சிமோன் பொலிவார் இதன் தலைவர் ஆனார்.

❖1822-பிரேசில், போர்த்துக்கல்லிடம் இருந்து விடுதலை அடைந்தது.

❖1965-இந்திய எல்லைகளில் சீனா தனது படைகளைக் குவிக்கப் போவதாக அறிவித்தது.

❖1978-கொழும்பு இரத்மலானை விமான நிலையத்தில் அவ்ரோ விமானம் ஒன்று குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

❖1998-கூகுள் ஆரம்பிக்கப்பட்டது.

❖1999-இலங்கை இராணுவத்தினரால் யாழ்ப்பாணம் செம்மணியில் கொல்லப்பட்ட 600 இற்கும் மேற்பட்ட தமிழர்களின் புதைகுழி விபரம் தெரியவந்தது.

### பிறப்புகள்

❖1533-இங்கிலாந்தின் முதலாம் எலிசபெத்(இ. 1603)

❖1877-முகம்மது மாக்கான் மாக்கார், இலங்கை குடியேற்றக்கால அரசியல்வாதி, தொழிலதிபர் (இ. 1952)

❖1911-அப்பாக்குட்டி சின்னத்தம்பி, இலங்கை மருத்துவர் (இ. 1986)

❖1925-பி. பானுமதி, இந்திய நடிகை, பாடகி, இயக்குநர் (இ. 2005)

❖1929-பெரி.சிவனடியார், தமிழகக் கவிஞர்(இ. 2004)

❖1930-எஸ்.சிவநாயகம், இலங்கைப் பத்திரிகையாளர் (இ. 2010)

❖1934-சுனில் கங்கோபாத்யாயா, இந்திய வங்காளக் கவிஞர் (இ. 2012)

❖1934-சோசப் இடமருகு, கேரள இதழாளர், இறைமறுப்பாளர் (இ. 2006)

❖1951-மம்முட்டி, மலையாள நடிகர்

❖1984-மலிங்க பண்டார, இலங்கைத் துடுப்பாளர்

❖1985-ராதிகா ஆப்தே, இந்தியத் திரைப்பட நடிகை

❖1987-இவான் ரசேல் வூட், அமெரிக்க நடிகை

### இறப்புகள்

❖1974-சி.மூ.இராசமாணிக்கம், இலங்கைத் தமிழ் அரசியல்வாதி (பி. 1913)

❖1988-வசுந்தரா தேவி, தமிழ்த் திரைப்பட நடிகை, பரதநாட்டியக் கலைஞர், கர்நாடக இசைப் பாடகி (பி. 1917)

❖2014-சு.கிருஷ்ணமூர்த்தி, தமிழக எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர் (பி. 1929)

### சிறப்பு நாள்

❖விடுதலை நாள் (பிரேசில் போர்த்துகலிடம் இருந்து 1822 இல்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 80 | 90 | 80 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 160 | 100 | 100 | 90 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 120 | 80 | 120 | 100 |
| தக்காளி | 40 | 50 | 50 | 30 | 60 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 40 | 40 | 50 | 30 |
| கோவா | 120 | 140 | 160 | 80 | 160 | 160 |
| கரட் | 200 | 250 | 240 | 210 | 250 | 150 |
| பூசணி | 80 | 70 | 50 | 50 | 80 | 40 |
| புடோல் | 80 | 60 | 80 | 30 | 80 | 40 |
| வாழைக்காய் | 120 | 100 | 100 | 70 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 120 | 80 | 100 | 80 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 90 | 100 | 120 |
| பாகற்காய் | 100 | 140 | 120 | 100 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 80 | 40 | 40 | 40 | 80 | 60 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 80 | 60 | 100 | 100 |
| பயற்றங்காய் | 100 | 80 | 60 | 50 | 100 | 100 |
| லீக்ஸ் | 80 | 90 | 100 | 80 | 100 | 120 |
| பீற்றூட் | 60 | 60 | 70 | 60 | 80 | 60. |
| கறிமிளகாய் | 100 | .100 | 100 | 80 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 60 | 70 | 60 | 40 | 80 | 30 |
| போஞ்சி | 200 | 240 | 140 | 120 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | 90 | 70 | – | 60 | 100 | 20 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 20 | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 40 | 60 | 60 | 70 | 80 | 30 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 40 | 45 | 30-50 | 60 |
| இராசவள்ளி | 130 | 140 | 150 | 110 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 120 | 130 | 120 | 80 | 160 | 100 |
| முள்ளங்கி | 40 | 50 | 50 | 30 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 40 | 20 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 35 | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 70 | 50 | 120 | 80 | 60 |

புண் மாறுவதை பிச்சைக்காரன் விரும்பமாட்டான்.
~ தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# தமிழர்களின் எதிர்காலத்தை காப்பாற்ற வாருங்கள்

அப்பா என்றொரு திரைப்படம் வெளிவந்தமை பலருக்கும் ஞாபகம் இருக்கும்.

அதில் தனது மகனுக்குத் தந்தை கூறு கின்ற ஆலோசனை இருக்கிற இடம்தெரியா மல் இருந்து விட்டுப் போகவேணும் என்பது தான்.

அந்தக் கருத்து அப்பா படத்துக்கு மட்டும் சொந்தமானதல்ல. அது எங்களில் பலருக்கும் பொருத்தமானது.

எந்தப் பிரச்சினையும் இல்லாமல் அமைதி யாக இருந்துவிட்டுப் போவது என்ற முடிவில் பலர் இருக்கின்றார்கள்.

இது ஒரு வாழ்க்கையா? என்பதுதான் நம் கேள்வி.

வாழ்க்கை என்றால் சவால்கள் இருக்கும். போட்டி இருக்கும். தர்மத்தின் வழியில் நடக் கின்றவர்களை அதர்மம் துரத்தும்.

இங்குதான் நீதியுடன் தர்மத்துடன் எங்கள் வாழ்வு நடக்க வேண்டும் என்ற உணர்வு ஏற் படும். இதனை நிலைநிறுத்துவதற்காக நாம் போராட வேண்டும்.

இந்தப் போராட்டம்தான் எங்கள் எதிர்கால சந்ததியின் வாழ்வை வழிப்படுத்தும்; அர்த்தப் படுத்தும்.

இதைவிடுத்து இருக்கிற இடம் தெரியாமல் இருந்துவிட்டுப் போவது என்றால் பிரச்சினை களை, சிக்கல்களை நாங்கள் கையாளாமல் எங்கள் எதிர்காலச் சந்ததியிடம் கைமாற்ற முற்படுகிறோம் என்றுதான் பொருள்படும்.

இப்போது கூட விடுதலைப் போராட்டத்தின் முடிவுக்குப் பின்னர் எங்கள் தமிழ் அரசியல் எப்படியாக உள்ளதென்பது நாங்கள் அறியாத தல்ல.

எத்தனையோ தியாகங்கள்; எத்தனையோ மரணங்கள்; எவ்வளவோ இழப்புக்கள் என்ற பட்டியலின் முடிவில்,

வன்னிப் பெருநிலப்பரப்பில் உயிர்விட்டவர் களின் குருதி காய்வதற்கு முன்பாகவே தமிழர் அரசியல் என்பது எப்படியாக மாறிவிட்டது என்பதை எம் கண்களால் காண்கிறோம்.

கண்முன்னால் தமிழினத்துக்குத் துரோகம் இழைக்கப்படுகிறது. தீர்வு கிடைக்காமல் செய் யப்படுகிறது. போர்க்குற்ற விசாரணை தடுக்கப் படுகிறது.

இதுவிடயத்தில் தமிழ் அரசியல் தரப்புக்கள் மறைமுகமாகப் பங்களிப்புச் செய்கின்றன எனும்போது,

தமிழ் மக்களின் எதிர்காலம் எப்படியாகும் என்பது பற்றி நாம் சிந்திக்காமல் இருக்க முடியாது.

எங்கள் காலம் ஏதோ முடிந்துவிடும். ஆனால் எங்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் என்ற சந்ததி நிம்மதியாக இந்த மண்ணில் வாழ முடியுமா என்ன?

ஆகையால் தமிழினம் வாழ்வதை உறுதிப் படுத்த ஆரோக்கியமான தமிழ் அரசியல் தலை மையின் உருவாக்கத்துக்காக தமிழ் மக்கள் ஒன்றுபட்டு ஒருமித்துக் குரல் கொடுக்க வேண் டும்.

# யாழில் இருந்து மட்டுவுக்கு 2 கார்களில் சென்ற 5 பேர் கேரளக் கஞ்சாவுடன் கைது

யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்புக்கு 2 கார்க ளில் 16 கிலோ கேரளக் கஞ்சாவை விற்பனைக்காக எடுத்துச் சென்ற 5 பேரை நேற்று முன்தினம் இரவு கைது செய்துள்ளதாக வாழைச் சேனை பொலிஸார் தெரி வித்தனர்.

பொலிஸாருக்குக் கிடை த்த இரகசிய தகவல் ஒன்றி னையடுத்து ஊழல் மற்றும் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ஏ. சிவதர்சன் தலைமையிலான பொலிஸ குழுவினர் நேற்று முன்தினம் இரவு வாழைச் சேனை விபுலானந்த வீதி யில் வைத்து இரு கார்களை யும் நிறுத்தி சோதனையிட்ட போது காருக்குள் மறைத்து எடுத்து வந்த 16 கிலோ கேர ளக் கஞ்சா மீட்கப்பட்டதுடன் வவுனியாவைச் சேர்ந்த ஒரு வர், அநுராதபுரத்தைச் சேர்ந்த 4 பேர் உட்பட 5 பேரைக் கைது செய்ததுடன் இரு கார்க ளையும் பறிமுதல் செய்த னர்.

குறித்த சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்களை நீதி மன்றத்தில் ஆஜர்படுத்த நட வடிக்கை எடுத்துள்ளதாக பொலி ஸார் தெரிவித்தனர். (இ-7)

# விழுமியங்கள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணக்கல்வி அமை ச்சினால் வலய ரீதியாக பாடசாலை மாணவர்களுக்கு சமுதாய, பண்பாட்டு விழுமி யங்கள் தொடர்பான விழிப் புணர்வை ஏற்படுத்தும் நோக்கமாக விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்துவத ற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் விழிப்பு ணர்வுக் கருத்தரங்கு யாழ்ப் பாண வலயப் பாடசாலை அதிபர்கள், தெரிவு செய்யப் பட்ட ஆசிரியர்கள், யாழ். வலய பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு இன்று 7ஆம் திகதி வெள் ளிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சபாலிங்கம் மண்டபத்தில் நடைபெ றும்.

அதனைத் தொடர்ந்து இணையத்தள அங்குரார்ப் பண வைபவமும் நடை பெறும்.

இவ்விழிப்புணர்வுக் கருத் தரங்கினை நடத்துவதற் கான வளவாளர்களாக கம்ப வாரிதி இ.ஜெயராஜ், பேச்சா ளர் கலாநிதி ஶ்ரீ.பிரசாந்தன் ஆகியோர் தெரிவு செய்யப் பட்டுள்ளார்கள் என கல்விய மைச்சின் செயலாளர் சி.சத் தியசீலன் அறிவித்துள் ளார். (இ)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைக ளுக்காக நாளை சனிக்கி ழமை காலை 8 மணியிலி ருநது மாலை 5 மணி வரை மன்னார் பிரதேசத்தில் பறயனாலங்குளம் ஒருபகுதி பெரியகுஞ்சுக்குளம், மாதர் கிராமம், பெரியமுறிப்பு, தேக்கம் மடுசந்தி, கட்டை யடம்பன், மாலவராயர் கட் டையடம்பன், தம்பானிக் குளம், பன்னிவெட்டுவான், தொழில்நுட்பக்கல்லூரி பன்னி வெட்டுவான், இசை மலைத் தாழவு கற்கடந்தகுளம், நீராவி புரம், செட்டியார் கட்டைய டம்பன், முருங்கன் விதை பண்ணை, தேக்கம் நானாட் டான் பிரதேசசபை, மடுச் சந்தியிலிருந்து பூமலர்ந்தான் வரை, மடுமாதா ஆலயப் பிர தேசம் ஆகிய பிரதேசங்களி லும் மின் தடைப்படும்.(இ-9)



## ஶ்ரீஶ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### குழப்பமும் தீர்மானமும்

குழ்ப்பம் உள்ளபோது மாத்திரமே ஒரு முடிவு எடுக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது. குழப்பம் இல்லாத போது முடிவு எடுக்க வேண்டும் என்னும் தேவை இல்லை.

உங்களுடைய மேசையின் மேல் ஒரு மரத்துண்டும் ஒரு பிஸகட்டும இருநதால எதைசசாபபட வேணடும என நீங்கள் முடிவெடுக்கவேண்டியதில்லை. இல்லையா? எபபோதும வாயபபுககள உளள நிலையில தான தீர்மானம் எடுக்கவேண்டியிருக்கிறது. அப்படித் தெரிந தெடுபபது எபபோதும குழபபமே. அதிகமான தாமானங கள எடுககவேணடும எனும போது நஙகள மிகவும குழபபமடைகிறாகள. அதனால எபபோதும துனபததிறகும இன்பத்திற்கும் இடையில் ஊசலாடிக் கொண்டிருக் கின்றீர்கள். ஆகையால்தான் தீர்மானிப்பவர்கள் எல்லாம் குழப்பத்திலிருக்கின்றார்கள்?(சிரிப்பு)

உங்களுள் ஒரு நடிகனும் இருக்கிறான். ஒரு சாட்சிக்காரனும் இருக்கிறான். நடிகன் ஒன்று குழம்பியி ருக்கிறான் அல்லது தீர்மானிக்கிறான். ஆனால் சாட்சிக் காரன் சற்று கூர்ந்து கவனித்துப் புன்னகை செய்கிறான்.

நடிகன் இல்லாதபோது செயற்பாடு தன்னியல்பாக நிகழ்கிறது. உன்னில் அதிகமாக சாட்சிபாவம் வளரும் போது நீங்கள் எதையும் வேடிக்கையாக எடுத்துக் கொள்கிறீர்கள், பாதிக்கப்படாமலிருக்கிறீர்கள், உங்களுக் குளளும உஙகளைச சுறறிலும நமபிககை, அனபு, மகிழசசி எலலாம தெளிவாக வெளிபபடுகினறன.

இபபோது நஙகள குழபபமடைநதுளளாகளோ? முடி வெடுத்து விட்டீர்களா? அல்லது மகிழ்ச்சியாயுள்ளீர்களா?

எபர்ஹார்டு: குழப்பத்தில் வெளிப்படுத்தல் மிகக் கடினம். அப்போது நாம் தெரிவு செய்ய வேண்டியவர்க ளாய் இருக்கிறோம் அல்லவா?

ஊர்மிளா: தெரிவு செய்வதென்பது குழப்பம் என்று நாம் தீர்மானித்து இருக்கிறோம். (எல்லோரும் சிரிக்கிறார்கள்)

ஹான்ஸ் பீட்டர்: குழப்பமில்லாமல் சுதந்திரம் இருக்கிறதா?

ஶ்ரீஶ்ரீ: நீங்கள் குழப்பமடைந்திருக்கும் போது சுதந்திரம் இல்லை.

ஹான்ஸ்பீட்டர்: அப்படியென்றால் தெரிவு செய்வதில் சுதந்திரம் என்பது என்ன?

ஶ்ரீஶ்ரீ: குழப்பம் (சிரிப்பு)

# பொது அறிவுப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் அனை த்து பல்கலைக்கழக தமிழ் மாணவர்களையும் ஒன்றி ணைத்து யாழ்.பல்கலைக் கழக மாணவர்கள் ஒன்றி யம் பெருமையுடன் நடத்தும் "தமிழமுதம்" மற்றும் தமிழ் விழாவினை முன்னிட்டு வட மாகாணத்தின் அனை த்து உயர்தர மாணவர் களுக்குமான "போட்டிப் பரீட்சை" (தமிழர் பண்பாடு, கலை, கலாசாரம், வரலாறு மற்றும் தமிழர் - புவியியல் பாடப்பரப்பை உள்ளடக்கி) என்பன நாளைமறுதினம் 9ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணி முதல் யாழ்ப்பாணம் - யாழ். பல்கலைக்கழகம், கிளி நொச்சி - கிளிநொச்சி மகா வித்தியாலயம், முல்லைத் தீவு - புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, மன்னார் - சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி, வவுனியா - தமிழ் மத்திய மகா வித்தியாலயம் ஆகிய பரீட்சை மத்திய நிலையங் களில் இடம்பெறவுள்ளதாக யாழ்.பல்கலைக்கழக மாண வர் ஒன்றியம் அறிவித்துள் ளது.

மேலும் எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று யாழ்.பல்கலைக் கழக மைதானத்தில் இடம் பெறவிருக்கும் விழாவில் போட்டியின் முதல் வெற்றி யாளர்களுக்கான சான்றித ழும் பரிசுத் தொகையும் வழங்க கௌரவிக்கப்பட வுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது. (ம)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### உங்கள் வீட்டில் எப்போதும் பணம் குறையாமல் இருக்கவேண்டுமா?

நீங்கள் வைக்கும் இடம் மட்டுமே இதற்கு முக்கியம் அல்ல. அந்த போத்தல் தினமும் உங்களுடைய கண்களில் படும்படியாக இருப்பது மிகமிக அவசி யம்.இதன் மூலம் உங்களுடைய இருப்பிடத்தை தன ஆகர்ஷணம் மிக்க இடமாக மாற்ற முடியும்.

இப்படி ஒரு மாதங்கள் வரை வைத்திருக்கலாம். அதன்பின் ஒவ்வொரு மாதமும் அந்த பாட்டிலுக்குள் இருக்கும் அரிசியை பறவைகளுக்கு உணவாகப் போட்டுவிட்டு, மீண்டும் அதே பாட்டிலில் முன்பு குறிப்பிட்ட படியே அதே நாணயங்களைக் கொண்டு, மீண்டும் அரிசியால் நிரப்பி வையுங்கள்.

பிறகு பாருங்கள். லட்சுமி உங்கள் வீட்டிலேயே நிரந்தரமாகத் தங்க ஆரம்பித்துவிடுவாள்.

மாதம் ஒரு முறை அரிசியை பறவைகளுக்கு இட்டு பின் அதே நாணயங்களை வைத்து மாற்றவும். மிக விரைவாக பலன் தரக்கூடிய சூட்சும பரிகாரம் இது

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### நல்லவருடன் சேருங்கள்

✦ ஒருவன் நாள் ஒன்றுக்கு இருமுறையாவது பாவமன்னிப்பு கேட்கவில்லையானால் அவன் தன்னு டைய ஆத்மாவுக்கு தீமை இழைத்து விட்டான்.

✦ இவ்வுலக வாழ்வில் மதிமயங்காமல் வாழு. அல்லாஹ் உன்னை நேசிப்பான்.

✦ யார் சொன்ன வாக்குப்படி நடக்கவில்லையோ அவன் உண்மை முஸ்லிம் அல்ல.

✦ கெட்ட கூட்டத்தாருடன் இருப்பதை விட தனிமை யாக இருப்பதே மேல். தனிமையாக இருப்பதை விட நல்ல கூட்டத்தாருடன் இருப்பதே மேல்.

✦ நீங்கள் எவர்களுடன் சேர்ந்து வாழுகின்றீர்களோ அவர்களுடனே நாளை மறுமையிலும் சேர்ந்து இருபபரகள.

✦ உஙகளுடைய இதயததை சூழசசி, பொறாமை என்ற இரு விஷயங்களைவிட்டு பாதுகாத்துக் கொள் ளுங்கள்.

✦ மனிதர்களைப் பார்த்து வெட்கப்படுவதை விட அல்லாஹ்வுக்கு வெட்கப்படுவதே உயர்வானதாகும்.

# சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III – 2018

# யாழ்ப்பாண மாவட்ட இறுதிப் போட்டி சென்றலைட்ஸ் எதிர் மூளாய் விக்டோரி

சிறிலங்கா கிரிக்கெட் தொடருக்கான யாழ். மாவட்ட இறுதிப் போட்டி எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் காலை 9.30 மணிக்கு சென்றலைட்ஸ் அணிக்கும் மூளாய் விக்டோறி அணிக்கும் இடையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியை பிரதம விருந்தினராக கலந்து கொள்ளும் அதி வணக்கத்துக்குரிய ஏ.பி. திருமகன் போட்டியை ஆரம்பித்து வைப்பார். சென்றலைட்ஸ் அணி முதல் சுற்றில் டிரை றீறேன் அணியை 96 ஆட்டங்களாலும் கே.சி.சி.சி. அணியை 5 இலக்குகளாலும் கால் இறுதி முன் போட்டியில் றெயின்போ அணியை 8 இலக்குகளாலும் கால் இறுதிப் போட்டியின் லிங்ஸ் அணியை 142 ஓட்டங்களாலும் அரை இறுதிப் போட்டியில்பற்றீசியன்ஸ்அணியை 4 இலக்குகளாலும் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளன.







மூளாய் விக்டோறி அணி முதல் சுற்றில் நியூஸ்ரார் அணியை 6 இலக்குகளால் வெற்றியும் ரி.சி.சி. அணியிடம் 3 இலக்குகளால் தோல்வியும் கால் இறுதி முன் போட்டியில் ஜொலிஸ்ரார் அணியை 107 ஓட்டங்களாலும் கால் இறுதிப் போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணியை 8 ஓட்டங்களாலும் அரை இறுதிப் போட்டியில் யாழ். ஜொனியன்ஸ் அணியை 8 ஓட்டங்களாலும் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளன.

மூளாய் விக்டோறி அணி மேற்கூறப்பட்ட தொடரின் இறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டமை இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. இப்போட்டியில் கலந்து கொள்ளும் இரு அணிகளும் சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III அகில இலங்கை ரீதியில் 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது. இவ்விரு அணிகளும் 2 ஆவது சுற்றில் மற்றையமாவட்டங்களிலுள்ள கழகங்களுடன் போட்டியில் கலந்து கொள்வார்கள்.(க)

## அச்சுவேலி யுத் அணியினை வீழ்த்தி அரையிறுதிக்குள் நுழைந்தது கலைமதி



ஸ்ரீமுருகன் ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் 45 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தும் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் காலிறுதிப் போட்டி கடந்த புதன்கிழமை இரவு 7 மணிக்கு ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இப் போட்டியில் புத்தூர் கலைமதி A அணியை எதிர்த்து அச்சுவேலி யுத் விளையாட்டுக்கழகம் மோதியது.

முதற்சுற்றை 25:23 என அச்சுவேலி யுத் அணியும் இரண்டாவது சுற்றை 25:19 என புத்தூர் கலைமதி அணியும் வென்றதால் மூன்றாம் சுற்று மேலும் விறுவிறுப்பானது.

தொடர்ந்து நடைபெற்ற மூன்றாவது சுற்றை 25:23 என புத்தூர் கலைமதி அணி வென்று அரையிறுதிக்கு தகுதிபெற்றது.

மற்றுமொரு அரை யிறுதிப்போட்டியில் புத்தூர் கலைமதி அணியும் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (க)

## இலகு வெற்றியுடன் அரையிறுதிக்குள் நுழைந்தது சென்றலைட்ஸ் அணி

ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழகம், யாழ்.மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கிரிக்கெட்அணிகளுக்கிடையில் 30 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட சுற்றுப் போட்டியொன்றை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தி வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியின் காலிறுதியாட்டம் ஒன்றில் சென்றலைட்ஸ்அணியை எதிர்த்து திருநெல்வேலி கிரிக்கெட் விளையாட்டுக்கழக அணி மோதியது. சரியான நேரத்தில் இரண்டு அணிகளும்வருகை தராத காரணத்தால் போட்டி 25 ஓவர்களாகக் குறைக்கப்பட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி, 25 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 194 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் நிசாந்தன் 39, மயூரன் 21, நிரோசன் 22 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் திருநெல்வேலி அணி சார்பாக தீபநாதன், சிவராஜ், சுரேஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி அணி 19.3 ஓவர்களில் 102 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்களையும் இழந்தது. அதிக பட்சமாக றஜிந்தன் 37 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில் சென்றலைட்ஸ் அணி சார்பாக, டர்வின் 4, ஜெரிக்துசாந்த், சுஜன் தலா 3 விக்கெட்களையும் கைப்பற்றினர். (க-26)

## கைதடி தெற்கு விநாயகர் சனசமூக நிலையத்தின் மாபெரும் தாச்சிப் போட்டி முடிவுகள்

கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையத்தின் 71வது ஆண்டு நிறைவை முன்னிட்டு கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையமும் விநாயகர் விளையாட்டுக்கழகமும் இணைந்து யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் தென்மராட்சி ரீதியில் நடைபெறும் மாபெரும் தாச்சி சுற்றுப் போட்டி தொடரின் நேற்று முன்தினம் குழு B பிரிவுக்குரிய ஏழாம் நாள் போட்டியில் கைதடி கலைநகர் துர்க்கா C விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து கைதடி மத்தி வளர்மதி C விளையாட்டுக் கழகம் மோதியது. இப்போட்டியில் கைதடி கலைநகர் துர்க்கா C விளையாட்டுக் கழகம் 9:1 என்ற புள்ளிகள் அடிப் படையில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

இன்று விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ள குழு A பிரிவுக்குரிய போட்டியில் கைதடி வடக்கு செவின் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கைதடி மத்தி வளர்மதி B விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (க)







இணுவில் இந்து யாழ். மாவட்ட ரீதியாக நடத்திய கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இப்போட்டியில் இணுவில் கலை ஒளி விளையாட்டுக்கழகம் சங்கானை உதயதாரகை அணியும் பலப் பரீட்சை நடத்தின. விறுவிறுப்பாக நடைபெற்ற இறுதிப்போட்டியில் இணுவில் கலைஒளி விளையாட்டுக்கழக அணி சம்பியன் பட்டத்தை வென்றது. (க)

## வேலைக்கு அமர்த்த...

கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் நேற்று மதியம் 2.30 மணிமுதல் 4.30 மணி வரையான காலப்பகுதியில் யாழ்ப்பாணம் பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வர்ண ஜெயசுந்தர மற்றும் யாழ்.பொலிஸ் நிலைய சிறுவர் பெண்கள் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி சிந்து பாமினி மற்றும் சிறுவர் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலர் நல்லூர் ஆலய சூழலிற்கு சென்று சோதனையில் ஈடுபட்டனர்.

ஆலய சூழலில் வெளிமாவட்டங்களில் இருந்து வருகை தந்து சிறுவர்களை வைத்து யாசகம் எடுப்பது மற்றும் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல், ஊதுபத்திகள் விற்பனை செய்யும் சிறுவர்கள் தொடர்பில் பல விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது, யாசகம் பெறும் சிறுவர்களை பிடிக்க முடியாத நிலை காணப்பட்டதுடன், வியாபார நிலையங்களில் வேலைக்கு அமர்த்திய சிறுவர்களை உடனடியாக வேலையில் இருந்து நிறுத்துமாறு வியாபார நிலைய உரிமையாளர்களுக்கு பொலிஸ் அத்தியட்சகர் கடுமையான எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அதேநேரம், சிறுவர்களை வைத்து யாசகம் பெறுபவர்கள் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்குமாறு பொது மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளதுடன், நல்லூர் ஆலய சூழலில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ள பொலிஸ் உத்தியோத்தர்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

எதிர்வரும் நாட்களில் நல்லூர் கந்தனின் விசேட திருவிழாக்கள் நடைபெறவுள்ளமையினால், சிறுவர்களை வைத்து யாசகம் பெறுபவர்கள் மற்றும் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துபவர்கள் தொடர்பில் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென்றும், ஊதுபத்தி விற்பனையில் ஈடுபடும் சிறுவர்கள் ஆலய வளாகத்தில் நிற்பதைக் கண்டால், உடனடியாக பொது மக்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்குமாறும் யாழ்ப்பாண பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கேட்டுக்கொண்டுள்ளார். (ம-9-101)

## ஹெரோயினுடன்...

சோதனை நடவடிக்கையினை மேற்கொண்டனர்.

இதில் சந்தேகத்திற்கிடமாக நின்ற இருவரை சோதனை செய்த போது அவர்களிடம் 280 மில்லிக்கிராம் ஹெரோயின் பைக் கற்றுக்களை மீட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-60)

## 15 மில்லியன் போதை...

ஒன்றில் ஒரு கோடியே 30 இலட்சத்து 50 ஆயிரத்து 170 போதைப்பொருள் அடங்கிய வில்லைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. 6 ஆயிரத்து 40 கிலோ கிராம் எடையுடையவை.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய, சுங்கப் பிரிவினருடன் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போதே இவை கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

கைப்பற்றப்பட்டுள்ள போதை வில்லைகளின் பெறுமதி சுமார் 150 கோடி ரூபா என்பதுடன், அவை இதுவரை நாட்டிற்கு கொண்டு வரப்படாத போதைப்பொருள் வகையைச் சேர்ந்தது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தக் கொள்கலன் லிபியாவிற்கு அனுபபுவதற்காகவே இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் பேச்சாளர் சுட்டிக்காட்டினார். (ம)

(முன்னர் கிடைத்த செய்தி உள்ளே...)

## தமிழ் மக்களின் ஒற்றுமை...

தினம் இடம்பெற்ற அரசியல் நிகழ்வில் கலந்துகொண்டு பேசிய எம்.ஏ.சுமந்திரன் இதனை குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

"காலியில் இடம்பெற்ற கருத்தரங்கில் சமஷ்டி பற்றி தான் கூறிய சந்தர்ப்பம், கேட்கப்பட்ட கேள்வி, அந்தச் சூழல் என்பவற்றை புரிந்து கொள்ளாமல் ஒரு பகுதியை மட்டும் வைத்து விவாதங்கள் தொடர்கின்றன.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தனது தலைமைப் பாத்திரத்தில் தவறிவிட்டது என்று கூறிக்கொண்டிருப்பவர், மீண்டும் தமிழத் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளராக நிற்க முடியாது.

அதற்குச் சாத்தியமில்லை. எனவே, வடமாகாண முதலமைச்சர் தான் விரும்புகின்ற தனது நான்காவது தெரிவினை கையில் எடுக்க வேண்டும்.

கட்சி அரசியலைவிட்டு விலகி, இங்கே இருக்கின்ற அரசியல் கட்சிகளையும், வெளிநாடுகளில் இருக்கின்ற தமிழ் அமைப்புக்களையும் ஒருங்கிணைத்து தமிழ் மக்களுக்கு ஓர் அரசியல் தீர்வினைப் பெறும் முயற்சியின் ஒட்டுமொத்தமான தலைமை பாகத்தை வகிக்கும் மிக முக்கியமான பாத்திரத்தை ஏற்க விக்னேஸ்வரன் முன்வருவாரானால், அவரோடு இணங்கி, அவரது தலைமைக்குக் கீழ், மிகவும் சந்தோசமாக செயற்பட நாங்கள் தயாராகவே இருக்கின்றோம்.

வடமாகாண முதலமைச்சர் தமிழ் தேசியக் கூட்டமைபில் இருந்து வெளியேறி, கூட்டமைப்பிற்கு எதிராக செயற்பட்டால் அதற்கான பொறுப்பை நாங்கள் ஏற்க முடியாது.

அது அவர் செய்கின்ற தவறு. இந்நிலையில், தமிழ் மக்களின் ஒற்றுமையை சீர்குலைக்காமல் இருக்க நாங்கள் தேர்தலில் மோதிக் கொள்ள கூடாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அண்மையில் இடம்பெற்ற தமிழ் மக்கள் பேரவையின் கூட்ட தொடரில் பேசிய முதலமைச்சர் விக்னேஸ்வரன், என்னிடம் தற்போது நான்கு மாற்றுவழிகள் தரப்பட்டுள்ளன.

இதில், நான்காவது தெரிவாக கட்சி அரசியலை விட்டு எமது தமிழ் மக்கள் பேரவையை ஒரு உண்மையான மக்கள் பேரியக்கமாக மாற்றி, உள்நாட்டு, வெளிநாட்டு தமிழ் மக்களை ஒன்றிணைத்து அரசாங்கத்துடன் எமக்கேற்ற தீர்வொன்றை முன் வைத்துப் பெற முயற்சிப்பது என தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## கடத்தப்பட்ட குடும்ப...

ஒன்றில் வர்ணப்பூச்சு வேலை செய்து கொண்டிருந்துள்ளார்.

நேற்று மாலை 6.30 மணியளவில் அந்த வீட்டுக்கு மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கரவண்டியில் வந்த 10 பேர் கொண்ட குழுவினர் மேற்குறித்தநபரை அடித்து முச்சக்கர வண்டியில் ஏற்றிச்சென்றுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக சம்பவ இடத்தில் நின்றவர்கள் உடனடியாக யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு தெரிவித்துள்ளனர். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட போது, குறித்த நபரை கடத்திச்சென்றவர்கள் கொட்டடிப்பகுதியில் அவரை வைத்திருப்பதாக தகவல் கிடைத்ததை தொடர்ந்து அந்த இடத்துக்கு சென்று நபரை மீட்டதுடன் கடத்த முற்பட்டதாக சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

விசாரணையின் போது குறித்த சம்பவம் பணம் கொடுக்கல் வாங்கல் காரணமாக இடம்பெற்றதாகவும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-9)

## காணாமல் ஆக்கப்பட்...

அடையாளங் கண்டு குற்றவியல் குற்றச் சட்டம் அமுலாவதற்கு முன்னர் இடம்பெற்ற சம்பவங்களையும் அதில் சேர்க்க வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வலிந்து காணாமல் ஆக்கப்படுதலை குற்றவியல் சட்டத்தில் உள்ளடக்க கூடியவகையில் சட்ட திருத்தத்தை மேற்கொள்ள வேண்டும் எனவும் வலிந்து காணாமல் ஆக்கப்படுவதை மனிதத்துவத்திற்கு எதிரான குற்றம் என அடையாளப்படுத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் ஆட்கள் கைது செய்யப்படும் போதும் தடுத்து வைக்கும் போது உரிய செயல்முறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுப்பு காவலில் உள்ளோரின் பெயர் பட்டியலையும் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடங்களையும் வர்த்தமானியில் பிரசுரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

காணாமல் போனோருக்கான நினைவு தினம் ஒன்றை பிரகடனப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்தின் இடைக்கால அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## பிரச்சினைகளை எதிர்கொண்டு...

அதிகாரத்தை கைப்பற்றினோம். தேசிய அரசாங்கம் என்ற ரீதயில் மக்களின் அங்கீகாரத்துடன் நாம் தெரிவானோம். தற்பொழுது நாட்டின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு வருகின்றன. பெரும் கடன்சுமையுடன் நாம் பொறுப்பேற்றோம் .

பல வருடங்களாக உற்பத்தி செய்யப்படாத வயல் நிலத்தையே நாம் பொறுப்பேற்றோம். தற்போது மிகவும் நெருக்கடிக்கு மத்தியில் அறுவடை கிடைத்திருப்பதாகவும், அறுவடை கிடைக்கும் போது சிலர் விமர்சனங்களை முன்வைப்பதாகவும் அவர் கூறினார்.

பிரச்சினைகள் அனைத்தையும் எதிர்கொண்டு நாடு தற்பொழுது முன்னோக்கி பயணிக்கின்றது. 2025ஆம் ஆண்டுக்கு பின்னரும் முன்னோக்கி பயணிப்போம் என்று அவர் கூறியுள்ளார். (ம)

## காணாமல் ஆக்கப்பட்...

கத்தின் இடைக்கால அறிக்கையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

காணாமற்போனோரினதும் காணாமல் ஆக்கப்பட்டோரினதும் குடும்பங்கள் எதிர்நோக்கும் பல்வேறு வன்முறைகள் மற்றும் தொந்தரவுகள் தொடர்பாக, காணாமற்போனோர் அலுவலகம் அறிந்துள்ளது.

கடந்தகால ஆணைக்குழுக்கள் மற்றும் நல்லிணக்க பொறிமுறைக்கான ஆலோசனை செயலணிக்கு கிடைத்துள்ள, பொதுமக்களின் முறைப்பாடுகளுக்கமைய பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பெண் உறுப்பினர்கள் பாலியல் தொந்தரவுகளுக்கும், பாலியல் இலஞ்சங்களுக்கும் ஆளானார்கள் என்று அறிக்கையிடப்பட்டிருந்தது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்ப உறுப்பினர்கள், காணாமற்போனோர் தொடர்பான தகவல்களை வழங்குவதற்கு அல்லது சில நிர்வாக நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு,பாலியல் இலஞ்சம் கோரப்பட்ட சந்தர்ப்பங்களும் அறிக்கையிடப்பட்டுள்ளன. (ம)

## அரசிலிருந்து மைத்திரி வெளியேற வேண்டும்

(கொழும்பு)

மக்களின் கோரிக்கைக்கு மதிப்பளித்து புதிய அரசாங்கம் ஒன்றை அமைக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மாற்று அணி கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மாற்று அணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கு தொடர்ந்தும் இந்த அரசாங்கத்தில் இருப்பதற்கு முடியாது. அதனால் கட்சியின் வருடாந்த சம்மேளனம் இடம்பெறுவதற்கு முன்னர் அரசாங்கத்தில் இருந்து வெளியேறவேண்டும் என்ற செய்தியை நாங்கள் ஜனாதிபதிக்கு தெரிவிக்கின்றோம்.

அவ்வாறு சுதந்திர கட்சி வெளியேறா விட்டால் தற்போது கட்சியில் இருப்பவர்களும் கட்சியில் இருந்து நீங்கிக்கொள்வார்கள் என தெரிவித்துள்ளார். (ம)

## 2-வது ஜனபல மக்கள்...

இதேவேளை, மக்கள் சக்தி கொழும்பிற்கு எனும் தொனிப்பொருளில் கொழும்பில் நடத்தப்பட்ட போராட்டத்தின் மூலம், நேற்று முன்தினம் நண்பகல் 12 மணிமுதல் கொழும்பின் அதிகாரத்தை ஒன்றிணைந்த எதிரணி கைப்பற்றியிருந்ததாகவும் குறிப்பிட்டார். (ம)

## குற்றஞ் சாட்டப்பட்டுள்ள...

கடத்தல் மற்றும் காணாமல்போகச் செய்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டினை எதிர்கொண்டுள்ள ஆயுதபடையினர் மற்றும் பொலிஸாரை விசாரணைகள் முடிவடையும் பணியிலிருந்து இடைநிறுத்த வேண்டும் அவர்களை இடமாற்றம் செய்யக்கூடாது என காணாமல்போனோர் அலுவலகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதேபோன்று குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ள அதிகாரிகளுக்கு பதவி உயர்வு வழங்ககூடாது அல்லதுவேறு உயர் பதவிகளை வழங்ககூடாது எனவும் காணாமல் போனோர் அலுவலகம் பரிந்துரை செய்துள்ளது.

கடத்தல் மற்றும் காணாமல்போகச் செய்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டுகளிற்கு உள்ளாகியுள்ள சில அதிகாரிகள் தொடர்ந்தும் அதே உயர் பதவிகளில் நீடிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர் என இடைக்கால அறிக்கையில் தெரிவித்துள்ள காணாமல்போனோர் குறித்த அலுவலகம் இதன் மூலம் அவர்கள் விசாரணைகளில் தாக்கம் செலுத்தும் நிலை காணப்படுகின்றது எனவும் குறிப்பிட்டுள்ளது.

விசாரணைகளிற்கு உதவும் தகவல்களை வழங்க முன்வந்த படையினர் துன்புறுத்தல்களை சந்தித்த சம்பவங்களும் உள்ளன என காணாமல்போனோர் அலுவலகம் தனது இடைக்கால அறிக்கையில் பரிந்துரை செய்துள்ளது.

நீதிமன்றத்தில் இடம்பெறும் வழக்கொன்றில் சந்தேகநபராக குறிப்பிடப்பட்டுள்ள படைத்தரப்பை சேர்ந்த அதிகாரியொருவர் இன்னமும் பணியிலிருந்து இடைநீக்கப்படவில்லை அவர் தொடர்ந்தும் அதிகாரியாக பணியாற்றுகின்றார் எனவும் காணாமல் போனவர்கள் அலுவலகம் தெரிவித்துள்ளது. (ம)

### கொவிசெத

திகதி 2018.09.06
சீட்டிழுப்பு இலக்கம் 1874
ஆங்கில எழுத்து: Z
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 13 36 70 80
தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

திகதி 2018/09/06
சீட்டிழுப்பு இலக்கம் 3740
ஆங்கில எழுத்து: K
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 2 6 6 7 5 9
தேசிய லொத்தர் சபை

### வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 1508
திகதி 2018/09/06
J G Z
வெற்றி இலக்கங்கள்: 11 17 37 59
போனஸ் இலக்கம்: 03
தேசிய லொத்தர் சபை

### நீரோகா

திகதி 2018/09/06
சீட்டிழுப்பு இலக்கம் 443
லக்கினம்: தனுசு
வெற்றி இலக்கங்கள்: 02 10 34 63
போனஸ் இலக்கம்: 62
தேசிய லொத்தர் சபை

FLC FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்சு
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)
40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 18.09.18 செவ். 3 pm.
181, பிரதான வீதி, நெல்லியடி. 0762 669 614 ஆரம்பம் :17.09.18 மாலை 3.30 மணி
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
(சி-3753)

உயர்தர கணக்கீடு \ வணிகக்கல்வியும் கணக்கீடும்
பிரத்தியேக / குழு வகுப்புக்கள்
Mr.BALAKAJEN
A/L 2019, A/L 2020
O/L 2018, Grade 10
இடம்: • சுந்தர்மடம் சந்தி • கொழும்புத்துறை
தொடர்புகளுக்கு: 0772168884
(5579)

# யாழ். கல்வியங்காட்டு...

களால் அடித்து நொறுக்கியதுடன், வீட்டில் இருந்தவர்களையும் வாளால் வெட்டித் தாக்கிவிட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

குறித்த வாள்வெட்டுச் சம்பவத்தில் வேலுப்பிள்ளை செல்வராசா (வயது 70), செல்வராசா சஜீபன் (வயது 25) ஆகியோருடன் அயல் வீட்டுக்காரப் பெண்மணி பாலேந்திரன் சரோஜினிதேவி (வயது 61) ஆகிய மூவருமே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-9-101)

நீரிழிவு (சலரோகம்), மூட்டுவாதம், முட்டு (வீசிங்) போன்ற 16 வகையான நோய்களுக்கு மூன்று மாதங்களில் நிரந்தர தீர்வு
நோயாளிகளின் கோரிக்கைக்கு அமைய
37 வருடங்களாக மாத்தளையில் சேவையாற்றிய பிரபல ஹோமியோபதி வைத்திய நிபுணரின் சேவை தற்போது பரந்தனிலும் யாழ்ப்பாணத்திலும் உங்களுக்காக...
(இலங்கையில் உள்ள ஐந்து பிரபல ஹோமியோபதி நிபுணர்களில் ஒருவர்)
கிளினிக் நடைபெறும் திகதி:
பரந்தனில் 08.09.2018 (நாளைய தினம்)
யாழ்ப்பாணத்தில் 15.09.2018
90 நாட்களில் உங்கள் நோய்களில் இருந்து முற்றாக விடுபடலாம்
I.A.S. HOSPITAL ஐ.ஏ.எஸ் மருத்துவமனை
ஒமெகா இன், இல.101, பிரதான வீதி, யாழ்ப்பாணம் (2ஆம் குறுக்குத் தெரு சந்தியில்)
பல நோக்கு கூட்டுறவு சங்க கட்டடம், பரந்தன் சந்தி, பரந்தன்
தொடர்பு: 0774405969, 0774441082
(C-3752)

DMI - TECHNOLOGY
Bio System - Technology, Practical Test
• Spot -Test -120 • B1 & B2
• மாணவர்களிற்கு தனித்தனியான செயன்முறை வசதி
• முற்பதிவு அவசியம்.
ஆரம்பம் 10.09.2018 - 2pm
தொடர்பு: 077 401 2800
(C-3728)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532

கருத்தரங்குகள்
ஞாயிறு (9/9) 11.00 - 5.00 மணிவரை
• ICT அலுவலர் - III
• மொழித்திணைக்கள ஒருங்கிணைப்பாளர்
• சுகாதார முகாமைத்துவ உதவியாளர்
• சுங்கப் பரிசோதகர்
D.M.I வெலி சந்தி 0766883394
(C-3754)

பயிற்சியுடன் வேலை வாய்ப்பு
பயிலுனர்கள் - 2018 இல் A/L எடுத்தவர்கள்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்: கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை
• எமது அனைத்து கிளைகளிலும் 6 மாத கால வேலை வாய்ப்பு பயிற்சிகள் உண்டு.
• விரும்பியவர்கள் பயிற்சி முடிவில் வேலையில் சேரலாம்.
• பயிற்சிக்கால ஊக்கத்தொகை -7500/-
16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0768226236 v2vacancies@gmail.com
(5436)


விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
• மானிப்பாய் • யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
V2 TRAVELS
(C-3597)

• வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
➤ மிக குறைந்த கட்டணம்.
➤ 3 - 5 நாட்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்.
➤ இல்லங்களில் வந்து பொறுப்பு ஏற்கப்படும்
UK- 550/=, France- 700/=, Swiss- 750/=, Australia- 850/=
• சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் அதற்கான ஆலோசனைகள் ஒழுங்கு செய்து தரப்படும்.
• சகல நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள் பெற்றுத் தரப்படும்.
• யாழ் – கொழும்பு பஸ் ஆசனப்பதிவுகள் முன்பதிவு செய்து தரப்படும்.
திருமுருகன் கொம் நெற் (Pvt) Ltd
321, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (முட்டாஸ்கடை சந்திக்கு அருகாமையில்)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (555)
04, மத்திய மகா வித்தியாலய வீதி, நெல்லியடி. (அன்னைமுத்துமாரி ஆசனப் பதிவகம்).
கனகபுரம் வீதி, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு
077 755 4528, 070 375 0002

# மரண அறிவித்தல்

## செல்லப்பா வைத்திலிங்கம்

(எஸ்.வைத்தி)



தோற்றம்: 15.05.1930 - மறைவு: 06.09.2018

நீர்வேலி வடக்கு, நீர்வேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா வைத்திலிங்கம் நேற்று (06.09.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, அழகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பெரியதம்பி, நல்லையா ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி, கனகசபாபதி மற்றும் அமிர்தலிங்கம் (ஓய்வுபெற்ற அஞ்சலர் - உப தபால் அலுவலகம், நீர்வேலி), சத்தியலட்சுமி ஆகியோரின் மாமனாரும், இராஜேஸ்வரி, பரமேஸ்வரி (கொழும்பு), புனிதமலர், கோணேஸ்வரன் (கைதடி முதியோர் இல்லம்) ஆகியோரின் சிறிய தந்தையும், பிறேமளா (கொழும்பு), இதயனி (ஆசிரியர், இடைக்காடு மகா வித்தியாலயம்), திவாகரன், தசாதரன் (லண்டன்), திருமதி ரமணன் லக்சனா, குகன் (சீசெல்ஸ்), விக்கினேஸ்வரன் (ஆசிரியர், அத்தியார் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பேரனும், அக்சனா (கொழும்பு) அபிசாத், அபிஷன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (07.09.2018) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சிவியாக்கடவை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 138, மோதிரகேணியடி ஒழுங்கை, நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

தகவல்: குடும்பத்தினர்
076 719 9114,
021 223 1547

(சி-3750)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.09.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.